# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 53 தை 05ஆம் நாள் வியாழக்கிழமை 18 ஜனவரி 2018 வள்ளுவர் ஆண்டு 2049


குட்டி யானைகளிடம் இருந்து

# மைத்திரியைக் காக்க களமிறங்கினார் ரணில்

## ஐ.தே.கவினருக்கு வாய்ப்பூட்டு; மன்னிப்புக் கோரவும் பணிப்பு

கொழும்பு, ஜனவரி 18

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தொடர்பாக சர்ச்சைக்குரிய கருத்துக்கள், அறிக்கைகளை வெளியிடக் கூடாது என்று ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தியுள்ளார். அரச தலைவர் மைத்திரிபாலவை விமர்சித்தமைக்கு அவரிடம் மன்னிப்புக் கோரவேண்டும் என்றும் பணித்துள்ளார்.

ஐக்கியதேசியக்கட்சிஉறுப்பினர்களுக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்குமிடையே ஏற்பட்டுள்ள சொற்போரை முடிவுக்குக் கொண்டுவந்து கூட்டு அரசை 2020ஆம்ஆண்டுவரை கொண்டு செல்லும் நோக்கிலேயே ரணிலால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவைக் கூட்டத்தில் அரச தலைவர் மைத்திரிபால, ஐக்கிய தேசியக் கட்சியின் இளம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தன்னைத் தரக் குறைவாகப் பேசியமை தொடர்பில் கருத்துக்களை முன்வைத்தார். அவர் தனது

>> 06

## தாய்ப்பால் புரைக்கேறி 2 மாதக் குழந்தை சாவு

யாழ்ப்பாணம், ஜன.18

தாய்ப் பால் புரைக்கேறி இரண்டு மாதக் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தெய்வேந்திரம் சஞ்சி என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு குழந்தைக்குத் தாய்

>> 06

## இயற்கைத் தேவைக்காகவே எழுந்து சென்றார் மைத்திரி!

### அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித கூறுகின்றார்

கொழும்பு, ஜன. 18

அமைச்சரவைக் கூட்டத்தில் உரையாற்றிய மைத்திரிபால சிறிசேன இயற்கை தேவையை நிறைவு செய்யவே ஆசனத்திலிருந்து எழுந்து சென்றார். கோபப்பட்டு வெளிநடப்புச் செய்யவில்லை. இயற்கை கடமை எல்லோருக்கும் வரும்.

இவ்வாறு இணை அமைச்சரவை பேச்சாளர்களான ராஜித சேனாரத்ன மற்றும் தயாசிறி ஆகியோர் தெரிவித்தனர்.

தகவல் திணைக்க

>> 24

## காங்கேசன் கடற் பரப்பில் 7 கோடி ரூபா பெறுமதியான தங்கபிஸ்கட்டுக்கள் சிக்கின

### இந்தியாவுக்குப் படகில் கடத்திச் சென்றபோது

யாழ்ப்பாணம், ஜன.18

படகு மூலம் இந்தியாவுக்குக் கடத்தப்படவிருந்த 7 கிலோ நிறைகொண்ட தங்க பிஸ்கட்டுக்கள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. அவற்றின் பெறுமதி 5 கோடி ரூபா என்று கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் தினேஸ் பண்டார தெரிவித்தார்.

கைப்பற்றப்பட்ட தங்கத்துடன், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக யாழ்ப்பாணம் ஆயப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்

>> 06

## மைத்திரியை வீழ்த்த நினைப்பது துரோகம்

### சக எம்.பிக்களையே சாடுகின்றார் ரஞ்சன்

கொழும்பு, ஜன. 18

ஐக்கிய தேசியக் கட்சி வீழ்ச்சியடைந்து நிராகரிக்கப்பட்டிருந்த நிலையில் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவே எம்மை மீட்டெடுத்தார். அந்த நன்றியை ஐக்கிய தேசியக் கட்சியினர் மறந்துவிடக்கூடாது. கடினமான நேரத்தில் உதவிக்கு வந்தவரை அவமதிக்க வேண்டாம்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரான

>> 06

## நாடாளுமன்ற உறுப்பினர்களை பாடசாலைக்கு அனுப்ப வேண்டும்

### அமைச்சர் மனோ விமர்சனம்

கொழும்பு, ஜன. 18

எமது நாடாளுமன்றத்தில் உள்ள 225 உறுப்பினர்களையும் பாடசாலைகளுக்கு அனுப்புங்கள். மீண்டும் பாடசாலைக்குச் சென்றாவது அவர்கள் ஒழுக்கத்தை கற்றுக்கொள்ள முயற்சிக்கட்டும்.

இவ்வாறு விமர்சித்

>> 06



## பிணை முறி மோசடி விசாரணை அறிக்கை சபாநாயகர் கைகளில்

### அடுத்த கட்ட நடவடிக்கைக்காக கட்சித் தலைவர்கள் கூட்டம் கூடவுள்ளது

>> 06

## கூட்டமைப்பின் முகவரே கூல்

### த.தே.பேரவையின் வேட்பாளர் மணிவண்ணன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம் ஜன 18

தேர்தல் ஆணைக்குழுவில் முக்கிய பதவி வகிக்கும் ரட்ணஜீவன் கூல் என்பவர் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முகவராகச் செயற்பட்டு வருகின்றார் என்று தமிழ் தேசிய பேரவையின் யாழ்ப்பாண மாநகர சபை வேட்பாளர் வி.மணிவண்ணன் குற்றஞ்சாட்டினார்.

தமிழ்த் தேசியப் பேரவையின் தேர்தல் அறிக்கை வெளியீட்டு

>> 06

## 2020வரை கூட்டு அரசு பயணிக்கும்

கொழும்பு, ஜன. 18

தற்போதைய கூட்டு அரசு 2020ஆம் ஆண்டு வரை பயணிக்கும். ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சுதந்திரக் கட்சி இணைந்த அரசை யாரும் அசைக்க முடியாது. நல்லாட்சி அரசு தொடர்ந்து பயணிக்கும்.

இவ்வாறு அமைச்சரவை பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக் கட்சியும் இணைந்த

>> 24

## உரிய மதிப்பு தராவிடில் ஆட்சியைமாற்றுவோம்

### எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவிப்பு

திருகோணமலை,ஜன.18

நாம் தற்போது நிதானமாக, நியாயமாக, நேர்மையாக ஒருமித்த நாட்டுக்குள் மதிப்பைப் பெற்றுக் கொள்ள முயற்சிக்கின் றோம். அது நடைபெறாவிட்டால் எமது சம்மதம் இல்லாமல் நடைபெறும் ஆட்சியை மாற்ற வேண்டிய நிலை ஏற்படும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் எச்சரித்துள்ளார்.

திருகோணமலை நகரசபையில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் கீழ் உள்ளூ

>> 06







## கட்சி அலுவலகம் திறப்பு நிகழ்வு

முல்லைத்தீவு.ஜன.17

முல்லைத்தீவு மாவட்டத்தில் தாமரை மொட்டு சின்னத்தில் போட்டியிடும் மகிந்த அணியின் சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் அலுவலகம் நேற்றுத் திறக்கப்பட்டது.

முள்ளியவளை ஹிஜ்ரா புரத்தில் நடைபெற்ற கட்சி அலுவலக திறப்பு நிகழ்வில் சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் வடமாகாண இணைப்பாளரும் வடமத்திய மாகாண முன்னால் முதலமைச்சரும் எஸ்.எம். றஞ்சித அலுவலகத்தைத் திறந்தார்.

இதில் முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் உள்ளிட்ட வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.(ற.ரி4,ரி3)

## மக்களின் நிம்மதியே எமது நோக்கமாகும்

### டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

கிளிநொச்சி.ஜன.18

எமது மக்கள் தமது சொந்த நிலங்களில் சுயமரியாதையுடனும் கௌரவத்துடனும் நிம்மதியாகவும் சந்தோசமாகவும் வாழவேண்டும் என்பதே எமது நோக்கமாகும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கிளிநொச்சி உதயநகரில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

அவர் தெரிவித்ததாவது;

எமது மக்கள் யுத்தம் நிறைவடைந்து 8 ஆண்டுகள் நிறைவுபெற்றுள்ளபோதிலும் தமது சொந்த வாழிடங்களில் மீள் குடியேறாமல் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

நல்லாட்சியைக் கொண்டு வந்தவர்கள் நாமே என்றும் மக்களின் பல பிரச்சினைகளுக்கு நாம் உரிய தீர்வுகளைப் பெற்றுத் தருவோம் என்றும் கூறியே போலித்தேசியவாதம் பேசியவர்கள் இன்று மௌனித்து இருக்கின்றார்கள் - என்றார்.

(ற.ரி4)



## மதுபானம் தொடர்பான அரசிதழ்

# அமைச்சரவைக்கு வராததால் மைத்திரிபால அறியவில்லை

### லக்ஸ்மன் யாப்பா விளக்கம்

கொழும்பு, ஜன.18

மதுபானம் தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு அமைச்சரவையில் அனுமதியளிக்கப்பட்டது அல்ல. அதனால் தான் அது தொடர்பில் அரச தலைவர் அறிந்திருக்கவில்லை. இவ்வாறு அரச தொழில் முயற்சிகள் இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

சிறி லங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மதுபான சாலைகளின் நேரம் மற்றும் அதில் பெண்கள் ஈடுபடுவது தொடர்பாக நிதி அமைச்சால் அண்மையில் வர்த்தமானி அறிவிப்பு ஒன்று வெளியிடப்பட்டது. இந்த அரசிதழ் அறிவிப்பு தொடர்பாக நாட்டுக்குள் அனைத்துத் தரப்பினராலும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதுடன் அரசுக்கு எதிராகவும் பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவும் இந்த அரசிதழ் அறிவிப்பைக் காட்டி அரச தலைவரையும். அரசாங்கத்தையும் விமர்சித்து வந்தார். இந்த அரசிதழ் அறிவிப்பு வெளிவந்ததன் பின்னர்தான் இது தொடர்பில் அரச தலைவருக்குத் தெரியவந்தது. அதனால்தான் அரச தலைவர் அதை நிராகரிக்குமாறு அறிவித்திருந்தார்.

இந்த அரசிதழ் அறிவிப்பு நிதி அமைச்சரின் தீர்மானத்தின் பிரகாரம் நிதி அமைச்சால் வெளியிடப்பட்டதாகும். இது அமைச்சரவையில் முன்வைக்கப்படவோ அல்லது அமைச்சரவை அதற்கு அனுமதிக்கவோ இல்லை. அமைச்சரின் தீர்மானத்தை அமைச்சரவைக்கு மாற்றியமைக்கலாம். அதன் பிரகாரமே கடந்த அமைச்சரவைக் கூட்டத்தின் போது இந்த அரசிதழ் அறிவிப்பை நிராகரிக்குமாறு தெரிவிக்கப்பட்டபோது அமைச்சர்கள் யாரும் அதற்கு மறுப்புத் தெரிவிக்கவில்லை. மதுபானசாலைகளில் பெண்கள் ஈடுபடுவது தொடர்பில் சட்டத்தில் அனுமதி வழங்குவது எமது நாட்டின் கலாசாரத்துக்குப் பாதிப்பாகும். நாட்டில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு என்று கலாசாரம் இருக்கின்றது. இந்த கலாசாரத்தை பாதுகாப்பது அரசின் கடமை. மது தொடர்பில் அரச தலைவரின் கொள்கைக்கு இந்த அரசிதழ் அறிவிப்பு முரணாகும். அதை வெளியிடுவதற்கு முன்னர் இது தொடர்பாக அரச தலைவருடன் கலந்துரையாடியிருக்கலாம்.என்றார். (ற-61)

## இழந்தவற்றை மீட்க போராட வேண்டும்

### அமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி தெரிவிப்பு

மட்டக்களப்பு.ஜன.18

இளைய சந்ததியினர் கல்வியியலாளர்களாக மிளிர வேண்டும். நாம் இழந்த காணிகளை மீட்டெடுக்க வேண்டும் இவற்றையெல்லாம் பெற்றுக்கொள்ள நாம் தொடர்ந்து போராடவேண்டும். என கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.

கோறளைப்பற்று பிரதேச சபைக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாக ஐக்கிய தேசிய முன்னணியில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

உங்களது பிள்ளைகள் சிறந்த கல்வியியலாளர்களாக மிளர. நாங்கள் இழந்து நிற்கின்ற எல்லைக் காணிகளை, எங்களிடத்தில் இருந்து பறிபட்ட நிலங்களை நாங்கள் மீட்டுக் கொள்வதற்கு எனது உயிர் இருக்கும் வரை எனது போராட்டம் தொடரும்.பதினேழு வருடமாக ரவூப் ஹக்கீம் செய்து கொண்ட பிழை, அநியாயம், காட்டிக் கொடுப்புக்கள், இவற்றையெல்லாம் தைரியமாக ஏன் செய்தார் என்று கட்சியில் யாரும் கேட்டால் துரோகிகளாக வெளியேற்றிய வரலாறுகள் அதிகம் உண்டு-என்றார். (ற.ரி4)

## தேர்தல் முறை தெரியாமலே பரப்புரை மேற்கொள்கின்றனர்

### இம்ரான் மகரூப் எம்.பி தெரிவிப்பு

திருகோணமலை.ஜன.18

தேர்தல் முறை பற்றி தெரியாமலே சிறுபான்மைக் கட்சியினர் பரப்புரைகளை முன்னெடுக்கின்றார்கள். இவர்கள் சமூகத்தின் உரிமைகளை எவ்வாறு பாதுகாப்பார்கள் எனத் தெரியவில்லை. இவ்வாறு ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

மூதூரில் அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்ததார்.

அவர் தெரிவித்ததாவது;

வட்டார முறையில் நடைபெற இருக்கும் தேர்தல் முறை கொண்டுவரப்பட்ட நோக்கம் தெரியாமல் சிறுபான்மை கட்சிகள் இனவாத ரீதியிலான பரப்புரைகளை முன்னெடுக்கிறார்கள். கிராமங்க ளில் வாழும் சாதாரண பொதுமக்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் இந்தத் தேர்தலால் எவ்வாறு உரிமைகளைப் பெற்றுத்தர முடியும் எனப் புரியவில்லை - என்றார்.

(ற.ரி4,40)



## ஏமாறுபவர்கள் இருக்கும் வரை ஏமாற்றுபவர்களும் இருப்பார்கள்

### மஸ்தான் எம்.பி தெரிவிப்பு

வவுனியா.ஜன.18

ஏமாறுபவர்கள் இருக்கும் வரை ஏமாற்றுபவர்களும் இருப்பார்கள். மக்கள் நிதானமாக வாக்களித்து தமது எதிர்காலத்தை விருத்தி செய்து செழிப்பாக்கிக் கொள்ள வேண்டும். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் மஸ்தான் தெரிவித்தார்.



வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளரை ஆதரித்து அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

தேர்தல் காலங்களில் மாத்திரமே உங்களைத் தேடி வருபவர்களை நிராகரித்து சேவை செய்யக்கூடியவர்களை பிரதிநிதிகளாக தெரிவுசெய்ய வேண்டும்.

பசப்பு வார்த்தைகளுக்கு ஏமாறாமல் மிகவும் நிதானமாக சிந்தித்து வாக்குகளைப் பிரயோகிப்பதற்குத் தயாராகவேண்டும். இதன் போது பூவரசங்குளம் பகுதிக்கான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் அலுவலகமும் திறக்கப்பட்டது. (ற.ரி4)

## கிராம அபிவிருத்தியை முன்வைக்க வேண்டும்

யாழ்ப்பாணம்.ஜன.17

அரசியல் தீர்வு தருவோம், ஐ.நாவுக்கு செல்வோம், என்று நாம் சொல்ல மாட்டோம். இது உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஆகவே கிராம மட்டத்தில் இருந்து எமது அபிவிருத்தி எவ்வாறு அமையும் என்பதையே நாம் முன்வைக்க வேண்டும். என்று தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் வழிநடத்துநர் தோழர் எ.வரதராஜ பெருமாள் தெரிவித்தார்.

தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் தேர்தல் அறிக்கை வெளியிடும் நிகழ்வு யாழ்ப்பாணம் வை.எம்.சி.எ மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது.

கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களில் ஊழல்கள் தான் நிறைந்து காணப்பட்டன. ஆனால் இந்த முறை நடைபெற உள்ள தேர்தலில் நாம் மக்களுக்கு கொடுக்கும் வாக்குறுதிகள் அனைத்தும் மக்களின் தேவை அறிந்த விடயங்களே.

உள்ளூராட்சித் தேர்தலையும் இடைக்கால அறிக்கையும் தொடர்பு படுத்த பேசிக்கொண்டிருக்கின்றார்கள். இது மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக தயாரிக்கப்பட்ட கொள்கை இல்லை. கூட்டரசு தமது ஆட்சிக் காலத்தில் எது செய்ய வேண்டுமோ அதைத்தான் இடைக்கால அறிக்கையாக வெளியிட்டுள்ளது. மக்களின் தேவைகள் பற்றி அதில் குறிப்பிடப் படவில்லை. இதனை மக்கள் முதலில் புரிந்துகொள்ள வேண்டும் - என்றார்.

(ற.ரி4.ரி).



## அரச தலைவரைச் சந்தித்தனர் அரச கூட்டுத்தாபன பிரதிநிதிகள்

கொழும்பு.ஜன.18

இலங்கை வந்திருக்கும் ரஷ்ய ரொசடம் அரச கூட்டுத்தாபனத்தின் பிரதிநிதிகள் நேற்று அரச தலைவர் உத்தியோகபூர்வ இல்லத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை சந்தித்தனர்.

ரொசடம் நிறுவனத்தின் பிரதிப்பணிப்பாளர் நாயகம் நிகொலாய் ஸ்பாஸ்கி உள்ளிட்ட 5 பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

மின்சக்தி, உயர்கல்வி மற்றும் தொழில்நுட்ப ஆய்வு அமைச்சுகளுடன் இணைந்து இதற்காக நீண்டகால, குறுங்கால நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரிப்பது குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் நீண்ட காலமாக இருந்துவரும் உறவுகளை நினைவுகூர்ந்த அரச தலைவர், ரஷ்யா இலங்கைக்கு தொடர்ச்சியாக வழங்கிவரும் உதவிகளைப் பாராட்டினார்.

அண்மையில் தேயிலை ஏற்றுமதி தொடர்பில் எழுந்த பிரச்சினையை உடனடியாக தீர்த்து இலங்கை நாட்டுக்கும் மக்களுக்கும் வழங்கிய இதய பூர்வமான ஒத்துழைப்பு குறித்து ரஷ்ய அரச தலைவர் விளாடிமிர் புட்டினுக்கு அரச தலைவர் தனது நன்றியைத் தெரிவித்தார்.

இலங்கையின் மின்சக்தி, கைத்தொழில், விவசாயம் போன்ற பல துறைகளில் இரு நாடுகளுக்கிடையில் கூட்டுறவை மேம்படுத்தும் நோக்குடன் இவர்கள் இலங்கை வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் யூரி மெடரி ஆகியோரும் இதன்போது பிரசன்னமாகியிருந்தனர். (ரி2)

## படையினரின் ஏற்பாட்டில் மருத்துவ முகாம்

சாவகச்சேரி, ஜன.18

தென்மராட்சி பிரதேச மக்களுக்கான இலவச சித்த மருத்துவ முகாம் நேற்று சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராச்சியின் பணிப்புரையின் பேரில் 523 படையணியின் கட்டளைத் தளபதி ஜெனரல் வன்னியாராச்சியின் வழிநடத்தலில் மருத்துவமுகாம் நடைபெற்றது. கொழும்பு ராஜகிரிய சுதேச மருத்துவ அலகும் கைதடி சித்த ஆயுர்வேத மருத்துவ அலகும் இணைந்து நடத்திய மருத்துவ முகாமில் பிரதேசத்தைச் சேர்ந்த பெருமளவு மக்கள் கலந்து கொண்டு சிகிச்சை பெற்றனர்.

இரைப்பை, தோல்நோய், மூட்டுவாதம், இருதய நோய், சுவாசத் தொகுதி, முதுகுவலி, நீரிழிவு உள்ளிட்ட பல்வேறு நோயாளர்களுக்கு சிகிச்சைகள் வழங்கப்பட்டு மருந்துகளும் வழங்கப்பட்டன. (ரி2,9)



## தீ விபத்தால் பாதிக்கப்பட்ட நால்வருக்கு நிதி உதவி

மட்டக்களப்பு.ஜன.18

வாழைச்சேனை பிரதேச செயலகப் பிரிவில் தற்செயலாக ஏற்பட்ட தீயால் பாதிக்கப்பட்டு வாழ்விடங்களை இழந்த ஏழு பயனாளிகளுக்கும் சுயதொழில் முயற்சிக்காக ஊக்குவிப்புத் தொகைக்கான வங்கிப் புத்தகங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

உதவிப்பிரதேச செயலாளர் திருமதி.பிருந்தன் தலைமையில், கிழக்கு மாகாண சமூகசேவைத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்த உதவித்தொகை வழங்கி வைக்கப்பட்டது.

நிகழ்வில் நான்கு பயனாளிகளுக்கு இரண்டு லட்சத்து நாற்பதனாயிரம் ரூபாவுக்கான வங்கிப் புத்தகங்கள் கையளிக்கப்பட்டன.

கறுவாக்கேணி சமூகபராமரிப்பு நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வில் சமூகசேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் க.ஜெகதீஸ்வரன், மத்தியரசின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.கஜெந்தி ஆகியோர் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான வங்கிப் புத்தகங்களை கையளித்தனர். (ரி2)

பிணை முறி மோசடி

# குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர்

## மைத்திரிபால உறுதி

கொழும்பு, ஜன.18

மத்திய வங்கி பிணைமுறி ஊழல் விவகாரத்தில் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கைக்கு ஏற்ப உரிய நபர்கள் தொடர்பாக சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சட்ட மா அதிபர் மற்றும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு உத்தரவிட்டுள்ளார்.

சிறி லங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நேற்று எம்பிலிப்பிட்டியவில் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

ஊழல்வாதிகள் தப்பித்து வாழும் எந்தவொரு சூழலையும் உருவாக்கிக்கொடுக்க மாட்டேன். மத்திய வங்கியில் மிகப் பெரிய ஊழல் இடம்பெற்றுள்ளது என தெரிவிக்கப்பட்டவுடன் அரசாக நாம் என்ன செய்ய வேண்டுமோ அதனை முன்னெடுத்துள்ளோம். கோப் குழுவின் அறிக்கை மூலமாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் குறித்து கவனம் செலுத்திய பின்னர் எனது தலையீட்டில் அரச தலைவர் ஆணைக்குழு அமைத்து விசாரணைகளை நடத்தினேன். இந்த விசாரணைகளில் எந்த முரண்பாடுகளும் இல்லை. பொய்யான காரணிகளும் சுட்டிக்காட்டப்படவில்லை. இப்போது அறிக்கை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் அறிக்கையை வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விரைவில் அனைவரும் இந்த அறிக்கையைத் தெளிவாக தெரிந்துகொள்ள முடியும்.

பிணைமுறி மோசடி சம்பந்தமாக விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கைக்கு அமைவாக சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு நான் சட்ட மா அதிபர் மற்றும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு தெரிவித்துள்ளேன்.

உடனடியாக அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். குற்றவாளிகள் எவரும் தப்பிக்கவோ அல்லது சட்டத்தின் மூலமாகவே அவர்கள் சுதந்தரமாக செயற்படும் சூழல் ஒன்று எனது ஆட்சியில் ஒருபோதும் இடம்பெறுவதை நான் அனுமதிக்கப்போவதில்லை. மக்களின் எதிர்பார்ப்புகள் என்னவோ அதனையே நான் நிறைவேற்றும் நோக்கத்தில் செயற்பட்டு வருகின்றேன். குற்றவாளிகள் நிச்சயம் தண்டிக்கப்படுவர். என்றார். (ந-61)

## கிராம அலுவலர் செயலகம் திறப்பு

சாவகச்சேரி, ஜன.18

அல்லாரை கிராம அலுவலர் பிரிவுக்கென அமைக்கப்பட்ட கிராம செயலகம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டு அலுவலகம் பாவனைக்கு விடப்பட்டது.

இதில், கிராம அலுவலர், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், குடும்ப நல அலுவலர், ஆகியோருக்கு தனித்தனி அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கொடிகாமம், மீசாலை ஆகிய இரு பிரதேசங்களுக்குரிய செயலகங்களும் அடுத்த வார இறுதிக்குள் பாவனைக்கு விடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

பொது மக்கள் இனி இந்த அலுவலகங்களில் தமது சேவைகளைப் பெற்றுக் கொள்ளலாம் எனக் கிராம அலுவலர் தெரிவித்தார். (ரி2.9)

## 195 பேருக்கு நியமன கடிதம் வழங்கி வைப்பு

கொழும்பு, ஜன.18

அலுவலர்களை நிலைபடுத்தும் உத்தியோக பூர்வ கடிதம் வழங்கும் நிகழ்வு கல்வி அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் மூன்று திறந்த போட்டிப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டு ஒரு வருடம் பயிற்சியை பூர்த்தி செய்த 195 பேருக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன் கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஹெட்டியாராச்சி உட்பட உதவி செயலாளர்கள், கல்வி அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ற)



## பிரதேச செயலக அலுவலர்கள் பணிப்புறக்கணிப்பு

மாத்தறை.ஜன.18

மாத்தறை மாவட்டத்துக்குட்பட்ட பிரதேச செயாலாளர் அலுவலகங்களில் பணியாற்றும் ஊழியர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

மாத்தறை அக்குரஸ்ஸ ஹேனகம பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வந்த வீதி அபிவிருத்திப் பணிகளை பார்வையிடச் சென்ற பிரதேச செயலர் உள்ளிட்ட குழுவினர் மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் மேற்கொண்டுள்ளதுடன், அவர் பயணித்த கார் மீதும் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

தாக்குதலுக்கு இலக்கான பிரதேச செயலர் மற்றும் அவருடன் சென்றிருந்தவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் குறித்த சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து மாத்தறை மாவட்டத்துக்குட்பட்ட அனைத்து பிரதேச செயலக பணியாளர்களும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். (ரி2)

## நாட்டிய யாகம் நிகழ்வு

மட்டக்களப்பு.ஜன.18

நிருத்திய ஷேத்திரா நாட்டியப்பள்ளி மாணவர்களின் நாட்டிய யாகம் நிகழ்வு நேற்று முன்தினம் கல்முனை மரியா தெரேசா கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வின்போது, ஸ்ரீமதி.மாதுமையாள் வரதராஜனின் கலைப்பணியைப் பாராட்டி பரதசூடாமணி திருமதி சுபித்ரா கிருபாகரன் பரத கலாலய மாணவர்களால் நர்த்தன வித்தகி எனும் விருது வழங்கப்பட்டது.

நிகழ்வில், சுவாமி விபுலானந்தா இசைநடனக் கல்லூரியின் முன்னாள் அதிபர் கலாபூசணம் ஸ்ரீமதி.கமலாதேவி ஞானதாஸ், கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி தேசிய பாடசாலையின் முன்னாள் அதிபர் அருட்சகோதரர் எம்.ஸ்ரீபன் மத்தியு, தற்போதைய முதல்வர் அருட்சகோதரர் எஸ்.சந்தியாகு, ஸ்ரீராமகிருஸ்ண கல்லூரி அதிபர் எம்.கிருபைராஜா, அருட்சகோதரி எம்.லூக்ரீஸ் மற்றும் அணிசேர் கலைஞர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ரி2)



# எம்மைச் சூழ இராணுவம் அச்சத்துடன் வாழ்கின்றோம்

## கேப்பாபிலவுக் காணிகளில் குடியமர்ந்த பெண்கள் கவலை

முல்லைத்தீவு, ஜன.18

எமக்கு குடிதண்ணீர் வசதியோ மின்சார வசதியோ இல்லை. மலசலகூட வசதிகளும் செய்துதரப்படவில்லை. எம்மைச் சுற்றியும் இராணுவம் இருக்கின்றது. குடிதண்ணீர் எடுப்பதுக்கு இராணுவ நிலைகளைக் கடந்தே செல்லவேண்டும். அச்சமாக இருக்கின்றது. அதிகாரிகள் எவரும் எம்மை வந்து பார்க்கவில்லை இவ்வாறு தெரிவித்தனர் கேப்பாப்பிலவில் விடுவிக்கப்பட்ட காணிகளில் மீளக்குடியமர்ந்த மக்கள்.

இதுதொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

கேப்பாப்பிலவில் விடுவிக்கப்பட்ட111 ஏக்கர்காணிகளில் நாங்கள் மீளக்குடியமர்ந்தோம். எமதுவீடுகளைசுத்தம் செய்து,கழுவிவீடுகளில்இருக்கிறோம். நாங்கள்குடியமர்ந்து15நாள்களாகியும் அதிகாரிகள் வந்து எம்மைப் பார்க்கவில்லை. எப்படி இருக்கின்றோம், என்னதேவை என்று அறிந்துகொள்ளவுமில்லை.


இங்கு தண்ணீர் வசதியின்றி நாம்துன்பப்படுகின்றோம். கிணறுகள்துப்புரவு செய்யப்படவில்லை.மலசலகூடங்கள் யாவும் முடப்பட்டநிலையிலே உள்ளன. ஐந்துவருடங்கள் சென்றாலும் எமது காணிகளைப் பண்படுத்த முடியாதநிலை காணப்படுகின்றது. காணிகள் முழுவதும் கட்டட இடிபாடுகளும்,சல்லிக்கற்களுமாகவே காணப்படுகின்றன. மின்வசதியுமில்லை.

எமக்கு முன்பக்கமும், பின் பக்கமும் இராணுவத்தினர். இருக்கின்றனர். வெளிச்சமில்லாததால் மிகவும்அச்சமாக இருக்கிறது.

குறிப்பாக உறவுகள் அயலவர்கள்கூடியிருந்தமையால் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் அச்சமின்றி வாழ்ந்தன. ஆனால் இப்போதுஅயலவர்களின்காணிகள் விடுவிக்கப்படாமையால்அவர்கள் கடும் அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றனர். நாங்கள் எமது உறவுகளோடு318நாள்களாக எமதுபூர்வீகமண்ணைவிடுவிக்கப் போராடினோம்.

எனினும், எமது உறவுகளின் காணிகள் விடுவிக்கப்படவில்லை. அவர்கள் தொடர்ந்தும் சாலையில் இருந்து போராடி வருகின்றனர். கட்டம் கட்டமாககாணிகளை விடுவிப்பதாகக்கூறப்பட்டுள்ளது. 111ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டதுபோன்று எமது உறவுகளின்காணிகளும் விடுவிக்கப்படவேண்டும். அவர்கள் வெகு விரைவில் எம்முடன் இணையவேண்டும் என்றனர். (ய-4.500)

## உருளைக்கிழங்கு இறக்குமதி வரியை அதிகரிக்கக் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஜன.18

அரசு உருளைக்கிழங்கு இறக்குமதி வரியை அதிகரிப்பதன் மூலம் குடாநாட்டு உருளைக்கிழங்குச் செய்கையாளர்கள் அதிக நன்மையடைவார்கள்.

அடுத்தமாதம் உருளைக்கிழங்கு அறுவடைக் காலத்தில் இந்த இறக்குமதி வரியை அதிகரிக்கவேண்டும் என்று யாழ்ப்பாணம் மாவட்ட உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்கள் விற்பனை கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் இ.தெய்வேந்திரம் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது உருளைக்கிழங்குப் பயிர்கள் ஓரளவு நல்ல நிலையில் உள்ளன. பெரும்பாலும் அடுத்த மாதத்தில் அறுவடை ஆரம்பிக்கப்படலாம். அறுவடைக் காலத்தில் செய்கையாளர்கள் உருளைக்கிழங்கை சந்தைப்படுத்துவதற்கு வசதியாக கடந்த வரு டத்தைப் போன்று இறக்குமதி வரியை அதிகரிக்க வேண்டும். இது தொடர்பான கோரிக்கை மனு ஒன்றையும் அரசுக்கு அனுப்பி வைக்க உள்ளோம் என்றார். (ய-17)

### தனியார் தொலைக்காட்சி நிறுவனத்தின்

## செய்திப் பணிப்பாளரை தாக்கிய முதியவரின் விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 17

யாழ்ப்பாண தனியார் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையத்துக்குள் கத்தி, பொல்லுடன் அத்துமீறி நுழைந்து அந்த நிறுவனத்தின் செய்திப் பணிப்பாளர் தயா மாஸ்டரைத் தாக்கிய வயோதிபர் தெல்லிப்பளை மனநோய் மருத்யதுவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என யாழ்ப்பாணம் சிறைச்சாலை அத்தியட்சகரால் நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டது.

அதனால் வயோதிபரின் விளக்கமறியலை எதிர்வரும் ஜனவரி 30ஆம் திகதிவரை நீடித்து யாழ்ப்பாணம் நீதிவான் மன்று நேற்று உத்தரவிட்டது.

யாழ்ப்பாணம் மருத்துவமனை வீதியில் அமைந்துள்ள டான் தொலைக்காட்சி ஒளிபரப்புக் கலையகத்துக்கு கடந்த 9ஆம் திகதி மாலை வயோதிபர் ஒருவர் அத்துமீறி நுழைந்தார். அவரது கைகளில் வெட்டுக்கத்தி மற்றும் பொல்லு என்பன இருந்தன. கலையகத்தின் வரவேற்பு அறைக்குள் நுழைந்த அவர் அங்கு பணியிலிருந்த செய்திப் பணிப்பாளர் தயா மாஸ்டர் என அழைக்கப்படும் வே.தயாநிதியைத் தாக்கினார்.

அடாவடியில் ஈடுபட்ட முதியவரைத் துரத்திப் பிடித்த டான் நிறுவனப் பணியாளர்கள், அவரை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். முதியவர், யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றின் உத்தரவில் நேற்றுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

முதியவர் மனநிலை பாதிக்கப்பட்டவர் என பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்தது. அதனையடுத்து சிறைச்சாலை அத்தியட்சகரின் பணிப்பில் அவர் தெல்லிப்பழை மனநோய் மருத்துவமனையில் கடந்த 10ஆம் திகதி சேர்க்கப்பட்டார்.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் வழக்கு விசாரணைக்கு வந்தது. முதியவர் தெல்லிப்பழை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதால் அவரை மன்றில் முற்படுத்த முடியவில்லை என யாழ்ப்பாண சிறைச்சாலை அத்தியட்சகர் மன்றுக்கு அறிக்கை முன்வைத்தார். இதனையடுத்து சந்தேகநபரின் விளக்கமறியலை நீடித்து உத்தரவிட்டது நீதிமன்று. (எ-37)

## மருத்துவர் சண்முகலிங்கத்துக்கு மாற்றுவலுவுடையோர் இரங்கல்

யாழ்ப்பாணம், ஜன.18

திருநெல்வேலியில் இயங்கி வரும் மாற்றுவலுவுடையோர் மறுவாழ்வுச் சங்கத்தின் முன்னாள் தலைவரும், மருத்துவருமான கலாநிதி சோமசேகரம் சண்முகலிங்கம் கடந்த 9ஆம் திகதி காலமானார்.

இவரது மறைவுக்கு மாற்றுவலுவுடையோர் மற்றும் சங்கத்தின் நலன்விரும்பிகள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இவர் 1990 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் சங்கத்தின் தலைவராக இருந்தவர். மாற்றுவலுடையவர்களுக்கு 'தனது இல்லத்தை அன்பளிப்பாக வழங்கியதுடன், தனது குடும்பத்தாருடன் இணைந்து மாற்றுவலுவுடையவர்களுக்காக பல நல்ல பணிகளை ஆற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ய)

## அதிக லாபமீட்டும் கூ.சங்க முகாமையாளர்களுக்கு சிறப்புப் பரிசுத் திட்டம்

யாழ்ப்பாணம், ஜன.18

கூட்டுறவுச் சங்கக்கிளைகளில் மாதாந்தம் அதிக வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் முகாமையாளர்களுக்கு சிறப்புப் பரிசுத் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படும். இந்த பரிசுத் திட்டத்தின் மூலம் பணியாளர்கள் அதிக நன்மையடைவார்கள் என்று சங்கத்தின் தலைவர் என்.எஸ்.சத்தியதாசன் தெரிவித்தார்.

சங்கத்தின் கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்ற தைத்திருநாள் நிகழ்வு மற்றும் கூட்டுறவுக் கொடி ஏற்றும் நிகழ்வுக்கு தலைமை தாங்கி உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தைபிறந்தால் வழிபிறக்கும். தமிழர்களின் திருநாளாம் இந்த தைத்திருநாளில் நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து எமது கூட்டுறவை முன்னேற்ற வேண்டும். சகல பணியாளர்களும் தமதுகிளைநிலையங்களில் வியாபார நடவடிக்கையை அதிகரிக்க வேண்டும்.

கூடுதலான வியாபாரத்தை செய்யும் பணியாளர்களுக்கு சிறப்பு ஊக்குவிப்புத் திட்டங்களும் அறிமுகப்படுத்தப்படும்.

அத்துடன் கிளை நிலையங்களும் மக்களைக் கவரும் வகையில் தரமுயர்த்தப்படும் என்றார்.

நிகழ்வில் சங்கத்தின் இயக்குனர் எஸ்.லோகசிவம், பொது முகாமையாளர் கி.ஜெகநாதன், சங்கப் பணியாளர்கள், கூட்டுறவாளர்கள் கலந்துகொண்டனர். (ய-17)

## மெய்வன்மை போட்டிகள்

சாவகச்சேரி, ஜன.18

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை பி.ப.1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் ந.ஜெயகுமாரன் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்விவலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி முகாமைத்தவம்) நா.கந்த தாசனும், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி தொழிலதிபர் வே.சிவநீதனும், மதிப்புறு விருந்தினராக சமூக சேவையாளர் மருத்துவர் சி.மோகனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

********

பளை தர்மக்கேணி அ.த.க.பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை பி.ப.1.30 மணிக்கு பாடசாலை மைதான்த்தில் நடைபெறும்.

அதிபர்வே.செல்வகுமார் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக கிளிநொச்சி கல்விவலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்) ப.அருந்த வச்செல்வமும், சிறப்புவிருந்தினராக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தொழிலதிபர் சமூகத் திலகம் அ.கிருபாகரனும், மதிப்புறு விருந்தினராக வலய உடற்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ஆபவாணந்தனும் கலந்து கொள்ளவுள்ளனர். (ய-9)

## அரச அலுவலகங்களில் கழிவுசேகரிக்கும் பெட்டி

யாழ்ப்பாணம், ஜன.18

யாழ்.மாநகராட்சி மன்றம் திண்மக்கழிவுகள் அற்றும் திட்டத்தின் கீழ் அரச அலுவலகங்களிலும்திண்மக்கழிவுகளை சேகரிப்பதுக்கு வசதியாக கழிவுகள் சேகரிப்பு பெட்டிகள் வைக்கப்பட்டு வருகின்றன.

இதற்கு முன்னோடியாக யாழ்.பிரதேச செயலகத்தில் இந்த திண்மக்கழிவுகளை சேகரிக்கும் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. இதில் உக்கும், உக்காத, கண்ணாடிக் கழிவுகளை சேகரிப்பதுக்கு ஏற்றவாறு பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. மாநகரப்பகுதியில் கூடுதலான கழிவு சேகரிப்புப் பெட்டிகள் தயாரிக்கப்பட்டு, முக்கியமான இடங்களில் வைக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பெட்டிகளில் தேங்கும் கழிவுகள் யாவும் தினமும் அகற்றப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ய-17)

## கட்டாக்காலி கால்நடைகளால் கோப்பாயில் வயல்கள் அழிவு

யாழ்ப்பாணம், ஜன.18

நீர்வேலி கோப்பாய் வயல்களில் கட்டாக்காலி மாடுகள் நெற்பயிர்களை மேய்ந்து வருவதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பகுதி தரவை வயல்களில் சிலர் மாடுகளை மேச்சலுக்காக விட்டுச் செல்கின்றனர். அவ்வாறு விடப்படும் கட்டாக்காலி மாடுகள் வயல்களை மேய்ந்து அழித்து விட்டுச் செல்கின்றன. இது தொடர்பாக விவசாய சம்மேளனங்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று விவசாயிகள் விசனம் தெரிவித்தனர்.

வயல்களில் நெற்பயிர்களை மேய்ந்து செல்லும் கால்நடைகளைப் பிடித்து, உரியவர்களிடம் தண்டப்பணம் அறவிடுவதுக்கு சம்மேளனங்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ய-17)

## சைவப்புலவர் சங்க செயற்குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன.18

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் சிறப்பு செயற்குழுக் கூட்டம் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் சங்கத்தலைவர்சைவப்புலவர்மு.திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ளது.

கூட்டத்தில் 2018ஆம் ஆண்டுக்கான இளஞ்சைவப்புலவர், சைவப்புலவர் பரீட்சை பற்றிய விடயங்கள் மற்றும் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புக்களை நடத்துதல் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளன. இதன்காரணமாக அனைத்து செயற்குழு உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் சைவப்புலவர் எஸ்.ரி.குமரன் அறிவித்துள்ளார். (ய-4)

# பருத்தித்துறை நகர எல்லைக்குள் வடிகாலினுள் கழிவு வீசுவோருக்கு இனி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## நகர சபைச் செயலாளர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.18

பருத்தித்துறை நகர சபைக்கு உரித்தான மழைநீர் வடிகாலினுள் பொதுமக்கள் சட்டத்துக்கு முரணான வகையில் வீட்டு கழிவு நீரினை வெளியேற்றுவதால் ஏனைய பொதுமக்களும், பாதசாரிகளும், பாடசாலை மாணவர்களும் மிகுந்த அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர். அதனால் இனிமேல் இதற்கு கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. அதற்கேற்ற முறையில் பொதுமக்கள் செயற்படுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

யாழ்ப்பாண மாவட்டச் செயலரின் 'நிலத்தடி நீரினைப் பாதுகாத்தல்' சம்பந்தமான கலந்துரையாடலின்போது, வீட்டுக் கழிவு நீரை கடல் நீருடன் நேரடியாகச் சேர்ப்பது தண்டனைக்குரிய குற்றமென்று கடலோர பாதுகாப்புத் திணைக்களத்தால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அடிப்படையில் அதனை நிறுத்துவதற்கு அந்தந்தப் பிரதேச, நகரசபை, மாநகர சபைகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டது. அதற்கு அமைவாக எமது சபையினரால் துண்டுப் பிரசுரங்கள் மூலமும் ஒலிபெருக்கி மூலமும் 2017 ஆம் ஆண்டின் மக்கள் பங்கேற்பு நிகழ்ச்சித் திட்டக் கலந்துரையாடல்கள் மூலமும் தெரியப்படுத்தியிருந்தும் தொடர்ந்தும் வீட்டுக் கழிவு நீர் வடிகாலினுள் சேர்க்கப்பட்டு வருகின்றமை வேதனைக்குரிய விடயம்.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் அறிவுறுத்தல், சட்டங்களுக்கமைவாக வீட்டுக் கழிவு நீரை நிலக்கீழ் நீர்த்தொட்டிகளில் சேகரித்து அந்த நீரினை நிலத்தினுள் சேர்ப்பதன் மூலமாக நிலத்தடி நீரைப் பாதுகாக்க முடியும் என்றும், கட்டட அனுமதி வழங்கும் சந்தர்ப்பங்களில் இந்த விடயத்தைக் கருத்தில் கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டது. அதற்கிணங்க புதிய கட்டடங்கள் அமைக்கும்போது அந்த விதி முறைகள் இறுக்கமாகப் பின்பற்றப்பட்டு வருகின்றன. ஆனாலும் முன்னர் அமைக்கப்பட்டுள்ள பெரும்பாலான வீடுகளில் நிலக்கீழ் நீர் சேமிப்பு தொட்டிகள் அமைக்கப்படாமையாலும் பொதுமக்கள் அதில் கூடிய கவனம் செலுத்தாமையினாலும் தொடர்ந்தும் மழை நீர் வடிகாலினுள் வீட்டுக் கழிவுநீரினை வெளியேற்றுவதனால் நுளம்புப் பெருக்கம், துர்நாற்றம் என்பவற்றை ஏற்படுத்தி வருகின்றது.

ஏற்கனவே பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் அமைக்கப் பெற்ற மழை நீர் வடிகாலின் நீர்மட்டத்தினைவிட கடல்நீர் மட்டம் உயர்ந்து செல்வதனால் மழைநீர் கடலுக்குச் செல்ல முடியாத நிலை காணப்படுகிறது. தற்போது வீட்டுக் கழிவு நீரும் ஏனைய காலங்களில் இந்த வாய்க்காலில் சேர்வதால் அவை கடலுக்குள் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. கடல்நீர் மட்ட உயர்வு ஏற்படும்போது கடல் அலைகளினால் அடிக்கப்பட்டு உருவாகும் மண் திடல்கள் மழை நீர் வடிகாலின் வாய்ப்பகுதியினை மூடிக்கொள்கின்றது. அதனால் வீட்டுக் கழிவு நீரானது மழைநீர் வடிகாலில் தேங்கி காணப்படுகின்றது. மேலும் பொதுமக்களின் கவனவீனத்தால் சேர்க்கப்படும் கழிவு நீரை வெளியேற்றுவதற்கு கழிவுறுஞ்சியைப் பயன்படுத்தி அகற்றப்பட்டு வருகின்றது.

கடல் நீர்மட்டம் குறைவடையும்போது மட்டுமே அந்த மண்திடல்கள் வெட்டப்பட்டு கழிவு நீரை அகற்றக்கூடியதாக இருக்கும். அந்த நடவடிக்கை சட்டத்துக்கு முரணானது. இருப்பினும் ஏனைய பொதுமக்களின் நலன் கருதி நகரசபையினால் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

எனவே, பொதுமக்கள் இந்த விடயத்தில் விழிப்படைந்து பொறுப்புணர்வுடன் செயற்படும் பட்சத்தில் மட்டுமே பொதுமக்களுக்கான நகரசபையினரின் சேவையினை முழுமையாக வழங்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இனிவரும் காலங்களில் இந்த நடவடிக்கைக்கு எதிராகப் பொதுமக்களின் நலன்கருதி சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகியுள்ளோம் - என்றுள்ளது. (4)

## குரு சமர்ப்பணம் இசைக் கச்சேரி

யாழ்ப்பாணம், ஜன.18

பிரபல வயலின் வித்துவான் மறைந்த கலாகீர்த்தி பிரம்மஸ்ரீ சி.சர்வேஸ்வரசர்மாவின் 90ஆவது ஜனனதினத்தை முன்னிட்டு அவரின் சிஷயர்கள் வழங்கும் குரு சமர்ப்பணம் இசைக்கச்சேரி எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 3 மணி தொடக்கம் பி.ப 7மணி வரை இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் இந்து கலாசார அமைச்சின் பணிப்பாளர் அருளானந்தம் உமாமகேஸ்வரன் தலைமையில் நிகழவுள்ளது.

முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக நுண்கலைப்பீடப் பகுதிநேர விரிவுரையாளர் சங்கீத வித்துவான் பொன்.சிறிவாமதேவனும் மதிப்புறு விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் இராசரத்தினம் குமாரவடிவேல் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ய-4)

## நூல்களை சமர்ப்பிக்குக

சாவகச்சேரி, ஜன.18

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் எழுத்தாளர் ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் நூல் கொள்வனவு செய்தல் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த வருடம் (01.01.2017 - 31.12.2017வரை) வெளியீடு செய்யப்பட்ட நூல்களின் பிரதிகளை அடுத்தமாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்தில் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்கள் மற்றும் விண்ணப்ப படிவங்களை தென்மராட்சிப் பிரதேச செயலகக் கலாசார கிளையில் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் திருமதி தே.பாபு அறிவித்துள்ளார். (ய-9)

## பேராசிரியர் புஸ்பரட்ணத்தின் இரண்டு நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன. 18

மூத்த பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம் எழுதிய இலங்கைத் தமிழர் ஒரு சுருக்க வரலாறு, ஈழத்தமிழர் மரபுரிமை அடையாளங்கள் எனும் இரண்டு நூல்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கைலாசபதி அரங்கில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வெளியிடப்படவுள்ளன. முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் கலந்துகொள்வார். கௌரவ விருந்தினராக முன்னாள் துணைவேந்தரும் பேராசிரியருமான வசந்தி அரசரட்ணம் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக கலைப்பீட பீடாதிபதி கலாநிதி கே.சுதாகர், வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.கிருஸ்ணராஜா ஆகியோர் கலந்துகொள்வர். நூல் அறிமுக உரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் கலாநிதி ஆறு. திருமுருகனும், பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் வ.மகேஸ்வரன் ஆகியோர் நிகழ்த்துவர். நுல் வெளியீட்டுரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விலங்கியல்துறைப் பேராசிரியர் சின்னத்தம்பி நோபிள் சுரேந்திரன் நிகழ்த்துவார். முதற்பிரதியை பல்கலையின் கிறிஸ்தவ நாகரிகத்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் அருட்தந்தை ஞா.பிலேந்திரன் நிகழ்த்துவார் என்று தெரிவிக்கப்பட்டது. (4.37)

## தவறவிடப்பட்ட பேர்ஸ் மீட்டு ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 18

மாணவன் ஒருவரால் யாழ்ப்பாண நகரில் தவறவிடப்பட்ட பேஸ் ஒன்றை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர் ஒருவர் மீட்டு உரிமையாளரிடம் ஒப்படைத்துள்ளார்.

கொக்குவிலைச் சேர்ந்த மாணவன் யாழ்ப்பாண நகருக்கு வந்து திரும்பியபோது அதனைத் தவறவிட்டுள்ளார்.

அது யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலைக்கு முன்பாக வீதியில் காணப்பட்டபோது அதனை குறித்த பொலிஸ் நிலைய போக்குவரத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர் கண்டெடுத்துள்ளார். அந்தப் பணப்பையில் குறிப்பிடப்பட்டிருந்த கைபேசி இலக்கத்துக்கு தொடர்புகொண்டு மாணவனின் குடும்பத்தை யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்துக்கு வரவழைத்து அவர்களிடம் அதனை நேற்று வழங்கினார். (4,8,106)

## நாட்டிலுள்ள எவரும் தில்லைக்குச் செல்ல பதிவு செய்யலாம்

யாழ்ப்பாணம், ஜன. 18

"காங்கேசன் துறையில் இருந்து கடல்வழியாகச் சென்று தில்லை நடராசரைத் தரிசிப்பதற்கு இலங்கையின் எந்தப் பகுதியிலும் வாழும் இந்துக்களும் பதிவு செய்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்துசமய கலாசார திணைக்கள அலுவலர் இது தொடர்பில் மேலும் தெரிவித்தாவது:

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் தற்காலிகமாக செயற்படும் இந்து சமய கலாசார அலுவலகத்தில் தற்காலிகமாக செயற்படும் இந்து சமய கலாசார அலுவலகத்தில் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரையில் 260க்கும் மேற்பட்டவர்கள் பதிவு செய்துள்ளனர்.

கடவுச்சீட்டுடன் சென்று பதிவுகளை செய்து கொள்ளலாம். பதிவுசெய்யும்போது எந்த விதமான கட்டணங்களும் செலுத்தத் தேவையில்லை. இந்தப் பயணத்தில் இலங்கையின் எந்தப் பகுதியில் வாழும் இந்துக்களும் இணைந்து கொள்ளலாம் . செல்லுபடியாகும் கடவுச்சீட்டுடன் பதிவகளை செய்து கொள்ளலாம். பயணத்தக்கான விசா அனுமதி சலுகை கட்டண அடிப்படையில் பெற்றுக்கொடுக்கப்படும். பதிவுசெய்யும்போது கட்டணம் செலுத்தத் தேவையில் பயணம் தொடர்பான இறுதி ஒழுங்குகள் கூடிய விரைவில் உறுதி செய்யப்பட்டு அது தொடர்பாக பதிவு செய்தவர்களுக்கு அறிவிக்கப்படும்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (4.11)

## "நெடுந்தீவு தினம்" நிகழ்வுக்கு ஆலோசனை கோரல்

யாழ்ப்பாணம், ஜன. 18

"நெடுந்தீவு தினம்" என்ற தொனிப்பொருளில் நெடுந்தீவின் சிறப்புகள் தொடர்பிலான நிகழ்வு எதிர்வரும் சித்திரை புத்தாண்டு தினத்தை ஒட்டி கொண்டாடப்படவுள்ளது. அதற்காக மக்களின் கருத்துக்களைக் கேட்க தீர்மானித்துள்ளதாக நெடுந்தீவு பிரதேச செயலாளர் ஜெயகாந்த் தெரிவித்தார்.

"நெடுந்தீவின் வரலாறுகளை மக்களுக்கு எடுத்துக் காட்டும் முகமாகவும் அந்த மண்ணின் பெருமைகளை வெளிக்கொண்டு வரும் நோக்கில் இந்த நிகழ்வை நடத்தத் திட்டமிட்டுள்ளோம். கலாசார நிகழ்வுகள், பாரம்பரிய விடயங்கள் போன்றவற்றை வெளிப்படுத்தும் வகையில் இதனை ஒழுங்கு செய்யவுள்ளோம். நெடுந்தீவின் சிறப்புக்கள், வரலாறுகள் தொடர்பில் உங்கள் கருத்துக்களையும் நிகழ்வினை எவ்வாறு அமையப் பெறலாம் என்ற அபிப்பிராயங்களையும் அனுப்பி வைக்கலாம். மக்கள் தமது கருத்துக்களைப் பிரதேச செயலாளர், நெடுந்தீவு என்ற முகவரிக்கு தபால் மூலமாக அனுப்பி வைக்க முடியும்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (4.8)

## சிவசுப்பிரமணியனுக்கு திங்கள் கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஜன.18

காரைநகர் பயிரிக்கூடல் சிவசுப்பிரமணியசுவாமி கோவில் மஹோற்சவம் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்து நாள்கள் உற்சவம் நடைபெறும். கொடியேற்றம் முற்பகல் 11 மணிக்கு சண்முகராஜக் குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ளது. அடியார்கள் அனைவரும் வருகை தந்து அருளை பெறுமாறு ஆலய தர்மகர்த்தாவும், திருவிழா உபயகாரர்களும் கேட்டுள்ளனர். (4)

## மைத்திரியை...

உரையை முடித்ததும் அங்கிருந்து வெளியேறியிருந்தார். தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அவரைச் சமாதானப்படுத்தி அழைத்து வந்திருந்தார். இந்த நிலமையால் கூட்டரசுக்கு நெருக்கடி ஏற்பட்டிருந்தது.

பரபரப்பான அரசியல் சூழ்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் மையச் செயற்குழுக் கூட்டம் நேற்று முற்பகல் 10 மணிக்கு கட்சித் தலைமையகமான சிறிகொத்தாவில் கூடியது. தேர்தல் காலம் என்பதால் பெருமளவானோர் அந்தக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை.

அரச தலைவர் மைத்திரியினதும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரதும் செயற்பாடுகள் தொடர்பில் அமைச்சர்களும், தலைமை அமைச்சர் ரணிலுக்கும் இடையில் வாக்குவாதம் மூண்டுள்ளது. ரணில் அமைச்சர்களைச் சமாதானப்படுத்தியுள்ளார். சிறப்பு உரையையும் ரணில் நிகழ்த்தியுள்ளார்.

தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளின் போது எந்தக் காரணம் கொண்டும் மைத்திரியை எதிர்த்துப் பேச கூடாது. சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் குற்றச்சாட்டுகளை முன்வைத்தால் அவர்களுக்குப் பதில் வழங்குங்கள். அதற்கு மாறாக மைத்திரிபால சிறிசேனவை விமர்சிப்பதை உடன் நிறுத்த வேண்டும்.

மத்திய வங்கி பிணைமுறி விவகாரம் தொடர்பிலான ஆணைக்குழுவின் அறிக்கைக்கு ஐக்கிய தேசியக் கட்சி அறிக்கையொன்றின் மூலமாக உரிய பதிலை வழங்கும். அதனால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு பாதிப்புகள் எதுவும் இல்லை என்று ரணில் கூறியுள்ளார்.

அப்படியென்றால் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் உங்களை விமர்சிக்கின்றனர் அல்லவா என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் சிலர் கேள்வி எழுப்பினர். இனி அவ்வாறு நடக்காத வகையில் அரச தலைவர் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார் என்று ரணில்.பதிலளித்தார்.

இந்தக் கூட்டத்தில் கருத்து வெளியிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கை தவறாக திரிபுபடுத்தப்பட்டுள்ளது என்றும் அல்லது தவறாக அறிக்கையிடப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

பிக்பொக்கட் அரச தலைவர் என்று தாம் கூறவில்லை என்றும், மகிந்த ராஜபக்சவின் சட்டைப்பையில் இருந்தே, மைத்திரிபால சிறிசேனவை பிக்பொக்கட் அடித்தோம் என்றே கூறினேன் என்றும் அவர் விளக்கியுள்ளார்.(ஐ-5.31)

## 7 கோடி...

என்றும் அவர் தெரவித்தார். நேற்றுமுன்தினம் இரவு வடபிராந்திய கட்டளை மையத்துக்குத் தகவல் கிடைத்தது. அதன் அடிப்படையில் காங்கேசன்துறை வெளிச்சவீட்டில் இருந்து வடமேற்குத் திசையில் பயணித்துக் கொண்டிருந்த சிறிய ரக டிங்கி மீன்பிடிப் படகு கடற்படையினரின் அதிவேகப் படகுகளால் சுற்றிவளைக் கப்பட்டு சோதனைக்குட்படுத்தப்பட்டது.

அந்த டிங்கிப் படகின் நங்கூரத்தில் மிக நுட்பமாக மறைத்து வைக்கப்பட்ட தங்க பிஸ்கட்டுக்கள் கடற்படையினரால் கண்டுபிடிக்கப்பட்டது. 7 கிலோ நிறையுடைய தங்கம் 100 கிராம் நிறை கொண்ட சிறிய தங்க பிஸ்கட்டுக்களாக மறைத்து வைக்கப்பட்டிருந்தன.

அந்தப் படகில் இருந்த இருவரும் கைது செய்யப்பட்டனர். கைப்பற்றப்பட்ட தங்கம், படகு, சந்தேக நபர்கள் மேலதிக நடவடிக்கைகளுக்காகச் ஆயப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அதேவேளை, கடந்த 10ஆம் திகதியும் 600 கிராம் தங்கத்துடன் இருவர் மன்னார் பேசாலையில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர். (ஐ-8.71)

## மைத்திரியை வீழ்த்த...

பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சியை நம்பியே மைத்திரிபால சிறிசேன வெளியில் வந்தார். அதனாலேயே 41 நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த பிரதிநிதித்துவத்தை 106 ஆக உயர்த்திக்கொள்ள முடிந்தது. எமக்காகச் செயற்பட்டு எம்மை பாதுகாத்து எமக்கும் அரச அங்கீகாரம் கொடுத்த நபரை இன்று ஐக்கிய தேசியக் கட்சியின் சில உறுப்பினர்கள் பிட்பொக்கட்காரர் என கூறுகின்றனர். இவ்வாறான கருத்தை முன்வைக்க எமக்கு எந்த தகுதியும் அருகைதையும் இல்லை. மைத்திரி மூலமாகவே, வீழ்ச்சி கண்டிருந்த நாம் இன்று தலைதூக்கி செயற்பூட்டு வருகின்றோம். அவரே எமக்கு கைகொடுத்தார். நாட்டின் ஊழல், குற்றங்கள் அனைத்தையும் ஒழிப்பதாகக் கூறி ஆட்சிக்கு வந்தவர் இன்று தனது கடமையை முன்னெடுத்து வருகின்றார். அதில் எந்தத் தவறும் இல்லை. மக்களின் பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது என்றால் அதில் எம் அனைவரதும் பணமும் உள்ளடங்குகின்றது. அதனை மீட்டுத்தரும் அவரது முயற்சியில் எந்தப் பிழையும் இல்லை. நானும் மத்திய வங்கியின் ஊடாக மக்களின் பணத்தை கொள்ளையடித்து ஏமாற்றியிருந்தால் சிறையில் இருக்க வேண்டும்.

10 வேலை வாய்ப்புகள் உருவானால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 5, சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு 5 எனப் பிரித்துக்கொள்ளக்கூடிய வாய்ப்பு கூட்டு அரசு மூலம் உருவானது. உடனேயே அனைத்தையும் பெற்றுவிடவேண்டும் என்ற பேராசையாலேயே பிரச்சினை உருவாகியுள்ளது - என்றார். (ஐ-5.31)

## கூட்டமைப்பின்...

நிகழ்வு நல்லூர் இளம் கலைஞர் மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. அதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

தேர்தல் ஆணைக்குழு சில திட்டமிட்ட வேலைகளைச் செய்து வருகின்றது.தேர்தல் ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் கூல் என்பவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முகவராகச் செயற்படுகின்றார். அவருடைய பணி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அல்லது தமிழ்த் தேசியப் பேரவை என்ன செய்கின்றனர், எங்கு கூட்டம் போடுகின்றனர் என்பதை விசாரணை செய்து அவற்றில் எவ்வாறு பிரச்சினைகளை உண்டுபண்ணலாம் என்பதே.

அரசு தன்னுடைய கரங்களைப் பலப்படுத்தி எங்களுடைய கட்சியைக் குறிவைத்துத் தாக்குகின்றது. யாரோ ஒரு தரப்பு தோற்றுப்போய்விடக்கூடாது என்பதற்காகவே இந்த அரச இயந்திரம் எமக்கு எதிராகப் பயன்படுத்தப்படுகின்றது அவரது செயற்பாடுகளை நிறுத்த வேண்டும் என நாம் கேட்டுக்கொள்கிறேன். இந்த நிலமை தொடருமாயின் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதியிலிருந்து அவருக்கு எதிரான எமது தாக்குதல்கள் ஆரம்பமாகும் என கூறி வைக்கின்றேன்.

நாங்கள் அரசியலுக்கு அப்பால் ஒரு இயக்கமாக செயற்பட வேண்டும் என்பதாலேயே நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறினோம். நாம் தேர்தல்களுக்கு அப்பால் மக்களின் தேவைகளை முழுமை செய்ய ஒரு இயக்கமாக செயற்படுவோம்-என்றார்.

தமிழ்த் தேசியப் பேரவையின் தேர்தல் அறிக்கை நேற்று வெளியிடப்பட்டது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் தேசிய அமைப்பாளரும் யாழ். மாநகர சபை முதன்மை வேட்பாளருமான சட்டத்தரணி மணிவண்ணன் ஆகியோர் தேர்தல் அறிக்கையை வெளியிட அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஆனந்தராஜா பெற்றுக்கொண்டார்.

தமிழ்த் தேசியப் பேரவையானது அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழர் சமவுரிமை இயக்கம், நம்பிகள் நல் வாழ்வுக் கழகம், தமிழர் வாழ்வுரிமை இயக்கம் உள்ளிட்ட பல்வேறு பொது அமைப்புக்களின் கூட்டாக இம்முறை உள்ளூராட்சி மன்ற தேர்தலை இலங்கையின் வடக்கு -கிழக்கில் சந்திக்கின்றது.

தமிழ் மக்கள் பேரவையால் 2016ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி வெளியிடப்பட்ட தீர்வுத் திட்டத்தை வென்றெடுப்பதையும், தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு முழுமையான நீதியை பெற்றுக் கொள்வதையும் இலக்காக கொண்டு இவ் அரசியற் பேரியக்கம் (தமிழ்த் தேசியப் பேரவை) இதய சுத்தியுடன் செயற்படும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தல் அறிக்கையில் நிர்வாகமும் நிதிகையாளுகையும், குடியிருப்பாளருக்கான சேவைகள், உட்கட்டுமானம், பொருளாதார மேம்பாடு சந்தை முகாமைத்துவம், பூங்காக்களும் பொழுதுபோக்கு மையங்களும், குளங்கள் மற்றும் மயானங்கள் சீரமைப்பு, தொழில் வாய்ப்பு, சுகாதாரமும் பெண்கள் நலனும், கல்வி மேம்பாடு, பசுமை நகரம், தேசியக்கொள்கைகள் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. (ஐ-ரி4.8)

## கோத்தபாய...

இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் ரொசான் ரணசிங்க தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச நாட்டில்திருப்புமுனையான பல விடயங்களைச் செய்தார். அவர் இன, மத பேதங்களுக்கு அப்பால் நின்று நாட்டைக் கட்டியெழுப்பினார். 2015ஆம் ஆண்டு நடைபெற்ற அரச தலைவர் தேர்தலில் அவர் தோற்கடிக்கப்பட்டார். அதன் பின்னணியில் அமெரிக்கா, நோர்வே போன்ற நாடுகள் செயற்பட்டன. அந்த நாடுகளே இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிரான அசம்பாவிதங்களுக்கும் வழியமைத்தன. சதி மூலமே முன்னாள் அரச தலைவர் மகிந்த தோற்கடிக்கப்பட்டார்.

கூட்டரசு ஆட்சிக்கு வந்த பின்னர் அரசமைப்பின் 19ஆம் திருத்தத்தை கொண்டு வந்தது. அதனூடாக இரு தடவைகளுக்கு மேல் அரச தலைவராகப் பதவி வகிக்க முடியாது என்றும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. முன்னாள் அரச தலைவர் மகிந்தவால் தேர்தலில் போட்டியிட முடியாது.

போரை முடிவுக்கு கொண்டுவருவதில் பெரும் பங்காற்றிய முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாயவை அரச தலைவராக்க வேண்டும் எனக் கருதுகிறேன்.

தென்னிலங்கை மக்களின் ஆதரவைப் பெற்ற அரச தலைவராலேயே தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு முன்வைக்க முடியும். எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் கூட்டு எதிர்க்கட்சி சார்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாயவை அரச தலைவர் வேட்பாளராக நிறுத்தி அவரை வெற்றிபெறச்செய்ய வேண்டும். அவர் அரச தலைவரான பின்னர் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்க முடியும் - என்றார். (ஐ-5.31)

## உரிய...

ராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து நேற்று நடத்தப்பட்ட மக்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

வடக்கு, கிழக்கில் உள்ள மக்கள் ஒரு மித்து நிற்கின்றார்களா என்பதைப் பன்னாட்டு ரீதியில் இந்தத் தேர்தலை பலர் உற்று நோக்குகின்றனர். தமிழ் மக்கள் மிக நீண்ட காலமாக போராடி வருகின்றார்கள்.

ஐக்கிய நாடுகள் சபையின் அடிப்படை பிரகடனத்தின் படி ஒரு மக்களை அவர்களின் சம்மதம் இல்லாமல் ஆட்சி புரிய முடியாது. எமக்கு சுயாட்சி உரித்து உண்டு. அந்த உரிமை மதிக்கப்பட வேண்டும். நாம் தற்போது நிதானமாக, நியாயமாக, நேர்மையாக ஒருமித்த நாட்டுக்குள் மதிப்பைப் பெற்றுக் கொள்ள முயற்சிக்கின்றோம். அது நடைபெறா விட்டால் எமது சம்மதம் இல்லாமல் நடைபெறும் ஆட்சியை மாற்ற வேண்டிய நிலை ஏற்படும்.

நாங்கள் இன்று அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றோம் என்றும், மக்களுடைய பல கருமங்களை தீவிரமாக கையாளவில்லை என்றும் எம்மீது குற்றம் சாட்ட சிலர் முயற்சிக்கிறார்கள். அது தவறு நாங்கள் அரசின் பங்காளிகள் அல்ல. நாங்கள் அரசின் அமைச்சர்களும் அல்ல.

எமது பிரச்சினை தீரும் வரை அமைச்சர்களாக வரமாட்டோம். எமது மக்கள் தமது உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அவர்கள் வாழ்கின்ற பிரதேசங்களில் அவர்களுடைய கருமங்களை அவர்களே கையாளக் கூடிய நிலை ஏற்படும் வரை நாம் அமைச்சுப் பதவிகளை ஏற்க மாட்டோம்.

நாட்டில் ஒரு கொடூரமான ஆட்சி நடைபெற்றது. அதை எமது மக்களின் வாக்குப் பலத்தால் நாம் மாற்றினோம். அதன் நிமித்தம் எமது மக்களின் காணிப் பிரச்சினை காணாமல் போனோர் பிரச்சினை தொடர்பான விடயங்களுக்கு தீர்வு பெற்று வருகின்றோம்- என்றார். (ஐ-ரி4.40)

## விசாரணை...

கொழும்பு, ஜன. 18

இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறிகள் விற்பனை தொடர்பான அரச தலைவர் ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை, மகிந்த காலத்து இலஞ்ச ஊழல் மோசடிகள் சம்பந்தமான விசாரணை ஆணைக்குழு அறிக்கை ஆகியன சாபாநயகர் கருஜயசூரியவிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

அறிக்கைகள் தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்காக எதிர்வரும் 22ஆம் திகதி காலை 9.30 மணிக்கு கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெறவுள்ளது என்று சபாநாயகர் கருஜெயசூரிய தெரிவித்தார்.

ஆணைக்குழுவின் அறிக்கைகள் நாடாளுமன்றத்துக்கு அனுப்பப்பட்டதன் பின்னர் நேற்று புதன்கிழமை நாடாளுமன்றத்தில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அரச தலைவர் மைத்திரியிடம் கையளித்த பிணைமுறிகள் விசாரணை அறிக்கை, இலஞ்ச ஊழல் மோசடி விசாரணை ஆணைக்குழு அறிக்கை ஆகியன இன்று (நேற்று) முற்பகல் 11மணிக்கு என்னிடம் ஒப்படைக்கப்பட்டன.

கடந்த வாரம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தைத் தொடர்ந்து பிணைமுறிகள் தொடர்பான அறிக்கை மற்றும் இலஞ்ச ஊழல் மோசடிகள் விசாரணை அறிக்கை ஆகிய இரண்டையும் நாடாளுமன்றத்துக்குச் சமர்பிக்க வேண்டும் என்று கோரியிருந்தேன். ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருப்பதால் கடந்த புதன்கிழமை அந்த அறிக்கையை சமர்ப்பிக்க முடியாது என்றும் 17ஆம் திகதி (இன்று) சமர்ப்பிக்கப்படும் என்றும் மைத்திரிபால சிறிசேன என்னிடத்தில் வாக்குறுதி அளித்திருந்தார்.

இன்று (நேற்று) இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறிகள் விற்பனை தொடர்பான ஆணைக்குழுவின் அறிக்கையின் 26 பிரதிகள் எமக்கு கிடைத்துள்ளன. அவை அனைத்தும் ஆங்கில மொழியிலேயே உள்ளன. நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளின் பிரகாரம் சிங்களம், தமிழ் மொழிகளிலும் இந்த அறிக்கை மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டு உறுப்பினர்களுக்கு கையளிக்கப்பட வேண்டியுள்ளது.

இந்த விடயம் சம்பந்தமாக அரச தலைவர் செயலகத்துடன் பேச்சு நடத்தியுள்ளோம். அரச தலைவர் செயலகமானது அரச மொழித் திணைக்களத்துடன் பேச்சு நடத்தியுள்ளது. அதற்கு அமைவாக விரைவில் மொழிபெயர்ப்புச்செய்து எதிர்வரும் 23ஆம் திகதி உறுப்பினர்களிடத்தில் கையளிப்பதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம்.

இலஞ்ச ஊழல் மோசடிகள் சம்பந்தமான விசாரணை ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையின் பிரதியொன்றே என்னிடத்தில் கையளிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையானது 34தொகுதிகளைக் கொண்ட முழுமையான அறிக்கையாகும். இந்த அறிக்கையானது சிங்கள மொழியிலேயே காணப்படுகின்றது. அறிக்கையினது பிரதிகள் மேலும் எமக்கு கிடைக்கவுள்ளன. அவற்றையும் மொழிபெயர்ப்புச் செய்யவேண்டியுள்ளது.

இந்த அறிக்கைகளின் பிரதிகளை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், ஊடகங்களுக்கும் கையளிப்பதற்காக 300 பிரதிகள் வரையில் அச்சிட வேண்டியுள்ளது. அதற்காக அரச அச்சகத்தின் தலைவருடன் பேச்சு நடத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளேன் - என்றார். (ஐ-5.31)

## தாய்ப்பால்...

பால் கொடுத்து உறங்க வைத்தார். அதிகாலை பார்த்தபோது குழந்தையின் மூக்கின் ஊடாகத் தாய்ப்பால் வடிந்திருந்தது. குழந்தையில் எந்த அசைவும் இல்லை. உடனடியாகக் குழந்தை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டது. குழந்தை ஏற்கனவே உயிரிழந்துவிட்டது என்று மருத்துவர்கள் தெரிவித்தனர் என்று கூறப்பட்டது.

தாய்ப்பால் புரைக்கேறியதால் குழந்தை உயிரிழந்திருக்கலாம் என்று ஆரம்ப விசாரணைகளைக் கொண்டு தெரிவிக்கப்பட்டது. (ஐ-8)

## நாடாளுமன்ற...

துள்ளார் அமைச்சர் மனோ கணேசன்.

கொழும்பு டட்லி சேனாநாயக்க வித்தியாலயத்தில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற சகோதரத்துவ தைப்பொங்கல் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

எமது நாட்டின் நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் அமைச்சர்களுக்கிடையிலும் கட்சி உறுப்பினர்களுக்கு இடையேயும் மல்யுத்தம் நடந்தது. அவர்கள் பாடசாலை மாணவர்களைப் போல் நாடாளுமன்றத்தில் சண்டையிட்டுக் கொள்கின்றனர். அது மாத்திரமல்ல. நேற்று முன்தினம் அமைச்சரவையில் அரச தலைவர் மனம் வருந்தும் படியான சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. இவ்வாறான சம்பவங்களை நினைத்து நான் வெட்கப்படுகின்றேன்.

நாட்டின் குடிமக்கள் மாத்திரமன்றி அரச தலைவர் முதற்கொண்டு தலைமை அமைச்சர் வரை அனைவரும் சக வாழ்வை பின்பற்ற வேண்டும். சாதாரண மக்களிடத்தில் இந்தப் பிரச்சினை இருப்பதாகத் தெரியவில்லை. தற்போது சகோதர மொழிப் பாடசாலையில் தைப்பொங்கல் தினத்தை மாணவர்கள் ஒற்றுமையுடன் கொண்டாடுகின்றனர். இவர்களைப் பார்த்து அமைச்சர்கள் கற்றுக் கொள்ள வேண்டும்.

நான் ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் ஒரு வேண்டுகோள் விடுகின்றேன். தயவு செய்து பாடசாலை மாணவர்களை நாடாளுமன்றத்திற்கு அனுப்பாதீர்கள். மாணவர்களின் ஒழுக்கத்துக்கு அது பாதுகாப்பல்ல - என்றார். (ஐ-5.61)

### மதுபான விவகாரம்

# பெண் செய்தியாளர் அமைச்சரவை பேச்சாளர்களுடன் கடும் தர்க்கம்

## பெண்ணுரிமை மறுக்கப்பட்டதாகச் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 18

பெண்கள் மதுபானசாலைகளில் பணியாற்றுவது மற்றும் கொள்வனவு செய்வது என்பன தடை செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் நேற்றைய தினம் பெண் செய்தியாளருக்கும் அமைச்சரவைப் பேச்சாளர்களுக்குமிடையே சர்ச்சை ஏற்பட்டது.

இந்தத் தடையை ஏற்படுத்தியதன் மூலம் பெண்களின் உரிமை மறுக்கப்பட்டுள்ளதாக பெண் ஊடகவியலாளர்கள் தெரிவித்த நிலையில் இலங்கையின் கலாசாரத்தின் படி இதற்கு இடமளிக்க முடியாதென அமைச்சரவைப் பேச்சாளர்களான ராஜித சேனாரத்னவும், தயாசிறி ஜயசேகரவும் மிகவும் திட்டவட்டமாக அறிவித்தனர்.

'பெண்கள் மதுபானசாலைகளில் வேலை செய்ய முடியாது. அவற்றைக் கொள்வனவு செய்ய முடியாது. விற்பனை செய்ய முடியாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஏன் இவ்வாறான ஒரு சட்டம் வேண்டும்?' என்று பெண் செய்தியாளர் கேள்வி எழுப்பினார்.

'90 வீதமான பெண்கள் கிராமங்களிலேயே வாழ்கின்றனர். பெண்கள் மதுபானம் வாங்குவதற்கோ, மதுபான சாலைகளில் வேலை செய்வதற்கோ இடமளிக்கக்கூடாது. அது எமது கலாசாரத்துக்கு அப்பாற்பட்டது' என்று அமைச்சரவைப் பேச்சாளர்கள் பதிலளித்தனர்.

'இதன்மூலம் பெண்கள் தீர்மானம் எடுக்கும் உரிமையை மறுக்கின்றீர்களே?' என்று பெண் செய்தியாளர் மீண்டும் கேள்வி எழுப்பினார்.

'நீங்கள் கூறுவது தவறு. அவ்வாறு இடமளிக்க முடியாது. பெண்களுக்கு சம உரிமை வழங்குவோம். ஆனால் இந்த விடயத்தில் வழங்க முடியாது. பிரிட்டனிலும் மேலைத்தேய நாடுகளிலுமுள்ள கலாசாரத்தை இங்கு புகுத்த முடியாது. அந்த நாடுகளில் மதுபான நுகர்வு என்பது சாதாரணமானது. ஆனால் எமது நாட்டில் அது சாதாரணமானதல்ல' என்று அமைச்சரவைப் பேச்சாளர்கள் பதில் கூறினர்.

'இருந்தாலும் பெண்கள் மது அருந்துவதா இல்லையா என்ற தீர்மானத்தை எடுக்கும் உரிமை பெண்களிடம் தானே இருக்கவேண்டும்?' என்று கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு, அப்படிக்கூற முடியாது. இது கலாசாரம் சம்பந்தப்பட்ட விடயமாகும். வெளிநாடுகளில் 90 வீதமான பெண்கள் சிகரெட் பிடிப்பார்கள். ஆனால் இலங்கையில் 1 வீதமான பெண்களே சிகரெட் பிடிக்கின்றனர். இது கலாசாரம் சம்பந்தப்பட்ட விடயமாகும் - என்றார்.

";இருந்தாலும் நீங்கள் பெண்களின் உரிமைகளை இதன் மூலம் மறுக்கின்றீர்கள்?' என்றார் பெண் செய்தியாளர்.

'எமது நாட்டில் மதுவுக்கு முற்றுப்புள்ளி என்று உள்ளது. ஆண்கள் மது அருந்துவதையே தடுக்க நாங்கள் முயற்சிக்கின்றோம். இந்த நிலையில் பெண்களுக்கும் அந்த உரிமையைக் கொடுப்பது எப்படி? எமது அரசு மதுவை ஒழிக்கும் திட்டத்தையே முன்னெடுத்து வருகின்றது. அதனால் இதற்கு நாங்கள் இடமளிக்க முடியாது' என்று அமைச்சரவைப் பேச்சாளர்கள் பதில் வழங்கினார்கள். (5.61)

## லசந்த கொலைக்கான ஆயுதத்தை இறக்குமதி செய்தது யார்?

### விசாரணைகள் தீவிரம்

கொழும்பு, ஜன. 18

'சண்டே லீடர்' பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்கவைப் படுகொலை செய்ய 'கேப்டிவ் போல்ட்' ரக துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளமை குறித்து விசாரணைகளில் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அதனை இலங்கைக்கு கொண்டு வந்தவர்களை கண்டறிய சிறப்பு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கேப்டிவ் போல்ட் ரக ஆயுதமானது, வேட்டைக்காகப் பயன்படுத்தும் ஒருவகை கூரிய ஆயுதம் என்று குறிப்பிடும் குற்றப் புலனாய்வுப் பிரிவு அந்த ஆயுதத்தை இலங்கைக்கு இறக்குமதி செய்தவர் யார் என்பதை கண்டறிந்தால், லசந்தவின் கொலையின் மர்ம முடிச்சுக்கள் பலவற்றை அவிழ்க்க முடியும் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

போரின் போது இறக்குமதி செய்யப்பட்ட ஆயுதங்களுடன் மேற்படி ஆயுதம் லசந்தவை கொலை செய்வதற்கு என்று மிகத் திட்டமிட்டு சூட்சுமமாக மறைத்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கலாம். இந்த ஆயுதத்தால் மேலும் குற்றங்கள் இடம்பெற்றுள்ளனவா என்பதைக் கண்டறிய வேண்டி இருப்பதாகவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (5.71)

## வடக்கை கைவிட்டது சீனா

கொழும்பு, ஜன. 18

சீன அரசின் உதவியுடன் 13 மருத்துவமனைகளை அபிவிருத்தி செய்யவுள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

சீன அரசின் 2 பில்லியன் ரூபா நிதியுதவியுடன் அபிவிருத்தி செய்யப்பட்ட மீரிகம தள மருத்துவமனையில் நடந்த நிகழ்வில் உரையாற்றிய போதே இதனைத் தெரிவித்தார்.

'பேருவளை, அளுத்கம, சம்மாந்துறை, ஏறாவூர், பொத்துவில், பொலன்னறுவ, பதவிய, வலஸ்முல்ல, கலவான, மகியங்கனை, ரிக்கில்லர்கஸ்கட, கராப்பிட்டிய ஆகிய மருத்துவமனைகளே சீனாவின் உதவியுடன் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் விரைவில் சமர்ப்பிக்கப்படும்' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சீனாவின் உதவியுடன் அபிவிருத்தி செய்யப்படவுள்ள மருத்துவமனைகளின் பட்டியலில் வடக்கு மாகாணம் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

## மின்சார சபை ஊழியர்கள் நாடு முழுவதும் இன்று வேலைநிறுத்தப் போராட்டம்

கொழும்பு, ஜன. 18

இலங்கை மின்சார சபை ஊழியர் சங்கங்கள் இன்று முதல் நாடுமுழுவதும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளன.

மின்சார சபையில் பணியாற்றும் ஊழியர்கள் பலரை நேற்றுக் கைது செய்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த வேலைநிறுத்தப் போராட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மின்சார சபைத் தலைவரை ஊழியர்கள் தலைமை அலுவலகத்தினுள்ளேயே தடுத்து வைத்திருந்த போது அவரை மீட்பதற்கு பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையின் போது சபை ஊழியர்கள் பலர் கைது செய்யப்பட்டிருந்தனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே வேலைநிறுத்தப் போராட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. (5)



## சு.க. அலுவலகத்துக்குள் பிரபாகரனுக்குப் பாடல்

### இதுவா பண்டாரநாயக்க கொள்கையென மகிந்தவின் மகன் நாமல் கேள்விக்கணை

கொழும்பு, ஜன. 18

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் தொடர்பான இயக்கப்பாடல்களை கட்சி அலுவலகத்தில் ஒலிபரப்புவதுதான் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கையா, என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச கேள்வி எழுப்பியுள்ளார்.

சுதந்திரக் கட்சியின் நிறுவுனத் தலைவரான பண்டாரநாயக்க இருந்திருந்தால், இதைப் பார்த்துக் கேட்டு இதயம் வெடித்து இறந்திருப்பார் என்றும் நாமல் சுட்டிக்காட்டியுள்ளார்.

வத்தளையில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தின் பின்னர், செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்தும் நோக்கம் எமக்கில்லை. அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொண்டு கூட்டரசில் இருப்பவர்களே கட்சியைக் காட்டிக்கொடுக்கின்றனர். தேசிய வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வதுதான் பண்டாரநாயக்கவின் கொள்கையா? இன்று சுதந்திரக் கட்சி அலுவலகத்தில் பிரபாகரனின் பாடல் ஒலிபரப்பப்படுகின்றது. இதுவா பண்டாரநாயக்கவின் கொள்கை? வெட்கமில்லாமல் கூட்டரசில் இருப்பவர்கள் இதற்குப் பதிலளிக்கவேண்டும்.

மைத்திரிபால சிறிசேனவை பிக்பொக்கட் ஜனாதிபதியென ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களும், ரணில் விக்கிரமசிங்கவைப் புண்ணியத்தால் தலைமை அமைச்சரானவர் என்று சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும் விமர்சித்து வருகின்றனர். இருதரப்பும் இவ்வாறு மோதிக்கொண்டால் ஆட்சியை எப்படி முன்னெடுப்பது?

கூட்டரசு மீது மக்கள் கடும் அதிருப்தியில் இருக்கின்றனர். தேர்தலில் 99 சதவீதமான சுதந்திரக் கட்சி ஆதரவாளர்களின் வாக்குகள் எமது அணிக்கே கிடைக்கும். இது உறுதி- என்றார். (5)

## பிரபாகரனின் படத்துடன் புத்தாண்டை வரவேற்ற இருவருக்கும் மறியல் நீடிப்பு

கொழும்பு, ஜன. 18

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகர னின் ஒளிப்படம் மற்றும் புலிகளின் இலச்சினை அடங்கிய 2018ஆம் ஆண்டுக்கான புதுவருட வாழ்த்துகளை முகநூல் ஊடாகப் பரிமாறிய இருவரையும் எதிர்வரும் 24ஆம் திகதிவரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் தனுஜா லக்மாலி ஜயதுங்க நேற்று உத்தரவிட்டார்.

பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினரின் விசாரணை கள் இன்னும் நிறைவடைய வில்லை என்று அந்தப் பிரிவினரால் அறிவிக்கப்பட்டதற்கமையவே அவர்கள் இருவரினதும் விளக்கமறி யல் நீடிக்கப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் செவன் தினேஸ்குமார், விஜேகுமார் விதூசன் ஆகிய இருவரும் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

2007ஆம் ஆண்டின் 66ஆம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான பன்னாட்டு இணக்கப்பாட்டுச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்ட இரு வருக்கும் எதிராக த்மிழ் மற்றும் சிங்கள மக்களுக்கிடையில் வெறுப்புணர்வு, அமைதியின்மையை ஏற்படுத்த முயன்றுள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இரத்தினபுரியைச் சேர்ந்த எதிரிமுனி பத்தும் ரணசிங்க என்பவரால் இரத்தினபுரி மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர் புத்திக சிறிவர்த்னவிடம் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய அத்தியட்சகரால் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினருக்கு முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

விதோசன் ரொக்சி எனப் பெயர்கொண்ட முகநூல் கணக்கு தொடர்பில் செய்யப்பட்ட முறைப்பாடு குறித்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் தினேஸ்குமார் கைது செய்யப்பட்டுள்ளார்.

விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன், புலி இலச்சினை, சீருடையில் இருக்கும் அந்த அமைப்பின் தலைவர்கள், தமிழீழ வரைபடம் என்பன தினேஸ்குமார் என்பவரின் வாழ்த்துப்படத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (5)

## வீட்டில் ஆயுதமுனையில் கொள்ளையடித்தவருக்கு 10 வருட கடூழியச் சிறை!

கொழும்பு, ஜன. 18

வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்து ஆயுதமொன்றைக் காட்டிக்கொள்ளையடித்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்த இருவரில் ஒருவரைக் குற்றவாளியாக இனங்கண்ட கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி விக்கும் களுஆராச்சி, அவருக்கு 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்து நேற்றுத் தீர்ப்பளித்தார்.

இந்தக் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்த இருவருக்கும் எதிராக 3 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்ததுடன், 2ஆவது பிரதிவாதியான வெங்கட் விக்கிரமசிங்க என்பவர் மூன்று குற்றச்சாட்டுகளிலுமிருந்தும் விடுவிக்கப்பட்டார்.

முதலாவது பிரதிவாதியான எட்வேட் சுராஜ் என்பரை மூன்றாவது குற்றச்சாட்டில் குற்றவாளியாக இனங்கண்ட நீதிபதி அவருக்கு 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்ததுடன், 25 ஆயிரம் ரூபா தண்டமும் செலுத்தத் தவறின் ஓராண்டு கடூழியச் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்தார்.

2004ஆம் ஆண்டு டிசெம்பர் 15ஆம் திகதியன்று, அனுமதிப்பத்திரமின்றி துப்பாக்கியொன்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் கல்கிஸை நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்ததாக ஏற்கனவே பதிவு காணப்படுகிறது என்று நீதிபதி தீர்ப்புக்கு முன்னர் அறிவித்தார். (5.71)

# அமைச்சரவையை சமாளிக்காத அரச தலைவர் மைத்திரிபால நாட்டை எப்படி நடத்துவார் ?

## ஜி.எல்.பீரிஸின் கேள்வி இது



கொழும்பு, ஜன. 18
மைத்திரிபால சிறிசேனவால் தனது அமைச்சரவையையே வழிநடத்த முடியவில்லை. அவரால் எவ்வாறு நாட்டை வழிநடத்த முடியும். இவ்வாறு சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைவர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கேள்வியெழுப்பினார்.

கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடுசெய்த செய்தியாளர் சந்திப்பு பொரளை என்.எம்.பெரேரா நிலையத்தில் நேற்று நடைபெற்றது. அந்தச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டில் தற்போது இடம்பெறும் நிகழ்வுகளை நோக்கும் போது விநோதமாக உள்ளது. மைத்திரிபால சிறிசேன மீது ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். அவ்வாறான குற்றச்சாட்டுக்களின் பின்னணியில் ரணில் விக்கிரமசிங்க இல்லையென்றும் கூறமுடியாது.நல்லாட்சி அரசு எனக் குறிப்பிடுகின்றனர். அமைச்சரவைக்குள்கூட நல்லாட்சி நல்லிணக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. அமைச்சரவையின் தலைவராக அரச தலைவர் உள்ளார். அவரால் அமைச்சரவையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அமைச்சரவைக் கூட்டத்திலிருந்து அவர் இடைநடுவில் வெளிநடப்புச் செய்யும் நிலையும் ஏற்பட்டுள்ளது.
அரச தலைவராக மைத்திரிபால சிறிசேனவும், தலைமை அமைச்சராக ரணில் விக்ரமசிங்கவும் பதவி வகிக்கும் வரையில் மத்திய வங்கி பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைவர்களுக்குத் தண்டனை கிடைக்கப் போவதில்லை. எமது அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் மோசடியில் தொடர்புடையவர்களுக்குத் தண்டனை வழங்கப்படும் - என்றார். (5,61)

# அலைபேசியை வாய்க்குள் திணித்து தாய் கொலை

## சந்தேகத்தில் மகன் கைது

கொழும்பு, ஜன. 18
தாயின் தொண்டைக்குள் திணித்து, மூச்சடைக்கச் செய்து கொலை செய்த சந்தேகத்தில் மகனை ஊவா பரணகம பொலிஸார் கைது செய்துள்ளனர்.
ஊவா பரணகம மொரகொல்ல உமானதி கிராமத்தில் வசித்து வந்த ரத்நாயக்க முதியான்சலாகே கருணாவதி என்ற 61 வயதான பெண்ணே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.
தனது தாய் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளதாக சந்தேக நபரான மகன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். கடந்த 15ஆம் திகதி இரவு தானும் மனைவியும் வீட்டின் புறப்பட்டுச் சென்று மறுநாள் வீட்டுக்கு வந்த போது தாய் படுக்கையில் இறந்து கிடந்ததாக மகனது முறைப்பாட்டில் கூறப்பட்டிருந்தது.
இந்த உயிரிழப்பு சந்தேகத்திற்குரியது என்று கருதி நீதிவான் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார். பதுளை வைத்தியசாலையின் சட்ட மருத்துவ அதிகாரி உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தியுள்ளார். மூச்சடைத்துள்ளதால் உயிரிழப்பு சம்பவித்துள்ளதாக உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரியவந்துள்ளது.
அலைபேசியைத் தொண்டைக்குள் திணித்து கொலை செய்துள்ளதாகப் பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (5)



# தமிழர் உடையுடன் பொங்கிய கனேடிய தலைமை அமைச்சர்

கொழும்பு, ஜன. 18
தமிழ் மக்களுடன் கனடா நாட்டுத் தலைமை அமைச்சர் பொங்கல் விழா கொண்டாடியுள்ள ஒளிப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.
கனேடிய தலைமை அமைச்சர், தமிழ் மக்களின் பாரம்பரியம் மற்றும் இந்து மதத்தின் முக்கியத்துவம் ஆகியவற்றைக் கற்றுக்கொள்வதற்கு இதுவொரு சிறந்த சந்தர்ப்பம் என்று பொங்கல் தினம் குறித்துக் கூறினார்.
இந்த நிலையில் தமிழ் மக்களுடன் இணைந்து, தமிழர் பாரம்பரிய உடை அணிந்து கனேடிய தலைமை அமைச்சர் பொங்கல் கொண்டாடினார். (5)

# பொறுமையிழந்ததாலேயே விமர்சித்தோம் – கபீர் ஹாசிம்

சுதந்திரக் கட்சியினரே தலைமை அமைச்சருக்கு எதிராக தாறுமாறாக விமர்சனங்களை முன்வைத்தனர். நாம் பொறுமையுடன் இருந்தோம். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை விமர்சிக்கவில்லை. எமது பொறுமையும் எல்லை தாண்டியதாலேயே அரச தலைவரை விமர்சித்துள்ளனர். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலரும் அமைச்சருமான கபீர் ஹாசிம் தெரிவித்தார். ஐ.தே.க. தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது.
அமைச்சரவைக்கூட்டத்தின் போது அரச தலைவர் மைத்திரி பெரும் ஆவேசம் அடைந்தார். எனினும் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் தலைமை அமைச்சர் கடுமையான எச்சரிக்கைகளை வழங்கினார். இனி மேல் அரச தலைவரை எதிர்த்துப் பேசக் கூடாது என்று நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்கினார்.
ஐக்கிய தேசியக் கட்சியினர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை விமர்சிக்கவில்லை. ஆரம்பித்தில் இருந்து சுதந்திர கட்சியினரே தலைமை அமைச்சரை தாறுமாறாக விமர்சித்தனர். நாம் பொறுமையுடன் இருந்தோம். இதன் காரணமாகவே பிரச்சினை ஏற்பட்டது.
எமது பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடும் ஆவேசம் அடைந்தனர். தற்போது எவரும் அரச தலைவர் மைத்திரிபாலவை விமர்சிக்கமாட்டார் கள். தலைமை அமைச்சர் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துள்ளார்-என்றார்.(5.61)

# நுவரெலியாவில் உறைபனி எதிர்பார்ப்பு

கொழும்பு, ஜன. 18
நாட்டின் சில பிரதேசங்களில் எதிர்வரும் தினங்களில் காலை நேரத்தில் பனிமூட்டம் எதிர்பார்க்கப்படுவதாகவும், நுவரெலியா மாவட்டத்தில் உறைபனி பொழியக் கூடும் எனவும் கூறப்பட்டுள்ளது.
நாட்டில் பெரும்பாலான மாகாணங்களில் சீரான காலநிலை நிலவும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. காலி மாவட்டத்தின் சில இடங்களில் மாலை இரண்டு மணிக்குப் பின்பு இடியுடன் கூடிய மழை பெய்யும். இதேவேளை, மேல் மற்றும் கேகாலை மாவட்டங்களில் அவ்வப்போது ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (5)

# ஜப்பான் நன்கொடை

கொழும்பு, ஜன. 18
கொழும்பு பல்கலைக் கழகத்தின் ஊடகக் கற்கைகள் பிரிவான சிறிபாலி பீடத்துக்கு ஒலி மற்றும் ஒளிக் கலையகத்தை அமைப்பதற்கு ஜப்பான் 12 மில்லியன் ரூபா வழங்கியுள்ளது. இதற்கான ஒப்பந்தத்தில் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் கெனிச்சி சுகனுமாவும் கொழும்பு பல்கலைக்கழக உப வேந்தர் லக்ஷமன் திசாநாயக்கவும் நேற்றுக் கைச்சாத்திட்டனர். (5)



# இளம் விவசாய உற்பத்தியாளர்களுக்கு 6.5 வட்டியில் கடன் வழங்கத் தீர்மானம்

விவசாயத்துறையை அபிவிருத்தி செய்வதற்காக இளம் விவசாய உற்பத்தியாளர்களுக்கு 6.5 சதவீத வட்டியில் கடன் வசதிகளை வழங்க அரசு தீர்மானித்துள்ளது.
நாட்டின் பிரதான விவசாயத்துறையை அபிவிருத்தி செய்வதற்காக சில்லறை உற்பத்தியாளர்களின் விவசாய நிலங்களை அபிவிருத்தி செய்வதுடன், வணிக மற்றும் சந்தை வாய்ப்பு துறையில் உற்பத்திகளுக்கான நிரந்தர கேள்வியை வழங்குவதுடன் குறித்த தொழில் வாய்ப்புக்களை முன்னிலைப்படுத்துவது அரசின் பிரதான நோக்கமாகும்.
இதனடிப்படையில் விவசாய வேளாண்மை துறையில் ஈடுபடுகின்ற சிறு உற்பத்திக் குழுக்கள் மற்றும் விவசாய குழுக்களுக்கு சிறு கடன் வசதிகளை வழங்க அரசு நிகழ்ச்சி திட்டங்களை முன்வைத்துள்ளது.
மைத்திரிபாலசிறிசேனவால் முன்வைக்கப்பட்ட திட்டங்களுக்கு அமைச்சரவையின் அனுமதி தற்போது கிடைக்கப்பெற்றுள்ளது. இதனடிப்படையில் நாட்டில் விவசாயத்துறையை பலப்படுத்தப்படுவதுடன், மக்களின் வாழ்க்கைத் தரமும் முன்னேற்றமடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (5.31)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 05 . 08 . 1966

உதிர்வு 19 . 12 . 2017

## அமரர் குமாரசாமி திருவரன்

(புள்ளி விபர உத்தியோகத்தர், புள்ளி விபரக்கிளை தொழில் திணைக்களம்)

எங்கள் அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வருகை தந்தும் தொலைபேசி, இணையம் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர்வளையங்கள், கண்ணீர் அஞ்சலிகள், பதாகைகள் மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும் இறுதி நிகழ்வுகளில் பங்குபற்றியோருக்கும் உதவிகள், ஒத்தாசைகள் புரிந்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (18.01.2018) வியாழக்கிழமை மு.ப 11.00 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

11 A/1, பொஸ்வெல் பிளேஸ்
கொழும்பு - 06
011 236 0659

குடும்பத்தினர்.

(IN 5544) (14.17)

# மரண அறிவித்தல்



மண்ணில் 09 . 02 . 1937

விண்ணில் 16 . 01 . 2018

## கந்தையா பாலசிங்கம்

(முன்னாள் மக்கள் வங்கி முகாமையாளர்)

யாழ் ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பாலசிங்கம் 16.01.2018 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி கந்தையா - சிவக்கொழுந்து தம்பதிகளின் மகனும் திரு. திருமதி சுந்தரம் - செல்லம்மா தம்பதிகளின் மருமகனும் யோகாம்பிகையின் அன்புக் கணவரும் ரவிராஜ்(கனடா), உஷாநந்தினி(கொழும்பு), உமாநந்தினி(சட்டத்தரணி - கனடா), அமிர்தராஜ் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் அனிற்றா(கனடா), ரகுராஜ்(சட்டத்தரணி), நிஷாந்தன்(சட்டத்தரணி), தனுஜா(கனடா) ஆகியோரின் மாமனாரும் பூஜிதா, சுவர்ணன், சுவர்ணமுகி, வாகின் ஆகியோரின் பாட்டனும் காலஞ்சென்றவர்களான கமலாதேவி, வடிவேலு மற்றும் நாகேஸ்வரி, சரோஜினிதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தவிர்க்கமுடியாத காரணங்களினால் கடந்த (16.01.2018) செவ்வாய்க்கிழமை அன்றைய தினமே கோப்பாய் வடக்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு: யோகாம்பிகை
01194 21 223 0019

(CS 12927) (14.17)

# மரண அறிவித்தல்

## வல்லிபுரம் பொன்னம்பலம்



சிறுப்பிட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் பொன்னம்பலம் 17.01.2018 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - தெய்வானைப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் ஆச்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவாநந்தன் மற்றும் மஞ்சுளாதேவி, தவமதி, கேதீஸ்வரன் (ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராஜமோகன், பாலேஸ்வரன், சிவானி (ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமனும் ஹரிகரன், ஹம்சத்வனன், புரசீசன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.01.2018) வியாழக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் சிறுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலி.

(CS 12991/15/17)

தகவல்: குடும்பத்தினர்.
077 667 0000

# நினைவலைகள்

31ஆம் நாள் நினைவஞ்சலி | 8ஆம் மாத நினைவில்



தோற்றம் 31.05.1942
மறைவு 18.12.2017



தோற்றம் 20.07.1934
மறைவு 14.05.2017

அமரர் நாகராசா மகேஸ்வரி

அமரர் வல்லிபுரம் நாகராசா
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

கடந்த (18.12.2017) திங்கட்கிழமை இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவி அமரர் நாகராசா மகேஸ்வரி அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (18.01.2018) வியாழக் கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12 மணியளவில் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிறுவிளான், இளவாலை. (AJA-9081) (11.17) குடும்பத்தினர்.

# கோல்டன் ஈகிள் K.T.(Pvt) LTD

## பதவி வெற்றிடங்கள்

1. கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (ஆண்கள்) 2. காரியாலய உதவியாளர்கள்
3. வாகனச் சாரதி 4. சுத்திகரிப்பாளர்கள் (பெண்கள்)

**01. கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்:**

a) கல்வித்தகைமைகள்: - க.பொ.த (சா.த) கற்றிருத்தல் வேண்டும்
b) உடற் தகைமை : - உயரம் - 5' 4", மார்பு - 32"

குறிப்பு: சாரணர்கள், விளையாட்டுத்துறை வீரர்கள், பாதுகாப்புசேவை அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

c) வயதெல்லை : - 19 வயது முதல் 55 வயதுவரை

**02. காரியாலய உதவியாளர்கள்:**

a) கல்வித்தகைமைகள்: - க.பொ.த (சா.த) சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
b) வயதெல்லை : - 20 வயது முதல் 30 வயதுவரை

**03. வாகனச்சாரதி**

a) கல்வித்தகைமைகள் : - க.பொ.த (சா.த) சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
b) வயதெல்லை : - 22 வயது முதல் 35 வயதுவரை
(சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.)

**04. சுத்திகரிப்பாளர் :**

a) கல்வித்தகைமைகள்: - ஆண்டு 8 கற்றிருத்தல் வேண்டும்.
b) வயதெல்லை : - 18 வயது முதல் 50 வயதுவரை

**05.தேவைப்படும் ஆவணங்கள்:**

1) கிராம அதிகாரியின் நற்சான்று பத்திரம்
2) தேசிய அடையாள அட்டை
3) பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
4) கல்வித் தராதரப் பத்திர
5) மேற்கூறிய ஆவணங்களின் மூலப்பிரதியுடன் போட்டோ பிரதியும் கொண்டு வருதல் வேண்டும்

**06. சம்பளம்:**
1) கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்
2) ஊழியர் சேமலாபநிதியம் + ஊழியர் நம்பிக்கை நிதியம் வழங்கப்படும். (EPF + ETF)

**நேர்முகப் பரீட்சை:** கீழ்க்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் பின்வரும் திகதிகளில் **முற்பகல் 10.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை நேர்முகப் பரீட்சை நடைபெறும். சகலஆவணங்களுடன் சமுகம் கொடுக்கவும்.**

**22.01.2018 திங்கட்கிழமை , 23.01.2018 செவ்வாய்க்கிழமை**

(AJA/IN/005560/16/17)

**கோல்டன் ஈகிள் K.T.(Pvt) LTD**
**இல.758, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

# சேவை நலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்



## திரு. சுப்பிரமணியம் சிவபாதம்

B.Sc. (Hons), Dip.in Edu, SLTS - I )

(ஆசிரியர் - யா/ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)

**30 வருட ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வுபெற்று**

**இன்று (18.01.2018) வியாழக்கிழமை மணிவிழாக்காணும்**

உயர்திரு. **சுப்பிரமணியம் சிவபாதம்**

அவர்களை வாழ்த்துவதுடன் அவரது ஓய்வுக் காலம் மகிழ்ச்சியானதாக அமைய இறைவனைவேண்டுகின்றோம்.

**சிவகுரு வீதி,**
**கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில்.**

*அன்புடன் வாழ்த்தும்,*
**அத்தான், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(in 9094) (13.17)

# மணிவிழா வாழ்த்து

## சுப்பிரமணியம் சிவபாதம்

BSc (Management) PGDE

ஆசிரியர் யாழ்.மத்திய கல்லூரி



எமது அன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய

**திரு.சுப்பிரமணியம் சிவபாதம் (அத்தான்)**

இன்று (18.01.2018) வியாழக்கிழமை தனது

**60 ஆவது பிறந்தநாளைக்** கொண்டாடும்

இவ்வேளையில் இவரை சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-

திரு-திருமதி வாகீஸ்வரன் ஜெயதர்சினி
திரு-திருமதி ஜெயறூபன் ஜெயவதனி (கனடா)
திரு-திருமதி ஜெயக்காந்தன் நந்தினி (கனடா)
திரு-திருமதி ஜெகநாதன் சுதர்சினி (கனடா)
திரு-திருமதி ஜெயானந்தன் மேஜா (நியூசிலாந்து)
திரு-திருமதி துரைசிங்கம் நவமணி

(CS/12917) (11.17)

# மத்தியின் மணிவிழா நாயகனை

## மனதார வாழ்த்துகின்றோம்

### நண்பனாய், பண்பாளனாய்.......




திரு.சுப்பிரமணியம் சிவபாதம் அவர்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் 17 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெறும் இந்நாளில் வாழ்த் துக்கூறும் வாய்ப்பினை எண்ணிப்பார்க்கிறேன். மிக நீண்டகால நண்பரான இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எனக்கு ஒரு சிரேஸ்ட மாணவராவார். அப்போது அவரது அன்பைப் பெற்று பின் பணியின் போதும் நட்புறவு தொடர வாய்ப்புக்கிட்டியது. நற்பண்பும் நல்லொழுக்கமும் கொண்ட நண்பனுக்கு அதிபராகி அவரது ஓய்வுக் காலத்தில் வாழ்த்தி பிரியாவிடை கொடுக்கும் இந் நாளில் அன்றைய நினைவுகள் பசுமையாக நிழலாடுகின்றன. " உறவும் பிரிவும் உலக நியதிதான் "

ஓய்வு பெறும் இக்காலத்திலும் வர்த்தகப்பிரிவில் வர்த்தகபாட ஆசிரியராகவும், பகுதித்தலைவராகவும் பணியாற்றி கல்லூரிக்கு சிறந்த பெறுபேற்றை பெறவைத்து பெருமை சேர்த்தார்.

அவரது சிறந்த பணிக்கும் காட்டிய அன்பிற்கும், வாழ்ந்து காட்டிய நல்லொழுக்கத்திற்கும், பண்புக்கும் எனக்கு முன்னவனாக எண்ணி மகிழ்ந்து வாழ்க வளமுடன், குடும்பம் சிறப்புற வேண்டும். அவருக்கும், அவரது இனிய துணைக்கும், பிள்ளைகளுக்கும் இறையருள் வேண்டி வாழ்த்துகிறேன்.

**திரு.சி.க.எழில்வேந்தன்**
**யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி**
**அதிபர்.**

### பண்பின் உறைவிடம்



நாடுபூராகவும் நன்மாணாக்கர்களை உருவாக்கும் நடமாடும் தெய்வங்களே ஆசிரியர்கள். இப் புனிதமான தொழிலை 2000 ஆம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் வணிகத்துறையில் ஆசிரியராகவும் பணியாற்றிய பகுதித்தலைவர் திரு.சு.சிவபாதம் அவர்களை ஆசிரியர் வட்டம் சார்பில் வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன். மத்திய கல்லூரியில் வணிகத்துறை நோக்கி வரும் மாணவர்களை மகிழ்வுடன் வரவேற்று அம்மாணவர்களின் வளர்ச்சியிலும் விருத்தியிலும் வித்திட்டவர் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. சிறியவர் முதல் பெரியவர் வரை எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் மென்மையான பேச்சாலும் ஆலோசனையாலும் அனைவரது உள்ளங்களில் இடம்பிடித்த இவர் "சேவையின் முடிவு ஓய்வு" என்பது உலக நியதி. அந்த வகையில் தனது சேவைக்காலத்தை சிறப்புறப் பணியாற்றி ஓய்வு பெறும் இவரது ஓய்வுக் காலம் மிகவும் சிறப்பாக அமைய இறைவனை வேண்டுகின்றோம்.

**சோ.பரணீதரன்**
**தலைவர்**
**ஆசிரியர் வட்டம்**
**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.**

### உயர் திரு. சு. சிவபாதம்

**(B.Sc Management, P.G.D.E)**

**பகுதித்தலைவர் (வணிகத்துறை)**

**S.L.T.S - I**



| | |
|---|---|
| **தந்தை** | : பொன்னையா சுப்பிரமணியம் |
| **தாய்** | : சுப்பிரமணியம் பரிமளம் |
| **பிறந்ததிகதி** | : 1958.01.18 |
| **பிறப்பிடம்** | : கொக்குவில் மேற்கு, கொக்குவில் |
| **ஆரம்பக்கல்வி** | : கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாலயம் |
| **இடைநிலைக்கல்வி** | : கொக்குவில் இந்துக்கல்லூரி |
| **உயர்பட்டப்படிப்பு** | : விஞ்ஞானமாணி (முகாமைத்துவம்) யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் |
| **தொழிற்தகைமை** | : பட்டப்பின் கல்வி டிப்ளோமா தேசிய கல்வி நிறுவனம். |

**சேவை விவரம்**

நீர்கொழும்பு விஜயரட்ணம் இந்து மகா வித்தியாலயம்
20.01.1989 - 02.01.2000

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
03.01.2000 - 18.01.2018

**ஆசிரியர் வட்டம் 2018**
**யாழ். மத்திய கல்லூரி**

### வாழ்த்துச் செய்தி




பிறரை வாழ வைக்க பலர் வழிகாட்டும் தொழில்கள் பலப்பல. பரம்பரையாகப் பயின்றும், திறன்பட முயன்றும் தேடும் தொழில்கள் தெய்வம் தான். தொழில் செய்து தெய்வங்களாகப் போற்றப்படுபவர்கள் ஆசிரியர்கள். பண்பும் பணிவும் அன்பும் கொண்டு அறியாமையை அகற்றி நல்லறிவைப் பெற்ற நன்மாணாக்கர்கள் ஆசிரியர்களை நடமாடும் தெய்வங்களாகப் போற்றுகின்றனர். குனிந்து குருபாதம் தொட்டுப் கும்பிட்டு குழைந்துருகும் மாணவர்களை தனது சிறந்த சேவையால் சீரிய நெறியில் வழிப்படுத்தியவர் சுப்பிரமணியம் சிவபாதம் அவர்கள்.

கொக்குவிலில் பிறந்து வளர்ந்து பயின்று பல்கலைக்கழகம் புகுந்து விஞ்ஞானமானிப் பட்டம் பெற்று நீர்கொழும்பு விஜயரட்ணம் மகா வித்தியாலயத்திலும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும் கற்பித்து அதன்பின் படிப்பறிவுடன் பட்டறிவும் பக்குவமாய் சேர்ந்து உயர்ந்து பகுதித் தலைவராய் பணியை நிறைவு செய்து ஓய்வு பெறும் சுப்பிரமணியம் சிவபாதம் அவர்களின் ஓய்வுக்காலமும் சிறப்புற்று பல்லாண்டு காலம் வாழ சிவனருள் பாலிக்க வேண்டி வாழ்த்துகின்றேன்.

**நா.தெய்வேந்திரராஜா**
**வலயக்கல்விப் பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம்.**

### வாழ்த்துச் செய்தி



கல்வித் துறையில் இருநூற்றாண்டு கால பாரம்பரியத்தைக் கொண்ட யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஆசிரியராகவும், பகுதித் தலைவராகவும் சிறப்புற பணியாற்றிய திரு. சுப்பிரமணியம் சிவபாதம் அவர்கள் வணிகத் துறையில் சீரிய பணியாற்றியவர் ஆவார். தன்னடக்கமும் பணிவும், பண்பான பேச்சும் கொண்ட இவர் வணிகத்துறையில் எவ்வித பாரபட்சமின்றி மாணவர்களுக்கு பணியாற்றி பல மாணவர்களின் முன்னேற்றத்திற்கு ஏணியாக இருந்தார். இவர் கல்வித்துறையில் ஓய்வு பெறுவது என்பது மாணவர்களுக்கும் பாடசாலைச் சமூகத்திற்கும் பேரிழப்பாகும். அவரது ஓய்வுக்காலம் அமைதியானதாகவும் இன்பமானதாகவும் அமைய இறைவனை வேண்டுகின்றேன்.

**திரு.சி.தேவகுமாரன்**
**கோட்டக்கல்விப் பணிப்பாளர்**
**கோட்டக்கல்வி அலுவலகம்**
**யாழ்ப்பாணம்.**

(C)(2934)(14.17)

# மாங்குளம், புதுக்குடியிருப்பில் யானைகளால் வயல்கள் நாசம்

## பொலிஸார் வழங்கிய வெடியால் பயனில்லை

முல்லைத்தீவு, ஜன.18

முல்லைத்தீவு மாவட்டத்தில் காட்டுயானைகளால் தொடர்ச்சியாக நெல்வயல்கள் துவம்சம் செய்யப்பட்டு வருகின்றன. மாங்குளம் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கடந்த சில நாட்களுக்குள் பல ஏக்கர் நெல்காணிகள் அழிக்கப்பட்டுள்ளன. யானைகளை விரட்டுவதுக்காக பொலிஸாரால் வழங்கப்பட்ட வெடிகளும் பயனளிக்கவில்லை. வெடிச்சத்தம் கேட்டாலும் யானைகள் அச்சமின்றி நிற்கின்றன. நாம் பலத்த நட்டத்துக்கு முகம்கொடுத்துள்ளோம் என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

மாங்குளத்தின் கிழவன்குளம் பகுதியில் சுமார் 20 ஏக்கர் நெல்காணிகள் காட்டுயானைகளால் துவம்சம் செய்யப்பட்டுள்ளன. இதனால் எமக்கு பல லட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

கடந்த சில நாட்களாக கிழவன்குளம் காட்டுப் பகுதியில் காட்டுயானைகளின் நடமாட்டம் அதிரித்துள்ளது. வயல்களுக்குள் நுழைந்து பயிர்களை நாசப்படுத்துகின்றன. காவலுக்கு இருந்த விவசாயிகளையும் துரத்திச் சென்று தாக்கவருகின்றன. விவசாயிகள் பலர் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர்.

இதுதொடர்பாக நாங்கள் அதிகாரிகளிடமும், பொலிஸ் மற்றும் இராணுவத்திடமும் முறைப்பாடு செய்தோம். மாங்குளம் பொலிஸார் எமக்கு சத்த வெடிகளை வழங்கினர். ஆனாலும் அந்த சத்தவெடிகளுக்கு யானைகள் பயப்படுவதில்லை.

அரச வங்கிகள் மற்றும் தனியாரிடம் பெற்ற கடனை மீளச் செலுத்த முடியாத அவல நிலையை நாம் எதிர்நோக்கி யுள்ளோம்- என்றனர்.

இதேவேளை, புதுக்குடியிருப்பு இடைக்காட்டுப் பிரதேசத்தில் கடந்த இருநாட்களுக்குள் காட்டுயானைகளால் சுமார் பத்து ஏக்கர் வயல்கள் அழிக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக பிரதேச செயலக அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்தும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்று விவசாயிகள் குறிப்பிட்டுள்ளனர். (ய-500)



# வவு. பேருந்து நிலையத்தில் சரிந்து வீழ்ந்தது மின்கம்பம்

வவுனியா, ஜன.18

வவுனியா புதிய பேருந்து நிலைய வளாகத்தில் உள்ள மின்கம்பம் ஒன்று நேற்று முன்தினம் இரவு திடீரென சரிந்துவிழுந்துள்ளது. தெய்வாதீனமாக எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

வவுனியாவில் 195 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட புதிய பேருந்து நிலையம் கடந்த ஆண்டு திறந்துவைக்கப்பட்டது. பல சர்ச்சைகளுக்கு மத்தியில் கடந்த முதலாம் திகதியிலிருந்து இங்கு சேவைகள் இடம்பெற்று வருகின்றன. பேருந்து நிலையம் அமைக்கப்பட்டு ஒருவருடமே ஆகியுள்ளது. இந்தநிலையில் இவ்வாறு மின்கம்பம் சரிந்து விழுந்துள்ளது. இச்சம்பவமானது பலரையும் பல கோணங்களில் யோசிக்கச் செய்துள்ளது. கட்டுமானப்பணிகளில் ஊழல்கள் இடம்பெற்றிருக்கலாம் என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது எனப் பயணிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. (ய-4)

# அரசினது கட்டடங்களுக்கும் உள்ளூராட்சி சபைகளின் அனுமதி வேண்டும்

யாழ்ப்பாணம், ஜன.18

வடக்கு மாகாணத்தில் அமைக்கப்படும் அரச கட்டடங்களுக்கும் உள்ளூராட்சி அதிகாரசபைகளிடம் அனுமதி பெற்றுக் கொள்வது கட்டாயமானது என்று திணைக்களங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என உள்ளூராட்சி ஆணையாளர் எம்.பற்றிக் டிறஞ்சன் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களின் தேவைகளைக் கருத்தில்கொண்டு அமைச்சுக்கள், திணைக்களங்கள் பல்வேறு கட்டட வேலைகளை மேற்கொண்டு வருகின்றன. இதுக்கான காணிகள் கொள்வனவு செய்யப்பட்டு வேலைகள் நடைபெறும். இந்த வேலைகள் நடைபெறும் காணிகள் அரசுக்குச் சொந்தம் என்பதால் அதுக்கான அனுமதியை அந்தந்தப் பகுதிகளுக்குரிய உள்ளூராட்சி சபைகளிடம் பெறுவதில்லை. ஆனால் அந்தக் காணிகள் சபையின் கீழ் பதியப்பட்டு இருக்கலாம். வேறு தேவைக்கு வழங்கக்கூடிய நிலையிலும் இருக்கலாம்.

அதனால் கட்டடங்கள் கட்டுவதுக்கு முன்னர் அதுக்கான அனுமதியைப் பெறுவதன்மூலம் இந்தப்பிரச்சினைகளைத் தவிர்த்துக்கொள்ளலாம். இவ்வாறு அனுமதி பெறாமல் அமைக்கப்படும் கட்டடங்கள் தொடர்பில் எமக்கு அறியதரப்பட்டது. மக்கள் காணிகளைப் பெற்று கட்டடம் அமைப்பதுக்கு உரிய வழிமுறைகளைப் பின்பற்றுகின்றார்கள். எனவே, அதேபோல அரச திணைக்களங்களும் பின்பற்றுவது சிறந்தது. இதுதொடர்பில் அனைத்து திணைக்களங்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது-என்றார். (ய-ரி)

# கேணல் கிட்டு உள்ளிட்ட பத்து மாவீரர்களின் நினைவு நிகழ்வு

முல்லைத்தீவு,ஜன.18

கேணல் கிட்டு உள்ளிட்ட பத்து மாவீரர்களின் 25 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு ஜனநாயக போராளிகள் கட்சியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நினைவு கூரப்பட்டது.

வங்க கடலில் வீரகாவிய மான கேணல் கிட்டு உள்ளிட்ட பத்து மாவீரர்களின் 25 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு புதுக்குடியிருப்பு கைவேலிப்பகுதியில் அமைந்துள்ள ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைமை அலுவலகத்தில் ஜ.போ.கட்சியின் மகளீர் பிரிவினை சேர்ந்த ராதா தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பெருமளவான மக்கள் கலந்துகொண்டு வணக்கம் செலுத்தினர்.

இந்த நிகழ்வில் நினைவுரை நிகழ்த்திய தமிழ் அரசுக் கட்சியின் முதன்மை வேட்பாளர் ஜனமேஜந், தமிழ்தேசிய பாதையில் ஜனநாயக போராளிகள் கட்சியும் தங்களை இணைத்துக் கொண்டு தமிழ்தேசியக்கொள்கைநோக்கி பயணிக்கின்றார்கள் என்று தெரிவித்தார்.

(ற-ரி5-ரி3)



# பாடசாலைகளுக்கு மாணவர்களை இணைப்பதில் அரசியல் தலையீடு

## சுட்டிக்காட்டுகிறது தமிழர் ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், ஜன.18

பாடசாலைகளுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் செயற்பாட்டில் அரசியல் தலையீடுகள் காணப்படுகின்றன. அரசியல் தலையீடுகளுக்கு அதிபர்கள் இடம்கொடுக்கக் கூடாது என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

குறிப்பிட்ட சில பாடசாலைகளில் தமக்கு வேண்டப்பட்டவர்களின் மாணவர்களை இணைத்துக்கொள்ளுமாறு அதிபர்களை வற்புறுத்தி கடிதங்கள் மூலமும், தொலைபேசி வாயிலாகவும் சில அரசியல்வாதிகள் அழுத்தங்களைப்பிரயோகித்துவருகின்றனர் என எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவ்வாறான செயற்பாடுகளுக்கு அதிபர்கள் இடங்கொடாமல் இறுக்கமான நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

வடக்கு மாகாணத்தில் சில அரசியல் கட்சியின் உயர் மட்ட தலைவர்கள் சிலர் முன்னணிப் பாடசாலைகளில் மாணவர்களை இணைத்துக்கொள்ளும் உரிய நடைமுறைகளைப் புறந்தள்ளிச் செயற்படுகின்றனர். சில அரசியல் கட்சிகளின் உயர்மட்டத் தலைவர்கள் சிலர் தமக்கு வேண்டியவர்களின் பிள்ளைகளுக்கு அனுமதி வழங்குமாறு வற்புறுத்துகின்றனர். கடிதம் மூலமுமாகவும், தொலைபேசி வாயிலாகவும் அதிபர்களுக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றனர் என எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கின்றன.

வடமராட்சி கல்வி வலயத்தில் உள்ள ஒரு பாடசாலைக்கு மாணவர்களை அனுமதிக்குமாறு கடிதமூலம் கோரியிருக்கின்றனர். அங்கு பலத்த நெருக்கடி நிலை உருவாகியிருப்பதாக கூறப்பட்டுகின்றது.

உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் தங்களின் கட்சி சார்ந்த அல்லது தங்களின் கட்சிக்காக ஆள்களைத் திரட்டும் நோக்கோடு இத்தகைய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இது முறைகேடா? குற்றமா? என்ற கேள்விகளை சமூகத்தில் உள்ளவர்கள் கேட்டு நிற்கின்றனர்.

இந்தவிடயம் தொடர்பில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு அரசியல் தலையீடுகளுக்கு இடம்கொடுக்காமல் நடந்து கொள்வது பாராட்டப்படவேண்டியது. அத்தகைய நடைமுறையை மிகவும் இறுக்கமாகக் கடைப்பிடிக்குமாறு சங்கம் வேண்டுகோள் விடுக்கிறது - என்றுள்ளது. (ய-4)

# மெய்வன்மை போட்டிகளை ஜனவரி 30ஆம் திகதிக்குள் நடத்திமுடிக்குமாறு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.18

வடக்கு மாகாணப் பாடசாலைகள் எதிர்வரும் ஜனவரி மாதம் 30ஆம் திகதிக்குள் இல்ல மெய்வன்மைப் போட்டிகளை நடத்தி முடிக்கவேண்டும் என்று மாகாணக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணப் பாடசாலைகளின் நடப்பு ஆண்டுக்கான இல்ல மெய்வன்மைப் போட்டிக்கான பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தப் போட்டிகள் மிகவும் முக்கியம் வாய்ந்த நிகழ்வாகும். பாடசாலை மட்டப் போட்டிகளில் வெற்றிபெறுபவர்கள் அதன் தொடர்ச்சியாக வலயம், மாகாணம், தேசியம் என்று பிரகாசிக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு. ஆகவே இந்தப் போட்டிகளுக்கான பயிற்சிகள் தற்பொழுது பாடசாலைகளில் காலையிலும், மாலையிலும் நடைபெற்று வருகின்றன.

இந்தப் போட்டிகளை ஜனவரி மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவுசெய்ய வேண்டும். தவணைப் பரீட்சைகள் மற்றும் வலயமட்டப் போட்டிகளைக் கருத்தில் கொண்டு மேல்குறிப்பிட்ட திகதிக்குள் போட்டிகளை முடிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ய-ரி)

# முன்னாள் போராளிகளுக்கு 10,000 ரூபா

## பதிவுசெய்யுமாறு கோரப்படுகின்றனர்

யாழ்ப்பாணம், ஜன.18
மறுவாழ்வுவழங்கப்பட்ட முன்னாள் போராளிகளில் தனியார் துறையில் பணியாற்றிவருவோருக்கு 10 ஆயிரம் ரூபா உதவித் தொகை வழங்கப்படவுள்ளது. அதற்கான பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ்ப்பாண மாவட்ட மறுவாழ்வுக் கிளையின் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:
மறுவாழ்வு வழங்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்ட முன்னாள் போராளிகளில் தனியார்நிறுவனங்களில் பணியாற்றுவோருக்கு 10 ஆயிரம் ரூபா உதவித் தொகை வழங்க வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டது.

அந்த உதவித்தொகையை யாழ்ப்பாண மாவட்டத்தில் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பதிவுசெய்யப்பட்ட தனியார் நிறுவனங்களில் பணியாற்றும் முன்னாள் போராளிகள் இந்த உதவித்தொகையைப் பெற முடியும். பணியாற்றும் நிறுவனத்தால் அவர்களுக்கு ஊழியர் சேமலாப நிதித் தொகை செலுத்தப்பட்டிருக்கவேண்டும் என்பது கட்டாயம்.

இந்த விடயங்கள் பின்பற்றப்படும் தனியார் நிறுவனங்களில் பணியாற்றும் மறுவாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் தமது விவரங்களை யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்திலுள்ள மறுவாழ்வுக் கிளையில் பதிவு செய்ய வேண்டும்.

தகுதியானவர்களுக்கான 10 ஆயிரம் ரூபா உதவித்தொகை அவர்கள் பணியாற்றும் நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்கப்படும் என்றார். (ய-106)

# புதிய பேருந்து நிலையத்துக்கு பயணிப்பதில் பயணிகள் திண்டாட்டம்

## மாற்று ஏற்பாடு வேண்டும் எனக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.18
வவுனியாவில் பழைய பேருந்து நிலையத்துக்கும் புதிய பேருந்து நிலையத்துக்கும் இடையில் காணப்படும் தூர வித்தியாசத்தினால் தாம் கடும் சிக்கலை எதிர்கொண்டுள்ளனர் எனப் பயணிகள் தெரிவிக்கின்றனர். நேரடியாகப் பயணம் செய்வதுக்கு எவ்வித நடவடிக்கையும் இல்லை. விரைவில் மாற்று நடவடிக்கை வேண்டும் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

வவுனியாவில் புதிய பேருந்து நிலையம் ஆரம்பிக்கப்பட்டதும் பழைய பேருந்து நிலையப் பணிகள் நிறுத்தப்பட்டன. அதனால் பழைய பேருந்து நிலையத்திலிருந்து தற்போது எந்தவொரு பேருந்துகளும் சேவையில் ஈடுபடுவதில்லை.

பழைய பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 2 கிலோமீற்றர் தூரத்தில் புதிய பேருந்து நிலையம் அமைந்துள்ளது. புதிய பேருந்து நிலையத்தினுள் வடக்கு மாகாணத்தின் அரச, தனியார் பேருந்துகள் தவிர பிற மாகாணங்களின் பேருந்துகள் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அதனால் பிற மாகாணங்களிலிருந்து வவுனியாவுக்கு வரும் பயணிகள் சிக்கலை எதிர்கொண்டுள்ளனர்.

பழைய பேருந்து நிலையத்திலிருந்து புதிய பேருந்து நிலையத்துக்கு தனியார் பேருந்து ஒன்று சேவையில் ஈடுபடுகிறது. அது இலவச சேவையை நடத்தினாலும் உரிய நேரத்துக்குப் புறப்படுவதில் சிக்கல் காணப்படுகிறது.

பேருந்தின் ஆசனங்கள் அனைத்தும் நிறைவடைந்த பின்னரே அது புறப்படுகிறது. அதனால் காலதாமதம் நிலவுகிறது. மணிக்கணக்கில் பயணிகள் காத்திருக்க வேண்டியுள்ளது. அதனால் உரிய மாற்று ஏற்பாடு தேவை என்று பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதுதொடர்பில் அரச பேருந்துகளின் அதிகாரிகளுடனும் தனியார் பேருந்துகளின் சங்கத்துடனும் தொடர்பை ஏற்படுத்தியபோதும் பதில் கிடைக்கவில்லை. (ய-4)

# வெளிநாட்டு மணமகனைக் கைவிட்டு வாகனச்சாரதியுடன் சென்ற மணமகள்!

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா, ஜன.18
வவுனியாவில் பெண்ணொருவர், வெளிநாட்டுக் கணவனை வேண்டாம் எனத் தெரிவித்துவிட்டு, திருமணத்துக்கு வந்த வாகனச்சாரதியுடன் காதல்வயப்பட்டு சென்ற சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதுதொடர்பில் தெரிவிக்கப்பட்டதாவது:
வவுனியா மகாறம்பைக்குளம் பகுதியில் கடந்த 7 மாதங்களுக்கு முன்னர் வெளிநாடு ஒன்றிலிருந்து வந்த மணமகன் அப்பகுதியில் பெண் ஒருவரைத் திருமணம் முடித்தார். மனைவியை தாயாருடன் வீட்டில் விட்டுவிட்டு வெளிநாட்டுக்குச் சென்று மணப்பெண்ணை எடுப்பதுக்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்தநிலையில் இங்கு கடந்த 7மாதங்களாக வசித்து வந்த குறித்த மணப்பெண் தனது திருமணத்துக்கு வாடகைக்கு அமர்த்தப்பட்ட வாகனச் சாரதிடன் சென்றுவிட்டார் என்று மணப்பெண்ணின் உறவினர்கள் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

இருவரையும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்த பொலிஸார் மணப்பெண்ணின்விருப்பத்தைக்கேட்டனர். அப்போது மணப்பெண் வெளிநாட்டு மணமகன் தேவையில்லை என்றும், அவருடன் நடைபெற்ற திருமணத்தை இரத்துச் செய்துவிட்டு தனது காதலனுடன் வாழ விரும்புவதாகத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் ஆராய்வதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ய-4)

# வடக்கு மருத்துவமனைகளில் சேவை, உடல்கூற்று பரிசோதனை நேரங்களை காட்சிப்படுத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜன.18
வடக்கு மாகாண மருத்துவமனைகளில் சேவை வழங்கல் நேரத்துடன் உடல்கூற்று பரிசோதனை நேரத்தையும் காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாண மருத்துவமனைகளில் பல்வேறு வகையான மருத்துவப் பிரிவுகள், சேவைகள் நடைபெற்று வருகின்றன. பௌதீகரீதியில் அதிகளவான கட்டடங்களில் அதிகசேவைகள் நடைபெறுகின்றன. இதனால் எந்த நேரத்தில் எந்த சிகிச்சைப் பிரிவு திறந்திருக்கும், அதற்கு எவ்வாறு செல்ல வேண்டும் என்பது தொடர்பில் பொதுமக்கள் தடுமாறுகின்றனர்.

இதற்கு மருத்துவமனைகளில் தெளிவான விளக்கங்கள் போதாமல் உள்ளன.

இதனால் நோயாளர்கள் சிகிச்சை பெறுவதற்கு எங்கே என்ன நேரத்தில் செல்வது, வெளிநோயாளர் பிரிவு எங்கே உள்ளது என்பது தொடர்பில் குழப்ப நிலையை அடைகின்றனர்.

எனவே, இதனை நிவர்த்தி செய்வதுக்காக வடக்கு மாகாணத்தில் உள்ள மருத்துவமனைகளில் சேவைகள் மற்றும் அவை நடைபெறும் நேரங்கள் போன்ற விளக்கங்களை உள்ளடக்கிய விவரங்களைக் காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுதவிர உடல்கூற்று பரிசோதனை நடைபெறும் நேரத்தையும் காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உடல்கூற்றுப் பரிசோதனையானது சூரியவெளிச்சம் உள்ளபோதே மேற்கொள்ள வேண்டும் என்ற முறைமை உள்ளது.

ஆனால் மக்கள் தமது அவசரத்துக்காக மாலை வேலைகளிலும் உடல்கூற்றுப் பரிசோதனையை செய்து சடலங்களைத் தருமாறு கோருவார்கள். அந்த முறைமை தவறு.

இதனால் மருத்துவர்களும் நெருக்கடிக்கு உள்ளாகின்றனர். மாலை 6 மணிவரையே இதனை மேற்கொள்ள முடியும். அப்போது வெளிச்சம் இருக்கும். எனவே, இதனைக் கருத்தில்கொண்டு ஏனைய மருத்துவ சேவை நேரத்துடன் உடல்கூற்று பரிசோதனை நேரத்தையும் காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ய-ரி)

# சிறுமியை வன்புணர்ந்தவருக்கு இரண்டு வருடம் கடூழியச்சிறை

## யாழ்ப்பாண மேல்நீதிமன்று தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன.18
சிறுமியை வன்புணர்ந்தவருக்கு யாழ்ப்பாண மேல்நீதிமன்று இரண்டுவருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்து நேற்றுத் தீர்ப்பித்தது.

கிளிநொச்சி பொலிஸ்பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 2012 ஆம்ஆண்டு இக்குற்றச்செயல் இடம்பெற்றது. சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுப் பின்னர் பிணையில்விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்த வழக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தால் யாழ்ப்பாண மேல்நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டது. வழக்கு நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் விசாரிக்கப்பட்டு வந்தது. சந்தேகபர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டது.

அதனையடுத்து அவருக்கு 2 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

தவிர பாதிக்கப்பட்ட சிறுமிக்கு இழப்பீடாக 25 ஆயிரம் ரூபா செலுத்தவேண்டும் என்றும் செலுத்தத் தவறின் மேலும் 3 மாதங்கள் சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது. தண்டமாக 5 ஆயிரம் ரூபா விதிக்கப்பட்டது. அதனைச் செலுத்தத் தவறின் மேலும் ஒருமாத சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

இதேவேளை, சிறுமியை வன்புணர்ந்த 18 வயதுக்கு உட்பட்ட சிறுவன் ஒருவனுக்கு ஒத்தி வைக்கப்பட்ட 2 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பகுதியில் 2012 ஆம்ஆண்டு குற்றச் செயல் இடம்பெற்றது. சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுப் பின்னர் பிணையில் விடு விக்கப்பட்டிருந்தார். யாழ்ப்பாண மேல்நீதிமன்றுக்கு வழக்கு பாரப்படுத்தப்பட்டது. சந்தேகபர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டதை அடுத்து அவருக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்து நீதிபதி மா.இளஞ்செழியன் தீர்ப்பளித்தார்.

தவிர பாதிக்கப்பட்ட சிறுமிக்கு இழப்பீடாக 50 ஆயிரம் செலுத்தவேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது. (ய-4)

# காணி ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணிகளை அடையாளப்படுத்தும் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.18
வடக்கு மாகாணத்தில் காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணிகளை அடையாளப்படுத்தும் பணிகள் இடம்பெற்று வருகின்றது என வடக்கு பிராந்திய காணிச் சீர்திருத்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எவ்வளவு ஏக்கர் காணிகளைப் பொதுமக்கள் கையகப்படுத்தியுள்ளனர் என்பது அளவிட்டபின்னரே தெரிய வரும் என்றும் ஆணைக்குழு தெரிவித்தது.

இதுபற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது.
1972ஆம் ஆண்டு முதலாம் இலக்க காணி உச்சவரம்பு சட்டத்தின் பிராகாரம் பொது நபர் வைத்திருக்கக் கூடிய ஆகக்கூடிய உச்ச அளவு 50 ஏக்கர் ஆகும். அதற்கு மேல் ஒருவர் வைத்திருந்தால் அதனை ஆணைக்குழு சுவீகரிப்பதற்கு அதிகாரம் உண்டு.

கடந்த போர்க் காலங்களில் ஆணைக்குழுவின் அலுவலகம் இயங்காமல் இருந்த வேளையில் குறித்த காணிகளை மக்கள் அடாத்தாகக் கைப்பற்றியுள்ளனர். அத்துடன் அவர்கள் கைப்பற்றும் காணிகளுக்கு தனிப்பட்ட ரீதியில் உறுதிகளையும் தயாரித்து வருகின்றனர். அத்துடன் உரிமைமாற்றம் செய்தும் வருகின்றனர். அது சட்டரீதியானது இல்லை. காணிகளுக்கு எம்மால் வழங்கப்படும் ஆவணங்கள் மாத்திரமே சட்ட ரீதியானது. அத்துடன் எமது ஆணைக்குழுவின் காணிகளைப் பிடித்து அவற்றில் மண் அகழ்தல், மரம் வெட்டுதல் போன்ற சட்ட விரோத நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றனர்.

ஆணைக்குழுவுக்குச் சொந்தமான 2 ஆயிரம் ஏக்கர் காணிகள் வடக்கில் உள்ளது. ஆனால் மக்களின் தேவை கருதி குடியிருப்பு மற்றும் பயிர்ச்செய்கைக்காக அந்தக் காணிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் பல ஏக்கர் காணிகளை அனுமதி பெறாமல் மக்கள் வைத்துள்ளனர்.

போர்ச்சூழலின் போது இந்தக் காணிகள் தொடர்பில் அளவீடுகள் நடைபெறவில்லை. அணைக்குழுவிக்குச் சொந்தமான காணிகள் தற்பொழுது அடையாளப்படுத்தும நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

அதன்பின்னர் பிரதேச செயலகப் பிரிவின் அடிப்படையில் காணிகள் அளவிடப்படும். அதன் பின்னரே ஆணைக்குழுவிக்குச் சொந்தமான எவ்வளவு காணிகள் மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்று கண்டுபிடிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.. (ய-ரி)



# கோரிக்கை நிறைவேற்றாமையை எதிர்த்து ஊழியர்கள் போராட்டம்

மட்டக்களப்பு,ஜன.18

கிழக்குப் பல்கலைக் கழக கல்விசாரா ஊழியர்கள் ஆறு அம்சக் கோரிகைகளை முன்வைத்து பல்கலைக் கழக வந்தாறுமூலை வளாக முன்றில் நேற்றுக் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஊழியர்களின் மாதாந்தக் கொடுப்பனவை 5 வருடத்துக்குள் 100 சதவீதமாக அதிகரிப்பது தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தை 2018 ஜனவரி மாதத்திலிருந்து 20 சதவீதமாக அதிகரிக்கப்பட வேண்டியிருப்பினும் இது தொடர்பான சுற்று நிருபம் இதுவரை வெளியிடப்படவில்லை.



2017 ஜீன் மாதம் 15ஆந் திகதி மானியங்கள் ஆணைக்குழு சுற்றுநிருபம் மூலம் ஒரு சாராருக்கு மாத்திரம் 15 சதவீதம் கொடுப்பனவு வழங்கப்பட்டதுடன் அந்தக் கொடுப்பனவானது இதுவரையிலும் கல்விசாரா ஊழியர்குழுவினருக்கு வழங்குவதற்கு நடவடிக்கையெடுக்காமை.

கொடுப்பனவு 2016.01.01மீளச்சீர் திருத்தல் செய்யப்பட்டு வழங்க நடவடிக்கையெடுக்காமை. நிறுத்தப்பட்டிருந்த மொழிதிறன் கொடுப்பனவை மீண்டும் வழங்க இதுவரையில் நடவடிக்கையெடுக்காமை.

பல்கலைக்கழக அமைப்புக்களிடையே அறிமுகப்படுத்தப்பட்ட சொத்துக்கள் கடன் திட்டத்தில் பாதி அளவிலான கடனை வழங்கல் என்ற நியதியை நீக்கி சகல ஊழியர்களுக்கும் அதிகபட்ச கடன்தொகையாக இரண்டுமில்லியன் வழங்கல். சகல பல்கலைக் கழக ஊழியர்களுக்கும் திறன் மிக்க மருத்துவக் காப்புறுதித் திட்டம், ஓய்வூதியத் திட்ட அமைப்பதற்கான பயன் தரக்கூடிய செயற்றிட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில் நூற்றுக் கணக்கான கல்விசார ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

(ற-ரி5)

## மீன்பிடியில் ஈடுபடுவதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது

### ஈச்சளவக்கை மக்கள் குற்றச்சாட்டு

மன்னார்.ஜன.18

பெரிய மடுக்கிராமத்திலுள்ள குளத்தில் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு ஈச்சளவக்கைக் கிராமமக்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது என குற்றஞ்சாட்டப்படுகின்றது. கிராம மக்கள் மாந்தை மேற்குப் பிரதேச செயலகத்தில் இது தொடர்பில் மனு ஒன்றை நேற்றுக் கையளித்தனர்.

அந்த மனுவில் உள்ளதாவது,

"போர் காரணமாக 1978ஆம், 1979ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் ஈச்சளவக்கைக் கிராமத்தை சேர்ந்த 46 குடும்பங்கள் இடம் பெயர்ந்து பெரியமடு கிராமத்தில் தெளிவாறு என்னும் பகுதிக்குள் குடியமர்த்தப்பட்டார்கள். போரின் பின் மீள் குடியேறியுள்ள நிலையில் பெரியமடு கிராமத்தில் அமைந்துள்ள குளத்தில் நன்னீர் மீன் பிடியில் ஈடுபட பெரியமடு கிராம மக்கள் எதிர்ப்பை தெரிவிக்கின்றனர் அதனால் ஈச்சளவக்கை கிராமத்தைச் சேர்ந்த சுமார் 46 குடும்பங்கள் வாழ்வாதாரம் இன்றி பாதிப்படைந்துள்ளோம்.





எங்களுடைய பிரச்சினைகள் தொடர்பில் இங்குள்ள அதிகாரிகளுக்கு பல தடவைகள் தெரிவித்தும் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

எமது பிரச்சினை தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளோம். எமது பிரச்சினைக்கு மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் - என்றனர்.

(ற,ரி5,56)

யாழ்.பிரபல தனியார் மருத்துவதனையில்

## சத்திரசிகிச்சை தொடர்ந்தால் தொற்று ஏ ற்டும் சாத்தியம்

மன்னார்,ஜன.18

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல தனியார் மருத்துவமனையில் சத்திரசிகிச்சைக் கூடத்தில் தொடர்ந்தும் சத்திர சிகிச்சைகளை மேற்கொள்வது கிருமித் தொற்றை ஏற்படுத்தும் என தனியார் மருத்துவமனைகளை ஒழுங்குபடுத்தும் சபை அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என வடமாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ஜீ.குணசீலன் தெரிவித்தார்.

இந்தப் பாதிப்புக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கை தொடர்பில் மன்னாரில் உள்ள அமைச்சரின் உப அலுவலகத்தில் நேற்று ஊடகவியலாளர்களுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது,

"யாழ்ப்பாணம் தனியார் மருத்துவமனை ஒன்றில் கடந்த வருடம் கண் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட பலர் பாதிப்புக்களை எதிர் நோக்கினர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சுகாதார திணைக்களத்தால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

ஆனால் அந்த மருத்துவமனையின் ஒத்துழைப்பு எங்களுக்கு முழுமையாகக் கிடைக்கவில்லை.

மத்திய சுகாதார அமைச்சால் நியமிக்கப்பட்ட சிறப்பு நிபுணத்துவக்குழுவினர் சென்று மருத்துவமனையில் விசாரணைகளை மேற்கொண்டிருந்தது.

இதனடிப்படையில் பல்வேறு மாதிரிகளை சேகரித்து அறிக்கை ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

அவ்வாறு ஒத்துழைப்பு வழங்காது விட்டால் இந்த அறிக்கைக்கு அமைவாக நாங்கள் சட்ட நடவடிக்கைக்கு மேலதிகமாக செல்வதைத் தவிர்க்க முடியாது" என்றார்.

(ற,ரி5,56)

## ரூ.12 லட்சம் பெறுமதியான சிகரெட்டுகள் மீட்பு

கொழும்பு.ஜன.18

சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகள் நேற்றுச் சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டன.

ஒருகொடவத்தை கொள்கலன் தளத்திலிருந்து கைப்பற்றப்பட்ட சிகரெட்டுக்களின் பெறுமதி சுமார் 12 இலட்சம் ரூபா எனத் தெரிவிக்கப்பட்டது. இந்த சிகரெட்டுக்களைச் சுங்கப்பிரிவினர் கைப்பற்றியுள்ளதுடன் விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

(ற-ரி5)

## எம்.ஜி.ஆரின் 101ஆவது பிறந்த தினம் நேற்று

யாழ்ப்பாணம் ஜன 18

இந்திய முன்னாள் நடிகரான மறைந்த எம்.ஜி. இராமச்சந்திரனின் (எம்.ஜி.ஆர்) 101 ஆவது பிறந்ததின நிகழ்வு நேற்று யாழ்.கல்வியங்காடு பகுதியில் அமைந்துள்ள அவரது சிலைக்கு முன்பாக நடைபெற்றது.

யாழ் கல்வியங்காடுப் பகுதியில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர் சிலைக்கு எம்.ஜி.இராமசந்திரனின் நண்பனும் தீவிர ரசிகனுமான யாழ் எம்.ஜி.ஆர் கோப்பாய் சுந்தரலிங்கம் மற்றும் யாழிலுள்ள இந்திய துணைத் தூதுவர் என்.நடராஜன் ஆகியோர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

இந்த நிகழ்வில் பயனாளிகளுக்கு உடுபுடைவைகளும் வழங்கப்பட்டன.

(ற,ரி5,8)





## மக்கள் பாவனைக்கு மேம்பாலம் திறப்பு

கொழும்பு,ஜன.18

பொல்கஹவெல மேம்பாலம் பொதுமக்களின் பாவனைக்காக நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

தொடருந்துப் போக்குவரத்து காரணமாக நாளாந்தம் 4 மணித்தியாலங்களுக்கு மேலாக பொல்கஹவெல வீதி மூடப்படுவதால், ஏற்படும் வாகன நெரிசலை கட்டுப்படுத்தும் வகையில் இந்த மேம்பாலம் சீரமைக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

ஸ்பெயின் அரசின் நிதியுதவியுடன் மேம்பாலம் அமைக்கப்பட்டது. கொழும்பு ராஜகிரிய மற்றும் கம்பஹா கனேமுல்ல மேம்பாலங்கள் ஆகியவையும்அண்மையில் திறந்து வைக்கப்பட்டன.

(ற-ரி5)



## பக்தாத் இரட்டைக் குண்டுவெடிப்பு; சாவு எண்ணிக்கை 42ஆக அதிகரிப்பு

பக்தாத், ஜன. 17

ஈராக்கின் தலைநகர் பக்தாத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இரட்டைக் குண்டுவெடிப்பில் உயிரிழுந்தோர் எண்ணிக்கை 42ஆக அதிகரித்தது.

ஈராக் தலைநகர் பக்தாத்தின் மத்திய பகுதியில் உள்ள ஏடன் சதுக்க சோதனைச் சாவடியிலேயே இந்தத் தாக்குதல்நடத்தப்பட்டது. சம்பவஇடத்தில்16 பேர் உயிரிழந்தனர். சுமார் 65 பேர் படுகாயமடைந்து மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் பலரின் நிலமை கவலைக்கிடமாக இருந்ததால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கும்என்று அச்சம்வெளியிடப்பட்டது. இந்தநிலையில்நேற்றுக்காலை வெளியான தகவலின்படி சாவு எண்ணிக்கை42ஆகஅதிகரித்தது. (ம)

# பிறிதொரு நாட்டை சார்ந்திருக்காதீர்கள்

### இஸ்லாமிய நாடுகளுக்கு ஈரான் அதிபர் 'அட்வைஸ்'



தெக்ரோன், ஜன. 18

"இஸ்லாமிய நாடுகள், தமது முன்னேற்றத்துக்காக பிறிதொருநாட்டைச்சார்ந்திருக்கக் கூடாது" என்று தெரிவித்தார் ஈரான் அதிபர் ரவுகானி.

ஈரான்நாடாளுமன்றில்நேற்று முன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறுதெரிவித்தார்.

"இஸ்லாமிய நாடுகள் தமது முன்னேற்றத்துக்காக பிறிதொருநாட்டைச்சார்ந்திருக்கக் கூடாது. அவ்வாறு வெளிநாடுகளைச் சார்ந்திருக்காத பட்சத்தில்தான் எம்மிடையே ஒற்றுமை ஏற்படும்.

எம்மிடையே நிலவும் பிரச்சினைகளை இனங்காண முடியும்.

எம்மிடையே வளர்ச்சி ஏற்பட எமதுதிறன்களைநம்பவேண்டும்' என ரவுகானி மேலும் தெரிவித்தார். (ம)

## மடகஸ்கரைத் தாக்கிய 'அவா' புயலுக்கு 55 பேர் சாவு

மடகஸ்கரைகடந்த5ஆம்மற்றும்6ஆம்திகதிகளில்புயல்தாக்கியது. 'அவா' என்று பெயரிடப்பட்ட இந்தப் புயலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 55ஆக அதிகரித்தது.

இந்தப்புயலால்29பேர்உயிரிழந்தனர்என்று ஏற்கனவேதெரிவிக்கப்பட்டது. நேற்றுமுன்தின நிலவரத்தின்படி உயிரிழப்பு 51என்று குறிப்பிடப்பட்டது. நேற்றைய நிலவரத்தின்படி சாவு எண்ணிக்கை 55ஆக அதிகரித்தது. (ம)





# ட்ரம்பின் மி
# நாயின் கு

### வடகொரியா மீண்டும் சீண்டல்

பியாங்யாங், ஜன. 17

"ட்ரம்ப்பின் அணுவாயுத மிரட்டல், நோய் பிடித்த நாயின் குரைச்சல்" எ
யாக விமர்சித்துள்ளது.

வடகொரியா அதிபர் கிம் ஜோன் உன், தனது புதுவருட உரையில், "வடகொரிய
அணுவாயுதச்சோதனைகளைமுழுமையாகநடத்திவிட்டது. அமெரிக்காவின்எந்
இடத்திலும் தாக்குதல் நடத்தும் அணுவாயுத பொத்தான் எனது மேசை மீது எப்பே
தும் இருக்கிறது" என்று தெரிவித்தார்.

இதற்கு அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தனது ருவிற்றர் பக்கத்தில், "உணவுப் பொருளு
குத் திண்டாடிவரும் வடகொரியாவுக்கு யாராவது எடுத்துச் சொல்லுங்கள். என்னி
மும் அணுவாயுத பொத்தான் இருக்கிறது. ஆனால், கிம்மிடம் இருப்பதை விட எ
னிடம்இருப்பதுமிகப்பெரியது, சக்திவாய்ந்தது. அந்தப்பொத்தான்நன்றாகவேலை
யும் செய்கிறது. இதை கிம்முக்கு சொல்லுங்கள்" என்று பதிவிட்டிருந்தார்.

ட்ரம்பின் இந்தக் கருத்து நாயின் குரைச்சல் என்று தற்போது பதிலடி கொடுத்துள்ள
வடகொரியா.

"ட்ரம்பின்பேச்சுகள்பைத்தியக்காரத்தனமானவை,அவைஒருநோய்பிடித்தநாயின
குரைச்சல்" என்று வடகொரிய அரச ஊடகமொன்று செய்தி வெளியிட்டது. (ம)



தென்னமரிக்க நாடுகளான பெரு மற்றும் சிலி ஆகியவற்றுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார் கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான பாப்பரசர் பிரான்சிஸ். நேற்றுமுன்தினம் அவர் பெரு நாட்டுக்குச் சென்றார். அங்கு அவருக்கு கோலாகல வரவேற்பு வழங்கப்பட்டது. அது தொடர்பான ஒளிப்படங்களை பன்னாட்டு ஊடகமான றொயிட்டர்ஸ் வெளியிட்டுள்ளது. (ம)

## பலஸ்தீனத்துக்கான உதவியை பாதியாக குறைத்தது அமெரிக்கா

வொஷிங்டன், ஜன. 18

பலஸ்தீனத்துக்குவழங்கிவந்தஉதவியைப
யாகக்குறைத்துள்ளதுஅமெரிக்கா. ஜெருசலே
விவகாரத்தில் பலஸ்தீனம் காட்டிய எதிர்
லையை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்
பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

பலஸ்தினத்திடம்இருந்துபலபகுதிகளைஆ
ரமித்து வைத்துள்ளது இஸ்ரேல். அவ்வா
கிழக்குஜெருசலேமும்இஸ்ரேலால்ஆக்கிர
கப்பட்டிருந்தது. கிழக்கு ஜெருசலேமை இ
ரேல்தனதுதலைநகராகவும்அறிவித்திருந்த
எந்த நாடும் இஸ்ரேலின் தலைநகராக ஜெ
லேமைஅங்கீகரிக்கவில்லை. இந்தநிலை
கடந்தவருடத்தின்இறுதிப்பகுதியில்அமெரிக்
அந்த அங்கிகாரத்தை இஸ்ரேலுக்குக் கொ
தது. இதையடுத்து பலஸ்தீனத்தின் பல இட
ளிலும் கலவரங்கள் வெடித்தன. அமெரிக்
வின் அறிவிப்பை முழுமையாக நிராகரித்த
பலஸ்தீனம்.

இதையடுத்துபலஸ்தீனத்துக்குவருடாவரு
வழங்கப்படும் சுமார் 2 ஆயிரத்து 200 கே
ரூபாநிதிநிறுத்தப்படும்என்றுஅறிவித்ததுஅ
ரிக்கா. இதன் முதல் கட்டமாக குறித்த நிதிய
பாதியைஅதாவதுஆயிரத்து100கோடிரூபான
நிறுத்தியுள்ளது.



பிரட்டல்
ரைச்சல்

ரச்சல்" என்று வடகொரியா மீண்டும் கடுமை

வடகொரியா
காவின் எந்த
ச மீது எப்போ

ப் பொருளுக்
கள். என்னிட
தை விட் என்
றாக வேலை
ர்.
ாடுத்துள்ளது

த்தநாயினது
டது. (ம)

ன
க
ரிக்கா

டதவியைபாதி
. ஜெருசலேம்
டிய எதிர்ப்ப
கை எடுக்கப்
கிறது.
திகளை ஆக்கி
. அவ்வாறே
ல் ஆக்கிரமிக்
லேமை இஸ்
வித்திருந்தது.
கராக ஜெருச
ந்த நிலையில்
ல் அமெரிக்கா
க்குக் கொடுத்
பல இடங்க
அமெரிக்கா
நிராகரித்தது

ருடாவருடம்
200 கோடி
வித்தது அமெ
ித்த நிதியில்
ாடிரூபாவை
(ம)

# ஐரோப்பிய ஒன்றியத்தில் நீடிக்க வேண்டும் பிரிட்டன்

## ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் டொனால்ட் டஸ்கின் விருப்பம்



லண்டன், ஜன. 18

"ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரிட்டன் நீடித்திருக்க வேண்டும்'' என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் டொனால்ட் டஸ்க் நம்பிக்கை தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள நாடுகளின் மக்கள் ஏனைய நாடுகளுக்குச் சென்று தங்கலாம், கல்வி கற்கலாம், வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்ளலாம் என்பது விதி. இதனால் பிரித்தானியர்களின் வாய்ப்புக்கள் ஏனைய நாட்டவர்களால் சுரண்டப்படுகிறது என்ற குற்றச்சாட்டு காலாகாலமாக வைக்கப்பட்டு வருகிறது. இதனால் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் பிரிவதா என்பதுதொடர்பானவாக்கெடுப்பு கடந்த 2016ஆம் ஆண்டு நடைபெற்றது.

பிரிவதற்கு ஆதரவாக பெரும்பான்மை கிடைத்தது. இதையடுத்து எதிர்வரும் 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்குள் பிரிந்துசெல்வதுதொடர்பானநகர்வுகளை பிரிட்டன் தலைமை அமைச்சர் திரேசா மே முன்னெடுத்து வருகிறார்.

இந்த நிலையில் ஐரோப்பிய ஒன்றியத்தில்பிரிட்டன்நீடிக்கவேண்டும்என்றுவலியுறுத்தினார்டஸ்க்.

> **ஐரோப்பியக் கண்டத்தில் உள்ள நாங்கள் எங்கள் மனதை மாற்றிக்கொள்ளவில்லை. எங்கள் இதயங்கள் உங்களுக்காக இன்னும் திறந்தே உள்ளன. பிரிட்டன் எம்முடன் இருக்க வேண்டும் என்பதே பலரினதும் விருப்பம்**

"எமது பிரிட்டன் நண்பர்களின் மனங்களில் எவ்வித மாற்றமும் ஏற்படாமல்ஐரோப்பியஒன்றியத்தில் இருந்து விலக வேண்டும் என்ற முந்தைய முடிவில் அவர்கள் உறுதியாக இருந்தால் பல எதிர்மறைவிளைவுகளுடன்அது நடந்தேறலாம்.

மனமாற்றத்தை ஏற்றுக்கொள்ளாத ஜனநாயகத்தை ஜனநாயகம் என்று கூற முடியாது. ஐரோப்பியக்கண்டத்தில்உள்ளநாங்கள் எங்கள்மனதைமாற்றிக்கொள்ளவில்லை. எங்கள் இதயங்கள் உங்களுக்காகஇன்னும்திறந்தே உள்ளன. பிரிட்டன் எம்முடன் இருக்க வேண்டும் என்பதே பலரினதும் விருப்பம்'' என டஸ்க் மேலும் தெரிவித்தார். (ம)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தாயின் மடியில்
08 . 11 . 1947

இறைவன் அடியில்
20 . 12 . 2017

கடந்த 20.12.2017 அன்று இறைபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்

அமரர்
தாமோதரம்பிள்ளை மகேஸ்வரன்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (18.01.2018)
வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.
அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும்
தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்து
கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

21 A, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

021 321 4945

(CS 12697) (04.17)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

வல்லிபுரம்
சிவசூரியகுமாரன்
(தவராசா)

தோற்றம்
09.03.1951

மறைவு
29.01.2017

திதி : பூர்வபக்க துதியை

கற்பவை கற்று கற்றாங்கு ஒழுகி
உத்தமனாக ஊர்போற்ற வாழ்ந்து
வியாபாரத்துறையில் வித்தகனாகி
ஏழைகளுக்கிரங்கி ஏதிலர்க்கு உதவி
இறைவனடி சேர்ந்த எமதருமைத் தலைவா !
ஆண்டு ஒன்று ஆன இவ்வேளை
இறைவனை வேண்டுதல் செய்கின்றோம்
சாந்தி பெறுக



கரவெட்டி மத்தி
கரவெட்டி.

குடும்பத்தினர்.

(C 31811) (14.17)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# சந்தேகத்தை வலுக்க வைக்கிறார் மைத்திரி

கூட்டுஅரசின்உள்முரண்பாடுகள்உச்சக்கொதிநிலைக்கு வந்துவிட்டன என்பதை அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவின் செயற்பாடு நேற்றுமுன்தினம் தெளிவாக வெளிப்படுத்திவிட்டது. அரச தலைவரான அவரது பதவிக் காலம் 6 வருடங்கள் அல்ல 5 வருடங்கள் மட்டுமே என்று உயர்நீதிமன்றம்வியாக்கியானம்அனுப்பியதன்பின்னணியில் அமைச்சரவைக் கூட்டத்தில் இருந்து வெளிநடப்புச் செய்திருக்கிறார் மைத்திரி. இனிச் சேர்ந்து பயணிப்பது சரிவராது என்று காட்டமாகப் பதிலளித்துவிட்டே அவர் வெளியேறினார் என்று செய்திகள் கூறுகின்றன.

மத்திய வங்கியின் பிணைமுறிகளை விற்றதில் இடம்பெற்ற மோசடி தொடர்பானவிசாரணைஅறிக்கையை அரசதலைவர் வெளியிட்டதைத் தொடர்ந்து அரச தலைவருக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலான முரண்பாடுகள் அதிகரித்தன என்கிற அவதானிப்பு உண்டு. அதன் வெளிப்பாடாக ஐ.தே.கவின் இளம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசதலைவரைப் பற்றி மோசமாக விமர்சிக்கப்போக தற்போதைய பிரச்சினை எழுந்தது என்று கூறப்படுகின்றது.

ஐக்கிய தேசியக்கட்சியைச்சேர்ந்த நிழல்அமைச்சரானசுஜீவ சேனசிங்க, நாடாளுமன்ற உறுப்பினரா எம்.பி.மரிக்கார் ஆகியோரேகடந்த சில நாள்களாக அரசதலைவரைக் கடுமையாக விமர்சித்தனர். ஒரு கட்டத்தில், அப்பம் சாப்பிட்டுவிட்டு முன்னாள்அரசதலைவர்மகிந்த ராஜபக்சவுக்குச்செய்த துரோகத்தைப்போன்றேஅரசதலைவர்தமதுகட்சியான்ஐ.தே.கவுக்கும் செய்யப்பார்க்கிறார் என்றும் மிகவும் கீழிறங்கிப் போய் விமர்சிக்கவும் அவர்கள் தவறவில்லை.

இத்தகைய கடும் விமர்சனங்களை அடுத்தே செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் ஆரம்பத்திலேயே அரசதலைவர்ஐக்கிய தேசியக்கட்சியினருடன்எகிறத் தொடங்கினார். ஊழலை ஒழிப்பதற்குத்தான்எடுக்கும்நடவடிக்கை கண்டு ஐக்கிய தேசியக் கட்சி ஏன் அச்சப்படவேண்டும்? ஊழலைஒழிப்பதாகக்கூறிப்பதவிக்குவந்தநான்அதைச் செயவதற்குக்கூட உரிமை இல்லாதவனா? இவைதான் அவரதுஉரையின்சாராம்சமாக இருந்தது. இதற்காகத்தான்கடுமையாகவிமர்சிக்கப்படும்ஓர்இழிநிலையில்இந்தக்கூட்டுஇனித் தொடரவேண்டிய அவசியம் இல்லை என்கிற ஒரு குண்டையும் தூக்கிப் போட்டுவிட்டுச் சென்றார் என்றும் கூறப்படுகின்றது.

அதன்பின்னர்தலைமை அமைச்சர்ரணில்விக்கிரமசிங்கவும் வேறு சில அமைச்சர்களும் [illegible]ில் சென்று அவரைச் சமாதானப்படுத்தி மீண்டும் அழைத்து வந்தார்கள் என்பதெல்லாம் நடந்து முடிந்தது. எனினும் அரச தலைவரின் இந்த நடவடிக்கை அல்லது முடிவுதமிழ் மக்களைப் பொறுத்தவரையில் சிக்கலானதும் விசனத்திற்கு உள்ளானதுமான ஒன்று. கட்சி அரசியலுக்கும் அரசியல் மோதலுக்கும் அப்பால் நாட்டின் நலன், மக்களின் நலன் குறிப்பாகத் தனக்கு நம்பி வாக்களித்த சிறுபான்மை மக்களின்நலன்என்பவை குறித்து அவர்கிஞ்சித்தும் கவனத்தில் எடுத்து நடந்தார் போன்று தெரியவில்லை.

புதியஅரசமைப்புஒன்றைநிறைவேற்றிஇனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பது, படையினர் வசம் உள்ள மக்களின் காணிகளைஅவர்களிடமேதிரும்பஒப்படைப்பதுஉள்ளிட்ட தமிழ்மக்களின்பலகோரிக்கைகளையும்நிறைவேற்றுவதாகத் தான்வழங்கியவாக்குறுதிநிறைவேற்றப்படாதநிலையிலும், கட்சி அரசியல் முரண்பாடுகள் வலுப்பெறும் பட்சத்தில் இந்தக்கூட்டுஅரசுதனதுபயணத்தைமுடித்துக்கொள்ளும்என்கிற உறுதியான செய்தியே மைத்திரியின் செயல் ஊடாகத் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில், அரசதலைவரின் பதவிக் காலம் குறித்து உயர் நீதிமன்றத்திடம்இருந்துதெளிவுபெறமைத்திரிநடவடிக்கை எடுத்தசமயத்தில்கூட,தான்மக்களுக்குவழங்கியவாக்குறுதிகளைத் தனது பதவிக் காலத்திற்குள் நிறைவேற்றி வைக்க வேண்டும் என்கிற அவா காரணமாகவே தனது பதவிக் காலத்தை உறுதிப்படுத்திக்கொள்ள விழைகின்றேன் என்று மக்களுக்குத் தெரிவித்திருந்தவர் மைத்திரிபால. அப்படிப்பட்ட நிலையிலும்அவை எவைபற்றியும்கவலைப்படாமல் எடுத்த எடுப்பில், பேசித் தீர்க்கக்கூடிய விடயங்களுக்கும் மிரட்டல்பாணியில்எல்லாவற்றையும்திடீரென அவர்தூக்கி எறிய முயன்றிருப்பது அரசினதும் புதிய அரசமைப்பினதும் எதிர்காலம் குறித்துத் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

தமிழ் மக்களை ஏமாற்றும் சிங்களத் தலைமைகளின் ஆண்டாண்டு காலப் போக்கிலிருந்து இன்றைய தலைவர்களும் விதிவிலக்கல்லர்என்பதையேமைத்திரியின்செயல்உணர்த்தி நிற்கின்றது.



# யார் கொள்ளையர்?

சிங்கள மூலம்: பேராசிரியர் நாலக கொடஹேவா (மவ்பிம)

தமிழில்: வீ.எஸ்.ரீ

நாளுக்குநாள்சூடுபிடித்துவரும்நாட்டின் அரசியல் சூழ்நிலை, கூட்டு அரசினது வசந்தகாலம் முடிவுற்று கொதிநிலை உருவாகியுள்ளதைப் புலப்படுத்தி வருகின்றது. அந்த வகையில் இனிவரும் நாள்கள் அரசியலின் இருள்மற்றும்கடுங்குளிர்நிலைஎம்மைசிரமத்தில் ஆழ்த்தக்கூடும்.

வெளியில் தெரியவராது, தம்மைச் சுற்றிச்சூழ்ந்துள்ள அரசியல்சிரமங்களே அரசதலைவர் மைத்திரியைதமதுஅரசதலைவர்பதவிக்காலம்5ஆண்டுகள் தானா, அல்லது ஆறு ஆண்டுகளுக்குச் செல்லுபடியாகுமாஎன்பதைத்தெளிவுபடுத்துமாறு உயர் நீதிமன்றத்தை கோரச் செய்திருக்குமெனக் கருதமுடிகிறது. அதுவும் உள்ளூராட்சித் தேர்தல் இடம்பெறவுள்ள பெப்ரவரி மாதம்10 ஆம்திகதிக்கு முன்னர் அது குறித்துத் தெரிந்து கொள்ள அவர் முயன்றிருப்பது, இன்றைய அரசியல் சூழ்நிலையில் முக்கியத்துவம் பெறுகிறது. அவ்வாறில்லாதுவிடில், அத்தகைய சிக்கல்மூலம்தமது பிரதிபிம்பத்துக்கு ஏற்படத்தக்க பாதிப்பை நன்குணர்ந்துள்ள, மனச்சாட்சியுள்ள, அரசியல் வாதியொருவரான மைத்திரிபால அவ்விதம் இந்த விடயத்தில் தலையிட்டிருக்கமாட்டார்.

### பதவிக்காலம் குறித்து மைத்திரி குழம்புவதேன்?

தமது பதவிக்காலம் முடிவடைய மேலும் இரண்டாண்டுகள் மீதமிருக்கையில் தமது பதவியைத் தாமாகக் கைவிட்டு மீண்டும் அரச தலைவர் தேர்தலை நடத்தினார் முன்னாள் அரச தலைவர் மகிந்த. அதன்படி அரசதலைவர் பதவிக்கான அதிகாரங்களில் பலவற்றை பதவிக்கு வந்து நூறு நாள்களுக்குள்நீக்குவேன்என நாட்டுமக்களுக்கு வாக்குறுதி வழங்கி பதவிக்கு வந்த அரசதலைவர் மைத்திரிபால, தமது பதவியின் ஐந்து ஆண்டுகள் முடிவில் தமது பதவியிலிருந்து உண்மையில் விலகிக் கொள்ளும் விருப்பு உடையவராக இருந்திருப்பின், இவ்விதம் உயர்நீதிமன்றத்திடம் தமது பதவிக்கால நிறைவு குறித்து விளக்கம் கோர வேண்டிய தேவை எழ வாய்ப்பில்லை என்பது அரசியல்குறித்துஆர்வம்காட்டும்எவரும்அறிந்ததொன்றே.

### மகிந்த காலத்து பிணைமுறி விவகாரம் குறித்து விசாரிக்க ரவிகருணாநாயக்க கோரிக்கை

ஊடகவியலாளர்களது கவனத்துக்கு உள்ளாகியுள்ள முன்னாள் நிதி அமைச்சர் ரவிகருணாநாயக்க, எவரோ சில அதிகாரிகள் அரச தலைவருக்கு தவறான ஆலோசனைகளை வழங்கி வருவதாககருதுவதாகத்தோன்றுகிறது. மத்தியவங்கி பிணைமுறி ஊழல்'விடயத்தில் குறித்த ஊழல் விசாரணை ஆணைக்குழு அறிக்கையில் தாமொருகுற்றவாளியெனகுறிப்பிடப்படவில்லை எனவும், கடந்த மூன்றாம் திகதி அரச தலைவர் வெளியிட்டவிசேடஅறிக்கையில்தம்மைப்பற்றித் தெரிவிக்கப்பட்டகருத்துக்கள் இத்தகையதவறான தகவல்களைவழங்கும்அதிகாரிகளதுகபடத்தனத்தின் விளைவே எனவும் ரவி கருணாநாயக மீண்டும் மீண்டும் தெரிவித்து வருகின்றார். உரிய சந்தர்ப்பத்தில் இத குறித்து அரச தலைவருக்கு அவர் விளக்கமளிப்பார் என பொது மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

தாக்குதலொன்றுக்குஉட்படுமொருபிரமுகர், தமது பாதுகாப்புக்காக நாலாபுறமும் எதிர்த்தாக்குதலை மேற்கொள்வது இயல்பானதொன்றே. 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் கூட்டு அரசின் நிர்வாகத்தின் கீழ் இடம்பெற்ற மத்திய வங்கி பிணைமுறி ஊழல்தொடர்பான அரசதலைவர் ஆணைக்

குழுவின் விசாரணை அறிக்கை தொடர்பான கவனத்தைத் திசை திருப்பும் நோக்கிலேயே, 2008 ஆம் ஆண்டுமுதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மத்திய வங்கி பிணைமுறி வழங்கலில் பெரும்மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக ஐ.தே.கட்சியின்தலைவர்உள்ளிட்டகட்சிப் பிரமுகர்கள் குற்றச் சாட்டை முன்வைக்க ஆரம்பித்தனர்.

இதனிடையே குறித்த காலப்பகுதியில் மத்திய வங்கியின் ஆளுநராகப் பதவிவகித்த நிவாட்கப்ரால்குறித்தகுற்றச்சாட்டுக்குறித்த எந்தவொருவிசாரணைக்கும்உதவத்தாம் தயாரெனத் தைரிவித்துள்ளார்.

இவற்றின் மத்தியில், அண்மையில் ஊடகவியலாளர்களிடம்கருத்துவெளியிட்டமுன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக, மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி வழங்கல் செயற்பாடுகள் தொடர்பாக மட்டுமன்றி, 'ஹெஜின்' கொடுக்கல்வாங்கல்தொடர்பில் அரசுக்கு ஏற்பட்ட நட்டம் மற்றும் கிறீக் பிணைமுறிகளை மத்திய வங்கி கொள்வனவு செய்தவேளை ஏற்பட்ட நட்டம் என்பவை குறித்து விசாரிக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்திருந்தார்.

**'ஹெஜின்' ஒப்பந்தம் என்றால் என்ன?**

மகிந்தவின் தலைமையிலான அரசால் மேற்கொள்ளப்பட்ட பெரும் ஊழல் மிகக் கொடுக்கல் வாங்கலாக அந்த வேளையில் எதிர்க்கட்சியினரால் குற்றஞ்சாட்டப்பட்ட 'ஹெஜின்' கொடுக்கல் வாங்கலின் பின்னணிகுறித்துத்தெரிந்துகொள்ளல்இவ்வேளையில் பயன்மிக்கது.

'ஹெஜின்'என்பதுஎந்தவோர்பொருள்அல்லது சேவையின் விலை எதிர்பாராத வகையில், கூடியும், குறைந்தும் போகும் ஆபத்தைத் தவிர்த்துக் கொள்வதற்காகக் கைக்கொள்ளப்படும்,ஏற்றுக்கொள்ளப்பட்டதோர் நிதிக் கையாள்கைச் செயற்பாடாகும். அது ஒரு அளவுக்கு காப்புறுதிக்கு ஒப்பானது. சாதாரண கொடுக்கல் வாங்கலொன்றின் போதுவிருப்பமில்லாதசெயற்பாடுஇடம்பெறுமானால் அதன்மூலமான நட்டத்தைத் தவிர்த்துக்கொள்வதற்காகவே ஹெஜின் நடைமுறைபயன்படுத்தப்படுகின்றது.

அதன்படி, உலக பெற்றோலிய எரிபொருள் விலைஎதிர்பாராதவிதத்தில்உயர்வடையுமானால் அதன் மூலமான நட்டத்தைத் தவிர்த்துக் கொள்வதற்காக சில வங்கிகளுடன் 'ஹெஜின்' ஒப்பந்தத்தை மேற்கொண்டிருந்த பெற்றோலியக் கூட்டுத்தாபனம், உலகஎரிபொருள்விலைஉயர்வடைவதற்குப்பதிலாக2008ஆம்ஆண்டின்நடுப்பகுதியில்எதிர்பாராதவிலைவீழ்ச்சிஏற்பட்டதன் காரணமாக சிக்கலில் விழ நேர்ந்தது.

இத்தகையதொரு நிலை ஏற்படவும் இடமுண்டெனஒப்பந்தம்தயாரிக்கப்பட்டபோது பெற்றோலியக்கூட்டுத்தாபனத்தரப்பு அனுமானித்திருக்கவில்லை. 2008ஆம்ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 'ஹெஜின்' ஒப்பந்த விதிகள் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு நட்டத்தை ஏற்படுத்தின. உண்மையில் கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுதரப்பின் தீர்மானம் தவறாகிப் போனமை மட்டுமே அத்தகைய பின்னடைவுக்குக் காரணமேயொழிய, அது மத்திய வங்கி பிணைமுறி ஊழல்சம்பவம்போன்றுதிட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட களவு அல்ல.

**பெற்றோலிய எரிபொருள் விலை வீழ்ச்சியில் ஏற்பட்ட நட்டமேயொழிய அது ஊழலோ மோசடியோ அல்ல**

உண்மையில் 2007 ஆம் ஆண்டு முதல் இலங்கைபெற்றோலியக்கூட்டுத்தாபனம், இலங்கைக்குத்தேவையானபெற்றோலிய எரிபொருள் வகைகளின் ஒரு பகுதியைக் கொள்வனவு செய்தபோது சர்வதேச வங்கிகள் சிலவற்றினூடாக, முழுஉலகமுமே ஏற்றுக்கொண்ட 'ஹெஜின்' நடைமுறையைக்கைக்கொண்டுவந்தது. இதன்மூலம் ஆரம்ப ஒன்றரை வருடங்களில் கூட்டுத்தாபனம் குறிப்பிடத்தக்க அளவு இலாபம் ஈட்டியது. ஆனால் 2008 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் எதிர்பாராத விதமாக உலக பெற்றோலிய எரிபொருள் விலை வீழ்ச்சியடையஆரம்பித்ததையடுத்துஅப்போதைய 'ஹெஜின்'ஒப்பந்தம் இலங்கைக்கு நட்டத்தை ஏற்படுத்தி வைத்தது.

அந்தவேளையில்மூன்றுபன்னாட்டுவங்கிகள், கூட்டுத்தாபனத்திடம் நட்ட ஈடு கோரி வழக்குத்தொடுத்தன. பெருந்தொகைநட்டஈட்டைக்கோரிய அமெரிக்க வங்கியின் கோரிக்கைநீதிமன்றால்நிராகரிக்கப்பட்டது. அதே வேளை பிரித்தானிய மற்றும் ஜேர்மனி நாடுகளது வங்கிகளின் நட்ட ஈட்டுக் கோரிக்கைகளுக்கான தீர்ப்புக்கள் வங்கிகளுக்குச்சார்பாகவேஅமைந்தன. ஆயினும் குறித்த வங்கிகளுடன் அரசு மற்றும் பெற்றோலியக்கூட்டுத்தாபனம்மேற்கொண்ட பேச்சுக்களையடுத்து கோரப்பட்ட நட்ட ஈட்டுத்தொகைகுறைக்கப்பட்டுமொத்தமாக89 மில்லியன் அமெரிக்க டொலர்களே நட்டஈடாகச் செலுத்தப்பட்டன.

இதுஅந்தவேளையைஇலங்கைப்பெறுமதியில் 12.5 பில்லியன் ரூபாய்களாகும். அந்த வகையில் முன்னர் குறிப்பிட்டமை போன்று, இது வர்த்தகரீதியிலான நட்டமேயொழிய, ஊழலோ, திருட்டோ அல்ல. இது விடயத்தில் ஊழல் இடம் பெற்றிருத்தால் இன்றைய கூட்டாட்சி அரசு அதற்கான சட்ட நடவடிக்கை எடுக்காது தவிர்த்திருக்குமா? மத்தியவங்கியின் கிறீக் பிணைமுறி கொள்வனவு விடயத்தில் ஏற்பட்ட நட்டம் குறித்த குற்றச்சாட்டும் இதனையொத்ததொன்றே. மத்திய வங்கியால் நிர்வகிக்கப்படும் சில நிதியங்கள் மற்றும் அறவீடுகளைத் திரட்டி, பொருத்தமான விதத்தில் முதலீடு மேற்கொண்டு அவற்றின் பெருமதியைக்கூட்டுவது மத்திய வங்கியின் பொறுப்புக்களிலொன்று. மத்தியவங்கியின்நிதிச்சபையில் உயர் கல்வித்தராதரங்கள் மற்றும் அனுபவங்களைக் கொண்டுள்ள அதிகாரிகளே பணி புரிகின்றனர்.

திறமை வாய்ந்த முதலீட்டாளர்கள் இத்தகையநிதியம்மற்றும்அறவீடுமூலம்கிட்டும் நிதியைப் பொருத்தமான முதலீடுகளில் முதலிட்டுஅதன்மூலம்கிட்டும்இலாபத்தை அந்த முதலீடுகளுடன் சேர்த்துப் பெருக்கிக் கொள்வர். அவ்விதம் மேற்கொள்ளப்படும் பல முதலீடுகளில் ஒன்றிரண்டு நட்டத்தை ஏற்படுத்தினாலும், ஏனையவை பெரும் இலாபமீட்டினால் மொத்தத்தில் அந்த முதலீட்டுத்தரப்புஇலாபமீட்டியதரப்பாகக்கொள்ளப்படும்.

மகிந்தவின் தலைமையிலான அரசால் மேற்கொள்ளப்பட்ட பெரும் ஊழல் மிகக் கொடுக்கல் வாங்கலாக அந்த வேளையில் எதிர்க்கட்சியினரால் குற்றஞ்சாட்டப்பட்ட ஹெஜின் கொடுக்கல் வாங்கலின் பின்னணி குறித்துத் தெரிந்து கொள்ளல் இவ்வேளையில் பயன்மிக்கது.



கிறீக்பிணைமுறிக்கொள்வனவுஇலங்கை மத்தியவங்கியின்முதலீட்டுத்தரப்புக்குதவறான தொன்றாக அமைந்து விட்டது. எதிர்பாராத வகையில்கிறீஸ்நாட்டின்பொருளாதாரம் வீழ்ச்சி கண்டதால் எதிர்பார்த்த இலாபத்துக்குப் பதிலாக மத்திய வங்கி நட்டத்தைச் சந்திக்க நேர்ந்தது.

இந்த கிறீஸ் பிணைமுறி கொள்வனவு, மத்தியவங்கிமேற்கொண்டபெரும்குற்றமாக எதிர்த்தரப்புகளால் விமர்சிக்கப்பட்டு வந்தது. அதுதொடர்பாகமத்தியவங்கிஆளுநர் உட்பட வங்கியின் நிதிச்சபைக்கு எதிராக ராஜாங்க அமைச்சர் சுஜீவ் சேனசிங்காவால் உயர்நீதிமன்றில் வழக்குக்கூடத் தொடுக்கப்பட்டது. ஆயினும்உயர்நீதிமன்றமோ,குறிப்பிட்டமுதலீட்டைமேற்கொள்ள மத்திய வங்கியின் நிதிச் சபைக்கு பூரண, சட்டப்படியானஉரிமைஉள்ளதெனத்தெரிவித்து, அந்த விடயத்தில் தவறேதும் நிகழவில்லையெனத் தீர்ப்பளித்திருந்தது.

உண்மையில்அத்தகையமுதலீடுகள்ஒன்றால் நட்டம் ஏற்பட்டதுடன் அது அமெரிக்க டொலர் 6.6 மில்லியன் அளவானதாகும். அது முன்னாள் மத்திய ஆளுநர் அஜித் கப்ரால் மற்றும் நிதிச்சபையின் செயற்பட்டால் ஏற்பட்டபெரும்குற்றம்எனஎவராவதுகூறுவார்களாயின், கீழ்க்காணும் தரவுகள் குறித்து அவர்களால் எத்தகைய விமர்சனத்தை முன்வைக்க இயலும்?

201' ஆம் ஆண்டில் இலங்கை மத்திய வங்கி மேற்கொண்ட முதலீடுகள் காரணமாக 430 மில்லியன் அமெரிக்க டொலர் இலாபமீட்டப்பட்டிருந்தது. அது 6.6 வீத இலாபம் என்பதுடன் மத்திய வங்கியால் ஒருபோதும்ஈட்டப்படாதஉயர்இலாபமாக அமைந்திருந்தது.

உயர் நீதிமன்ற வழக்குத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டபடி, அந்த வேளையில் கிறீஸ் பிணைமுறி முதலீட்டில் முதலிடப்பட்ட தொகை, மத்திய வங்கியால் முதலீடு செய்யப்படத்தக்கமுழுத்தொகையின்தசம் 6 (0.6%) வீதம் மட்டுமேயாகும். அன்று இந்த விடயம் குறித்து எதிர்க்கட்சியினர் மேற்கொண்ட பரப்புரை, மத்திய வங்கி முற்று முழுதாக வங்குரோத்து நிலைக்கு உட்பட்டு விட்டதென நாட்டு மக்கள் நம்பும் நிலையை ஏற்படுத்தியிருந்தது.

ஆனால் இன்றோ, நாட்டு மக்கள் முன்னரைவிட அரசியல், பொருளாதார ரீதியில் அறிவும்அனுபவமும்மிக்கவர்களாக ஆகியுள்ளனர். அந்த வகையில் முன்னைய மகிந்தஅரசின்காலத்தில்மத்தியவங்கியின் செயற்பாடுகளால் ஏற்பட்ட நட்டத்தைவிட, இன்றைய கூட்டு அரசுக்கு முண்டுகொடுக்கும்தரப்பினரால்மத்தியவங்கிக்குஏற்படுத்தப்பட்ட பாதிப்பு பல மடங்காகும் என்பதை நாட்டுமக்கள்தெள்ளத்தெளிவாகத்தெரிந்துகொண்டுள்ளனர் என்பதே உண்மையாகும்.

ஆசிரியருக்கான கடிதம்

# உதயனுக்கு ஒரு முத்தாரம்

'உதயன்' செய்திப் பத்திரிகையாக ஆரம்பிக்கப்பட்டது. உதயன் மட்டுமென்றல்லாது, ஈழத்தில் தொடங்கப்பட்ட 'தினகரன்', 'வீரகேசரி', 'சுதந்திரன்' போன்ற இன்னோரன்ன தின, வார இதழ்களும்செய்தி இதழ்களாகவேவெளிவந்தன. காலகதியில்அவற்றில் இலக்கியத்தக்குப் பக்கங்கள்ஒதுக்கப்போய், இலக்கியத்துக்காகஆரம்பிக்கப்பட்டசிற்றிதழ்கள்செய்யமுடியாத அளவுக்குஈழத்துஎழுத்துலகில்எத்தனையோபடைப்பாளிகளைஉருவாக்கிவளர்த்துவிட்ட பெருமை இந்தச் செய்திப் பத்திரிகைகளையே சாரும்.

அந்தவகையில்'தினகரன்', வீரகேசரி'களையும்ஒருபடிதாண்டி'சுதந்திரன்'வளர்த்துவிட்ட படைப்பாளிகள் அறுபதுகளில்ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் சிகரம்தொட்டுமுத்திரைபதித்தமை இன்றைக்கும் சுட்டிக் காட்டத்தக்கதொன்று.

1985 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட 'உதயன்' நாளிதழ் மில்லேனியம் ஆண்டில், 2016, 2017, 2018 ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக அதனது அளவில் நூறு பக்கங்களையும்தாண்டிதைத்திங்கள்பொங்கல்பண்டிகைமலர்களைவெளிக்கொணர்ந்தது. குடாநாட்டின்எந்தச்சக்திகளாலும்நினைத்துப்பார்க்க, செய்துமுடிக்கஇயலாததுணிகர முயற்சிஎன்றேஇதனைக் குறிப்பிட வேண்டும்.

யாழ்.தட்டாதெருச் சந்தி பத்திரிகை முகவர் இம்முறை தைப்பொங்கல் மலரில் பங்கெடுத்துள்ள நூற்றுக்கும் மேற்பட்ட படைப்பாளிகளின் பெயர்ப் பட்டியலைப் பார்த்து இத்தனை எழுத்தாளர்கள் எங்கள் நாட்டில் இருக்கிறார்களென்பதை இவ்வித மலரொன்றை வெளியிடுவதன் மூலமாகவே வாசகர்களால் அறியமுடியும் என வியந்து போனார்.

எமது ஈழத்துதமிழ்எழுத்தாளர்களில்நான்கிலொருபங்கினரே இவர்கள் எனக்கூறிப்பெருமைப்பட்டுக்கொண்டேன். தமிழகத்தில் இருந்தும்ஈழத்தில்இருந்தும்எத்தனையோ இலக்கியச் சஞ்சிகைகள் வெளிவந்துள்ளன. ஆயினும் அவையெல்லாம் சாதாரண வாசகர்களைச் சென்றடைவதில்லை.

கைக்கு அடக்கமானவிலையில்நாளாந்தப்பத்திரிகையோடுஎமதுபடைப்புக்களைவெளிக்கொணர்ந்து, மக்களின்வாசிக்கும்பழக்கத்தை ஊக்குவித்துக்கொண்டிருக்கும் உதயனூடாகவே எம்மிடமும் இத்தகைய இலக்கியச் சிற்பிகள் இருக்கின்றார்கள் என்னும் செய்திகளையும் கொண்டு செல்ல முடிந்துள்ளது. இவ்வாண்டு (2018) மலரில் 48 கட்டுரையாளர்களும் 40 கவிஞர்களும், 24 சிறுகதையாளர்களும் தமது படையல்களைப் பொங்கிப் படைத்துள்ளனர். இவற்றைஒரேமூச்சில்நுகர்ந்துமுடிப்பதென்பதும்இமாலயப்பிரச்சினைதான். வைத்து சிறுகச் சிறுக நுகர்வதே நனி சிறந்த செயல். 112 புதிய படைப்புகளைத் தவிர பழைய கவிஞர்கள் பாரதி, மகாகவி, முருகையன், புதுவை இரத்தினதுரை போன்றவர்களின்படைப்புக்கள்மற்றும்இரண்டுதொழில்துறைசார்வளவாளர்களதுநேர்காணல்களும் தெவிட்டாமல்நுகரத்தக்கனவாகஅமைந்துள்ளன. இந்தமலரைவிமர்சனத்துக்குஉள்ளாக முடியாத பிரபஞ்ச விந்தையென அஞ்சி, விட்டு விடுகின்றேன்.

தேவிபரமலிங்கம், குருநகர், யாழ்ப்பாணம்.




எந்த ஒரு சிறிய விஷயத்தையும் கவனமாக கிரகித்துக் கொள்ளும் தன்மை உடைய மிதுன ராசிக்காரர்களே இந்த மாதம் ராசியாதிபதி புதன் ராசிக்கு 6இல் செவ்வாய் வீட்டில் சஞ்சரிக்கிறார். இதனால் எதிர்பார்த்த சில தகவல்கள் தாமதமாக வரும். கூட இருப்பவர்களிடம் கவனமாக இருப்பது நல்லது. ஒரு சில காரியங்களில் அவசரமாக முடிவு எடுப்பதை தவிர்ப்பது நன்மை தரும். முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைப்பதுடன் அவர் மூலம் உதவியும் கிடைக்கும். வெளியூர் பயணம் செல்ல நேரிடலாம்.

தொழில், வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் வெளியூர் செல்ல நேரிடும். பழைய பாக்கிகள் வசூலிப்பதில் வேகம் காண்பீர்கள்.

புதிய கிளைகள் தொடங்க நினைப்பவர்கள் அதற்கான முயற்சியை தள்ளிப் போடுவது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலக வேலையாக முக்கிய நபர்களைச் சந்திக்க வேண்டி இருக்கும். கொடுத்த கடனை திருப்பி வாங்க முயல்வீர்கள்.

குடும்பத்தில் வீண் வாக்குவாதங்கள் ஏற்படலாம். கவனமாகப் பேசுவது நல்லது. உறவினர்கள், குடும்ப நண்பர்களிடம் முக்கிய விஷயங்களை ஆலோசனை செய்வதையும், அடுத்தவர் பற்றி பேசுவதையும் தவிர்ப்பது நல்லது. கணவன், மனைவிக்கிடையே அனுசரித்துச் செல்வது நல்லது. வாகன சுகம் ஏற்படும். வாகனத்தை ஓட்டும் போது கவனம் தேவை.

**பெண்களுக்கு:** எதிர்பார்த்த தகவல்கள் தாமதமாக வரும். கூட இருப்ப வர்களிடம் எந்த விஷயத்தையும் சொல்லும் போது கவனம் தேவை.

**அரசியல்வாதிகளுக்கு:** பணம் சம்பந்தமான விஷயங்கள் சாதகமாக நடந்து முடியும். தனது பேச்சுத் திறமையால் சில காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். உங்கள் கருத்துக்களுக்கு மேலிடத்தில் மதிப்பு இருக்கும்.

**கலைத்துறையினருக்கு:** அலைச்சல் குறையும். ஓய்வு கிடைக்கும். பயணங்கள் சந்தோஷமானதாக இருக்கும். நிம்மதியான காலகட்டமாக இருக்கும்.

**மாணவர்களுக்கு:** பாடங்களை படிக்கும் போது மனதை ஒரு முகப்படுத்தி படிப்பது நல்லது. கவனத்தைச் சிதற விடாமல் இருப்பது வெற்றிக்கு உதவும்

## விநாயகர் சதுர்த்தி



விநாயகர் சதுர்த்தி அன்று, விநாயகர் அகவல், விநாயகர் கவசம், காரிய சித்திமாலை போன்ற பாடல்களை பாடி, மூல முதல்கடவுளை வழிபாடு செய்யலாம். காரிய சித்தி மாலை என்ற பாடல்களில், எடுத்த காரியங்களில் வெற்றி பெறச் செய்யும் தனிச்சிறப்பு சொல்லப்பட்டுள்ளது. விநாயகப்பெருமானின் முன்பாக அமர்ந்து, அவருக்கு உகந்த ஸ்லோகத்தை மனதை ஒருமுகப் படுத்தி, சொல்லி வந்தால், மனதில் விரும்பிய விஷயங்கள் யாவும் மகிழ்ச்சியளிக்கும் விதத்தில் விரைவில் நடந்தேறும்.

காரிய சித்தி மாலை பாடல்களை, காலை, மதியம், மாலை என மூன்று வேளைகளிலும் சொல்லி வந்தால், நினைத்த காரியங்கள் கைகூடும். அனைத்து வகைகளிலும் வெற்றி உண்டாகும்.

எட்டு நாள்கள் தொடர்ச்சியாக இந்தப் பாடலை மனதில் சொல்லிக்கொண்டு வந்தால், மனம் அமைதி காணும். சங்கடஹர சதுர்த்தி திதிகளில், தேய்பிறை சதுர்த்தி அன்று, எட்டு முறை இந்தப் பாடலைப் பாடினால் 'அஷ்டமா சித்தி' கைகூடும் என்கிறார்கள்.






## வரலாற்றில் இன்றைய தினம் 18.01.2018

1886 - இங்கிலாந்தில் ஹொக்கிச் சங்கம் உருவாக்கப்பட்டது.
1919 - போலந்தின் தலைமை அமைச்சரானார் பெடறவ்ஸ்கி.
1960 - கபிட்டல் வானூர்தி சேவைக்குச் சொந்தமான வானூர்தி-20 விபத்துக்கு உள்ளாகியதில் 50 பேர் உயிரிழந்தனர்.
1976 - லெபனானில் கிறிஸ்தவ ஆயுததாரிகளால் ஆயிரம் பேர் வரை படுகொலை செய்யப்பட்டனர்.
2005 - உலகின் மிகப்பெரிய வர்த்தக சேவை வானூர்தி ஏயார் பஸ் ஏ-380 ஆரம்பித்து வைக்கப்பட்டது.
2009 - இஸ்ரேலியப் படைகளின் போர் நிறுத்தத்தை ஏற்று தாக்குதல்களை நிறுத்துவதாக ஹமாஸ் அறிவித்தது.



**1977 -** ஆஸ்திரேலியாவின் சிட்னியில் ஏற்பட்ட ரயில் விபத்தில் 83 பேர் உயிரிழந்தனர்.

## நாளை

**19.01.2018**

வெள்ளிக்கிழமை

**தை - 06**

திதி: துதியை மு.ப. 11.50
நட்சத்திரம்: அவிட்டம் பி.இ. 02.46 வரை
சுபநேரம்: 06.35–08.05 வரை
ராகுகாலம்: 11.305–12.35 வரை

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்கள்

## செல்வன் சிவானந்தன் மதுசன்

(யா/கொக்குவில் இந்துக்கல்லூரி, வர்த்தகப்பிரிவு மாணவன் - 2018)



காளிகோயிலடி கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வன் சிவானந்தன் மதுசன் 16.01.2018 இறைபதம் எய்தினார்.

அன்னார் சிவானந்தன் (சிவா Halo Trust) - தேவகுமாரி(கலா) தம்பதிகளின் அன்பு மகனும் அபிதா, வபிதா (யா/இந்துமகளிர் கல்லூரி மாணவிகள்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கனகராசா, அன்னபூரணம் (சின்னமணி) காலஞ்சென்ற ஞானையா, மேரி தம்பதிகளினது அன்புப் பேரனும் மற்றும் நித்தியானந்தன், பவானந்தன், தேவரஞ்சினி(கனடா) ஆகியோரின் பெறாமகனும் சாந்தினி, தேவரஞ்சிதன், ஞானகுமார், நிர்மலா(பிரான்ஸ்), சுமதி (பிரான்ஸ்) ஆகியோரின் மருமகனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(19.01.2018) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தன்காடு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**காளிகோயிலடி (கல்வியற் கல்லூரி),**
**கோப்பாய் மத்தி**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 12992) (14,17)

பிறப்பு 27 . 06 . 1945



இறப்பு 15 . 01 . 2018

## இராமு ஜெகதீஸ்வரநாதன்

(நாதன் - ஞானம் மில் உரிமையாளர்)

யாழ். கரவெட்டி துன்னாலை மேற்கு ஞானசாரியார் வீதியைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமு ஜெகதீஸ்வரநாதன் 15.01.2018 திங்கட்கிழமை கரவெட்டியில் காலமானார்.

அன்னார் சத்தியலீலா அவர்களின் அன்புக்கணவரும், ஜெகந்தினி (ஆஸ்திரேலியா), நிரஞ்சன் (கரன்- லண்டன்), ரஜீவன் (கண்ணா - லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும், கஜேந்திரன், கவிதா ஆகியோரின் அன்பு மாமனும், விசாகன், சாருஜன், ஆதனா, அஷ்னா ஆகியோரின் அன்புப் பேரனும், ஜெகதீஸ்வரதேவி, இராமச்சந்திரன், இராமதாஸ், சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற துரைரட்ணம், துரை ராஜா, சந்திரலீலா, சமாதானலீலா, சத்தியபாமா, சாந்தா, காலஞ்சென்ற ரட்ணராஜா (ரத்தி), தாமோதரம், இராஜேஸ்வரி, ஜெயமங்களேஸ்வரி, பவானி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.01.2018 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேரோண்டை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**நிரஞ்சன் (கரன் - மகன்)**

**சத்திய லீலா - 021 226 2051**

## கண்ணீர் அஞ்சலி

மன்ற ஆரம்பகால உறுப்பினர்

**மயில்வாகனம் வைகுந்தவாசன்**

(உரிமையாளர் - வாசன் கூல் பார் நவீன சந்தை சாவகச்சேரி)

அவர்கள் 17.01.2018 காலமானார்

அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு மன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றது.

**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்**

in:5553 (13.17)

# வேலைவாய்ப்பு

## கிளிநொச்சி

**உதயன் பணிமனைக்கு**

பின்வரும் பணியாளர்கள் தேவை.

1. **முகாமையாளர்**
2. **முகாமைத்துவ உதவியாளர்கள்**
3. **பண வசூலிப்பாளர்கள்**
4. **பத்திரிகை விநியோகஸ்தர்கள்**

(தங்கி நின்று கடமை புரியக் கூடியவர்கள் விரும்பத்தக்கது)

**கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.**



ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் 21.01.2018 ஞாயிற்றுக்கிழமை உங்கள் சுயவிவரக் கோவையுடன் நேரில் சமுகம் தரவும்.

**உதயன் பணிமனை**
**A9 வீதி, கரடிபோக்கு சந்தி, கிளிநொச்சி.**

# மரண அறிவித்தல்

திருமதி

## லோகேஸ்வரன் தங்கலக்ஷ்சுமி (வவா)



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லோகேஸ்வரன் தங்கலக்ஷ்சுமி (16.01.2018) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான S.T.N நாகரத்தினம் சிவரூபராணி தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி செல்லமுத்து தம்பதியரின் அன்புமருமகளும் லோகேஸ்வரனின் அன்புமனைவியும் Dr. சிந்துரேகா (மருத்துவர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), சாந்திரேகா (பட்டதாரி, வயம்ப பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத்தாயாரும் ஜிசானின் (மாணவர், கொக்குவில் இந்துக்கல்லூரி) ஆசைத்தாயும் புருஷோத்தமன் (Cargills Bank, Chunnakam) இன் அன்புமாமியும் விஜயலட்சுமி, பொன்ராஜலக்சுமி, பாக்கியலக்சுமி, லெனின் நாகலிங்கம், கஸ்ரோ நாகலிங்கம், ஏங்கல்ஸ் நாகலிங்கம், நவலக்ஷ்சுமி, மார்க்ஸ் நாகலிங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் நவரத்தினம், யோகநாதன், முருகையா, தாமராகுமாரி, ஸ்ரீகௌரி, வானதி, இராயசேகரம், கிருஷ்ணசாந்தி, திலகவதி காலஞ்சென்ற பஞ்சாட்சரராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.01.2018) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதடல் தகனக்கிரியைக்காக பி.ப. 2 மணியளவில் கொத்தியாலடி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சந்தை தெற்கு வீதி,**
**சுன்னாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 305 3439**

(CS 12990) (8, 17)

ES Printers



021 492 7471,
021 492 7472

esprintersjaffna@gmail.com

357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**வேலையாள்கள் தேவை**

யாழ் நகரில் உள்ள அச்சகத்திற்கு பெண் வேலையாள்கள் தேவை.

416, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் (cs/12969)(12-17) 076 769 3903

**விற்பனைக்கு**

200 லீற்றர் புதிய எயர் கொம்பரேசர். மின்பிறப்பாக்கி 5 kw (ஜெனரேற்றர்) தையல் இயந்திரம் (Juki) விற்பனைக்குண்டு.

தொடர்பு :- 077 4701 495

**வீடு வாடகைக்குண்டு**

சுண்டுக்குளியில் வீடு வாடகைக்குண்டு.

7 1/1 புங்கங்குளம் றோட், சுண்டுக்குழி. (cs/12969)(12-17) 077 9977 264

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், அரியாலை, திருமகள் வீதியில் வைரவர் கோயிலுக்கு அருகாமையில் 6 பரப்பு வெற்றுக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு-0716715822

**உணவகம் ஒன்றிற்கு வேலை ஆள்கள் தேவை**

- உணவு பரிமாறுபவர்
- தேநீர் தயாரிப்பவர்
- பார்சல் பொதி செய்பவர்
- அப்பம் தயாரிப்பவர் (றோல், வடை போடத்தெரிந்தவர்)

077 465 2860

**முகாமையாளர் தேவை**

ஆடைத் தொழிற்சாலையொன்றிற்கு முகாமையாளர் தேவை. உற்பத்தி, ஏற்றுமதி சம்பந்தமான முன் அனுபவமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். கமிசனும் வழங்கப்படும். (cs/12965)(12-17)

தொடர்பு :- 077 4701 495

**காணி விற்பனைக்கு**

முதலியார் வீதியில் (கச்சேரி நல்லூர் வீதிக்கு அருகாமையில்) அமைந்துள்ள வீட்டுடன்கூடிய 2 1/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு-077 959 1097 (CS 12994/15/17)

**வீடு வாடகைக்குண்டு**

யாழ்ப்பாணம், கச்சேரிக்கு அண்மையில் A9 வீதியில் 5 அறைகள் (3 அறைகளுக்கு இணைந்த குளியலறை) சமையலறை, சாப்பாட்டறை, விறாந்தை, 3 - 4 வாகன தரிப்பிட வசதியுடன் ஒரு மாடி வீடு (2500 sqft) வாடகைக்குண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு :- 077 383 8194 (8.30 am - 5.00 pm)

**வேலைவாய்ப்பு**

யாழ் நகரில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றின், கொக்குவிலில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு பொதி செய்யும் பணியாளர்கள் உடன் தேவை. சம்பளம் **12,000** முதல் **15,000** ரூபா வரை வழங்கப்படும்.

தொடர்பு :- 077 477 3481


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மனம் மகிழ 01 08 1949 — மனம் நெகிழ 29 01 2017

**அமரர் குமாரரத்தினம் ஸ்ரீதரன்**

திதி : துதியை (18.01.2018)

ஆண்டாண்டு காலம் சென்றாலும்
அழியாது உங்கள் நினைவுகள்...


தாலிபுலம்,
வேலணை கிழக்கு,
1ஆம் வட்டாரம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(CS 12999/15/17)

## மரண அறிவித்தல்கள்

### கிட்னர் கனகய்யா



அரசடி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இல .124/2 பெரியார்குளம், பூந்தோட்டம்வவுனியாவைவதிவிடமாகவும், கொண்ட கிட்னர் கனகய்யா கடந்த (16.01.2018) செவ்வாய்க்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிட்னர் சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி நாகம்மை தம்பதிகளின் அன்பு மருமகனும் பாக்கியத்தின் பாசமிகு கணவரும் நிர்மலாதேவி (தேவி),சத்தியேந்திரன்(சத்தி),மல்லிகா தேவி, கேதீஸ்வரன் (ஈரன்,பிரான்ஸ்), பரமேஸ்வரன்(பரமேஸ்), விக்னேஸ்வரன்,கமலேஸ்வரன்(கமல்),துர்க்காதேவி(துர்க்கா), ராஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அல்பிரட் மேரி ஹொரட்டி (நிர்மலா),கேதீஸ்வரி (மஞ்சு) புஸ்பாந்தி(புஸ்பா), ரஜனிதவசீலி (வவா), லெனின் தாஸ்(லெனின்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.01.2018) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் .இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.24/02 ,பெரியகுளம்,
பூந்தோட்டம்,வவுனியா.

தகவல்:
கேதீஸ்வரன் (ஈசன்)
குடும்பத்தினர்.
0775416190

(AVA / 00247/16/17)

### திருமதி வினோதினி ஜெயயோகன்



மீசாலை கிழக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி வினோதினி ஜெயயோகன் நேற்று (17.01.2018) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை (ஓய்வுநிலை பொலிஸ் அலுவலர்) மற்றும் வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், சண்முகம் ஜெயயோகனின் (ஊழியர் பிள்ளையார் களஞ்சியம் - சாவகச்சேரி) அன்பு மனைவியும் சாந்தினி, சாந்த குமாரன் (கண்ணன் - லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவபாலன், கௌரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், பிரசாத், பிரதீப் (மலேசியா), பிரகாஷ், அருந்தா (கனடா), வைகரன் ஆகியோரின் பாசமிகுதாயும், கிருஷ்ணகரனின்(கனடா)அன்பு மாமியும், நிஷாந்தன், நிரோஷன், பார்த்தன், டினேஷன் ஆகியோரின் பெரிய தாயும், அபிலாஸ், சசித், சாருசன் ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.01.2018) வியாழக் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை கிழக்கு,
மீசாலை.

தகவல்:
ச.ஜெயயோகன்
(கணவர்)

077 452 9078 (anc 9090) (13.17)

## வேம்பாப்புல ஞானவைரவர் ஆலய சீட்டிழுப்பு முடிவுகள்

புத்தூர் வேம்பாப்புல ஞான வைரவர் ஆலயத்தின் கட்டட நிதிக்காக விற்பனை செய்யப்பட்ட அதிஸ்டலாபச் சீட்டிழுப்பின் குழுக்கல் நிகழ்வானது கடந்த 14.01.2018 தைத்திருநாள் அன்று நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தலைமையில் புத்தூர் வளர்மதி சனசமூகநிலையத்தில் நடைபெற்றது. அவ் அதிஸ்டலாபச் சீட்டிழுப்பில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள்.

- முதலாம் பரிசு - (பற்றுச்சீட்டு இலக்கம் - 12320)
  Wcgo மோட்டார் சைக்கிள் - A. **வசந்தராசா** - கொற்றாவத்தை
- இரண்டாம் பரிசு - (பற்றுச்சீட்டு இலக்கம் - 1851)
  LED தொலைக்காட்சிப் பெட்டி - S. **சயூமி** - கொக்குவில்
- மூன்றாம் பரிசு - (பற்றுச்சீட்டு இலக்கம் - 6459)
  Sumsung தொலைபேசி - S. **சண்முகம்** - யாழ்ப்பாணம்

**மேலும் 10 ஆறுதல் பரிசில்கள்** (Sumsung phone)

- **அபிநயா** - புத்தூர்.·(பற்றுச்சீட்டு இலக்கம் - 19747)
- **டக்சயன்** - தோப்பு. (பற்றுச்சீட்டு இலக்கம் - 22194)
- Children's World (Preschool) - இணுவில் - (பற்றுச்சீட்டு இலக்கம் - 476)
- **ர.தீபன்** - யாழ்ப்பாணம் - (பற்றுச்சீட்டு இலக்கம் - 3891)
- **சிவகஜன்** - - - (பற்றுச்சீட்டு இலக்கம் - 17277)
- **கனகா** - சாவகச்சேரி - பற்றுச்சீட்டு இலக்கம் - 21208)
- **க.இரத்தினம்** - புத்தூர் - (பற்றுச்சீட்டு இலக்கம் - 811)
- **லிங்கம்** - பண்டத்தரிப்பு - (பற்றுச்சீட்டு இலக்கம் - 20699)
- **ஈசன்** - சுவிஸ் - (பற்றுச்சீட்டு இலக்கம் - 16502)
- **சனா சவுன்ஸ் சேவிஸ்** - கைதடி - (பற்றுச்சீட்டு இலக்கம் - 22151)

வெற்றி பெற்றவர்களின் பெயர்களையும் பற்றுச்சீட்டுக்களையும் உறுதிப்படுத்தி எதிர்வரும் 19.01.2018 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் நிலாவரை வீதி, புத்தூர் வடக்கு, புத்தூர் வேம்பாப்புல ஞானவைரவர் ஆலயத்தில் ஆலய பரிபாலனசபையினரிடம் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு: 077 337 4261

பொருளாளர்- **கி. சதீஸ்குமார்**

(cs 12963)(13.17)


TRINITY STEEL
PRIVATE LIMITED

## ஏற்றுமதி சார்ந்த நிறுவனத்தின் வேலை வாய்ப்புக்கள்

உலக சந்தைகளுக்கு விசேடமாக தயாரிக்கப்பட்ட உலோக இணைப்பு பொருள்களைத் தயாரித்து ஏற்றுமதி செய்வதில் நாம் ஈடுபட்டுள்ளோம். எமது நவீன உற்பத்திச் சாலையில் தரமான உற்பத்திகளைத் தயாரிப்பதில் நிலைபேறான. தொழில்நுட்ப ரீதியில் அதிசிறந்த, திடநுட்பமான இயந்திர சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இலங்கையின் அதி உயர் கைத்தொழில் பிரதேசமான கட்டுநாயக்க ஏற்றுமதி வலயத்தில் எமது தொழிற்சாலை அமைந்துள்ளது.

தொடர்ச்சியான நடைமுறை முன்னேற்றத்துடன் தரத்தில் வேறுபாடற்ற தன்மையை உறுதிப்படுத்துவதற்கு கடுமையான தர முறைமைகளுடன் சகல செயற்பாடுகளும் கண்காணிக்கப்படுகின்றன. முழுமையான தர முகாமைத்துவக் கலாசாரத்தை மனதில் பதியவைத்து அதி உயர் தரத்தைப் பேணுவதில் ஒவ்வொரு ஊழியரும் தொடர்ச்சியாக விழிப்புடன் செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றோம்.

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான விண்ணப்பதாரர்களை நாம் எதிர்பார்க்கின்றோம்.

| பதவி | எண்ணிக்கை | தகைமை | சம்பளம் |
| --- | --- | --- | --- |
| 01. PRODUCTION HELPER | 40 | க.பொ.த.சாதாரண தரம் | LKR 30,000/- To 40,000/- |
| 02. MECHANICAL TECHNICIAN | 04 | NVQ; நிலை 5 உடன் தொடர்புடைய துறையில் 3-5 ஆண்டு வரை அனுபவம் | NEGOTIABLE |
| 03. LATHE MACHINE OPERATOR | 02 | NVQ; நிலை 5 மற்றும் 6 உடன் தொடர்புடைய துறையில் 2-4 ஆண்டு வரை அனுபவம் | NEGOTIABLE |
| 04. MILLING OPERATOR | 02 | NVQ; நிலை 5 மற்றும் 6 உடன் தொடர்புடைய துறையில் 2-4 ஆண்டு வரை அனுபவம் | NEGOTIABLE |
| 04. GRIDING OPERATOR | 04 | NVQ; நிலை 3 மற்றும் 6 உடன் தொடர்புடைய துறையில் 2-6 ஆண்டு வரை அனுபவம் | NEGOTIABLE |

மாற்றத்தை அடிப்படையாக கொண்டு 12 மணிநேர சேவை (Shift Basis)

2018 ஜனவரி 20ம் திகதி சனிக்கிழமை நேர்காணல்நடைபெறும்

இடம் மற்றும் நேரம்

| கிளிநொச்சி | யாழ்ப்பாணம் |
| --- | --- |
| கூட்டுறவு மண்டபம், டிப்போ ஜங்ஷன், ஏ9 வீதி, கிளிநொச்சி. | சுபாஸ் ஹோட்டல், இல.49,விக்டோரியா வீதி, யாழ்ப்பாணம். |
| காலை 9.30 மணிமுதல் மதியம் 12.00 வரை | மாலை 2.00 மணிமுதல் மாலை 5.00 வரை |

உங்கள் CV ஐ மனிதவள முகாமையாளருக்கு அனுப்பி வைக்கவும்

Trinity Steel (Pvt) Ltd,
Lot No. 09, Phase 01, Katunayake EPZ,.
Contact - +94 112 253 707 / 0777 322 957
Email: david@trinitysteel.lk/ hrd@trinitysteel.lk

# நாடோடிகள்-2 படத்தில் அஞ்சலி



சமுத்திரக்கனிஇயக்கத்தில் சசி குமார்,விஜய்வசந்த்,அனன்யா, பரணி நடிப்பில் 2009ஆம் ஆண்டு வெளி யாகி வெற்றி பெற்ற படம் நாடோடிகள். இதன் இரண்டாம்பாகம்தற்போதுஉருவாகஉள்ளது. சசிகுமாரே கதாநாயகனாக நடிக்க இருக்கிறார். சமுத்திரக்கனி இயக்குகிறார். இந்தப் படத்தில் சசிக்குமார் ஜோடியாக அஞ்சலி நடிக்க உள் ளார். முதல் பாகத்தில் நடித்த பரணி உள் ளிட்டசிலர்நடிப்பார்கள்எனதெரிவிக்கப் படுகிறது. மார்ச் மாதம் முதல் படப் படிப்பு ஆரம்பமாகிறது.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |
| | | 1 | | 3 | | 5 | | |
| 9 | 6 | | 5 | 4 | 1 | | 7 | |
| 5 | | | 8 | | 3 | | | 9 |
| 7 | | | | | | | | 8 |
| | | 9 | | | | 1 | | |
| 6 | | | 1 | 9 | 5 | | | 4 |
| | 9 | | 4 | 6 | 2 | | 3 | |
| | | 4 | 3 | | | 9 | | |

## நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 6 | 3 | 9 | 5 | 2 | 4 | 1 | 7 |
| 1 | 2 | 4 | 6 | 8 | 7 | 5 | 9 | 3 |
| 9 | 5 | 7 | 4 | 1 | 3 | 2 | 8 | 6 |
| 5 | 7 | 1 | 8 | 3 | 4 | 9 | 6 | 2 |
| 4 | 8 | 9 | 7 | 2 | 6 | 1 | 3 | 5 |
| 6 | 3 | 2 | 1 | 9 | 5 | 8 | 7 | 4 |
| 2 | 1 | 5 | 3 | 6 | 8 | 7 | 4 | 9 |
| 3 | 4 | 8 | 5 | 7 | 9 | 6 | 2 | 1 |
| 7 | 9 | 6 | 2 | 4 | 1 | 3 | 5 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளை யும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதி யில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

**நீதிபதி:** எதற்காக விவாகரத்து கேட்கிறாய்???

**விண்ணப்பதாரர்:**
ஐயா என் மனைவி என்னைத் தினமும் பூண்டு உரிக்கச் சொல்கிறாள். வெங்காயம் வெட்டச் சொல்கிறாள், பாத்திரம் தேய்க்கச் சொல்கிறாள். என்னால் முடியவில்லை .

அதனால் விவாகரத்துத் தாருங்கள். ...

**நீதிபதி:** இதெல்லாம் காரணமாக ஏற்றுக்கொள்ள முடியாது. உரிக்க வேண்டிய பூண்டை ஒரு போத்தலில் போட்டு மூடிவிட்டு நான்கு முறை குலுக்கினால் தோல் தன்னால் வரப்போகிறது. , அரிய வேண்டிய வெங்காயத்தை பத்து நிமிடம் பிரிடஜ்ல வைத்தால் இலகுவாகவும் வெட்டலாம் அரியும்போது கண்ணிலும் தண்ணீர் வராது. ,
பாத்திரத்தையெல்லாம் பத்து நிமிஷம் தண்ணீரில் ஊறவைத்து தேய்ச்சா சரியாபோயிடுது. அப்படியும் போகலேண்ணா பேக்கிங் பவுடர் ஒரு சிட்டிகை போட்டு ஒரு தேக்கரண்டி வினிகர் விட்டா எப்படிபட்ட தீச்சல் கடாயா இருந்தாலும்பளிச்சுண்ணு ஆயிடும்., அது மட்டுமில்ல துணிய ஊறவைக்கறதுக்கு முன்னாடி , நல்ல தண்ணியில ஒருதடவ நனைக்கணும். அதன் பின் துவைத்தால் துணி வெளிர் என்று மாறும்.

நீ சொன்ன காரணங்களுக்கொல்லாம் விவகாரத்து தரமுடியாது. புரிஞ்சுதா...

**விண்ணப்பதாரர்:**
ஐயா நல்லா புரிஞ்சுதுங்க.

**நீதிபதி:**
என்ன புரிஞ்சது.?

**விண்ணப்பதாரர்:**
என் பொண்டாட்டி பூண்டு , வெங்காயம், பாத்திரத்தோட நிறுத்திகிட்டா,
ஆன நீங்க துணியும் துவைக்கிறீங்க



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** நண்பருக்கு தேவையான உதவியைச் செய்வீர்கள். தொழிலில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். குடும்பத் தேவை குறைவின்றி நிறைவேறும்.

**இடபம்:** செயல்களில் விழிப்புடன் ஈடுபடுவது நல்லது. எவருக்கும் வாக்குறுதி வழங்க வேண்டாம். தொழில், வியாபார குறுக்கீடுகளை உடனே சரி செய்வது நல்லது.

**மிதுனம்:** சங்கடமான சூழ்நிலை ஏற்படலாம். பொறுமையுடன் செயல்படுவது நன்மை தரும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும்.

**கடகம்:** தனித்திறமையுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி பெருமளவு குறையும். பணவரவு அதிகரிக்கும்.

**சிங்கம்:** நிலுவைப்பணிகளை நிறைவேற்ற புத்துணர்வு தேவை. தொழில், வியாபாரம் செழிக்க தேவையான உதவி கிடைக்கும். வருமானம் சீராகும்.

**கன்னி:** ஏளனப் பேச்சை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். முக்கிய செலவுக்காக கொஞ்சம் கடன் வாங்கலாம்.

**துலாம்:** சிறுசிறு பிரச்சினையை சந்திக்கலாம். தொழில், வியாபாரத்தில் பணவரவு மந்தமாக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையை சந்திக்கலாம்.

**விருச்சிகம்:** செயல்களில் சமயோசிதம் நிறைந்திருக்கும். முக்கிய பணிகளை சிறப்பாக நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலை திருப்தியளிக்கும்.

**தனுசு:** குடும்ப பிரச்னையை பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபார நடைமுறை மந்த கதியில் இயங்கும். சேமிப்பு பணம் முக்கிய செலவுக்குப் பயன்படும்.

**மகரம்:** ஆர்வமுடன் அன்றாடப் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும். தாராள பணவரவு கிடைக்கும்.

**கும்பம்:** உங்களின் வளர்ச்சி கண்டு சிலர் பொறா மைப்படு வர். தொழில், வியாபாரம் செழிக்க மாற்று வழியை பின்பற்றுவது நல்லது.

**மீனம்:** உற்சாகமுடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பணி எளிதாக நிறைவேறும். ஆதாயம் உயரும். பொருள் வாங்குவர்.

**என் கவலைகளை எல்லாம் பட்டியலிட்டுப் பார்த்தேன்**



**எனக்கு இவ்வளவு கவலைகளா என்றொரு புதுக்கவலை வந்துவிட்டது**

**இப்பகூட பஸ்லதான் போய்க்கிட்டு இருக்கேன்...**




**எனக்கென்னமோ அமரர் ஊர்தில போற மாதிரியே ஒரு பீலிங்கு...**



## ‘குடி’

தண்ணீரையும் நாம் குடிக்கிறோம்.
பாலையும் குடிக்கிறோம்

ஆனால் எதையும் ‘குடி’ என்று
அழைப்பதில்லை

மதுவை மட்டும் ‘குடி’ என்கிறோம்

ஏன்?

அது ஒன்றுதான் உயிரைக் குடிக்கிறது



# நல்லதை நினைத்து நல்லதை அடைவோம்




ஓர் ஊரில் வணிகன் ஒருவன் இருந்தான். வணிகம் செய்வதற்காக அவன் வெளியூர் செல்ல வேண்டியிருந்தது.
அவன் பக்கத்து வீட்டு வணிகனிடம் சென்று "ஐயா நான் வெளியூருக்கு நிறையப் பொருள்களை எடுத்துச் செல்ல வேண்டி உள்ளது. உங்கள் கழுதையை இரவல் தாருங்கள். வணிகம் முடிந்து திரும்பியதும் கழுதையைத் திருப்பித் தந்து விடுகிறேன்" என்றான். பக்கத்துவீட்டுக் காரனும் தன் கழுதையை அவனுக்குக் கொடுத்து உதவினான். வஞ்சகனான அந்த வணிகன் தன் கழுதையின் முதுகில் பஞ்சு மூட்டைகளை ஏற்றினான். பக்கத்து வீட்டுக்காரனின் கழுதையின் மேல் உப்பு மூடைகளை ஏற்றினான்.
பின்னர் தன் வேலையாளைப்பார்த்து "நான் எனது குதிரையில் முன்னால் போகிறேன் என்ன நடந்தாலும் கழுதைகளை எங்கும் நிறுத்தாதே பக்கத்து ஊர் வந்து சேர்"என்று சொல்லி விட்டுச் சென்றான்.
இரண்டு கழுதைகளையும் அழைத்துக்கொண்டு வேலையாள் புறப்பட்டான். உப்பு மூடை ஏற்றப்பட்ட பக்கத்து வீட்டுக்கா்ரர் கழுதை தள்ளாடித்தள்ளாடி நடந்து சென்றது. பஞ்சு மூடை ஏற்றப்பட்ட கழுதையோ மிக மகிழ்ச்சியுடன் சுலபமாக நடந்து சென்றது.
திடீரென வானம் இருண்டது. மழைகொட்டோ கொட்டென்று கொட்டியது! இரண்டு கழுதைகளும் மழையில் நனைந்தபடி நடந்தன. அப்போது கழுதைமேல் ஏற்றப்பட்ட மூடைகளுக்குள் இருந்த உப்பெல்லாம் மழை நீரில் கரைந்து கீழே விழுந்து கொண்டே வந்தன. ஆனால் பஞ்சு மூடைகளோ மழையில் நனைந்து நீரைத் தம்முள் இழுத்துக்கொண்டு எடை அதிகமாகிக் கொண்டே வந்தன. பஞ்சு மூடைகளின் பாரத்தைத் தாங்க முடியாமல் வணிகனின் கழுதை துடித்தது. அதனால் அடியெடுத்து வைக்கவும் முடியவில்லை. ஆனால் வேலையாளோ அதை அடித்து முன்னே விரட்டி ஓட்டிக்கொண்டிருந்தான்.
பஞ்சு மூடைகளின் எடை மேலும் மேலும் அதிகமாகிக் கொண்டே இருந்தது. முதுகு எலும்பு முறிந்த அந்தக் கழுதை அங்கேயே விழுந்து இறந்தது. மூடைகள் வந்து சேரத் தாமதம் ஆவதை அறிந்த வணிகன் என்ன நடந்தது என்பதை அறிய குதிரையை வந்த வழியே திருப்பிச் செலுத்தினான். கொஞ்சத் தூரம் சென்றதும் பாதையில் தன் கழுதை இறந்து கிடப்பதையும் உப்பு ஏற்றிய கழுதை அழகாக நடந்து வந்து கொண்டிருப்பதையும் கண்டான். மழைபெய்ததால் என்ன நடந்திருக்கும் என்பதை அவன் ஊகித்து அறிந்து கொண்டான்.
"அடுத்தவன் கழுதை துன்பப்படட்டும் என் கழுதை மட்டும் மகிழ்ச்சியுடன் வரவேண்டும் என்று சூழச்சி செய்தேனே. எனக்கு நல்ல தண்டனை கிடைத்தது" என்று வருந்தினான் வணிகன்.

**கெடுவான் கேடு நினைப்பான்.**




| | | |
|---|---|---|
| A0 | - | கொள்ளுப்பிட்டி - சிறி ஜயவர்தனபுர |
| A1 | - | கொழும்பு - கண்டி |
| A2 | - | கொழும்பு - அம்பாந்தோட்டை - வெல்லவாய |
| A3 | - | பேலிய கொட - புத்தளம் |
| A4 | - | கொழும்பு - இரத்தினபுரி - மட்டக்களப்பு |
| A5 | - | பேராதனை- பதுளை - செங்கலடி |
| A6 | - | அம்பேபுஸ்ஸ- திருகோணமலை |
| A7 | - | அவிஸ்சாவெல - ஹட்டன் - நுவரெலியா |
| A8 | - | பாணந்துறை - இரத்தினபுரி |
| A9 | - | கண்டி - யாழ்ப்பாணம் |
| A10 | - | கட்டுகஸ்தோட்ட - குருநாகல்-புத்தளம் |
| A11 | - | மருதன்கடவெல - திருகண்டிமடு |
| A12 | - | புத்தளம் - திருகோணமலை |
| A13 | - | கல்கமுவ - அநுராதபுரம் |
| A14 | - | மதவாச்சி - தலைமன்னார் |
| A15 | - | மட்டக்களப்பு -திருகோணமலை |
| A16 | - | பெரகல - ஹாலிஎல |
| A17 | - | காலி - மாதம்பே |
| A18 | - | பெல்மதுளை - நோனாகம |
| A19 | - | பொல்காவெல - கேகாலை |
| A20 | - | அநுராதபுரம் - ரம்பேவ |

# வழிகாட்டுவோம்





## காகமும் நரியும்

பாட்டி சுட்ட வடையைத் தூக்கிப்
பறந்து சென்ற காக்கையார்
காட்டில் உள்ள மரத்தின் மீது
களைத்து வந்து குந்தினார்

வாட்டுகின்ற பசியில் அங்கு
வந்து நின்ற நரியனார்
பாட்டுப் பாடவல்ல மச்சான்
பாடு பாடு என்றனர்

சால வித்தை என்னவென்று
தானறிந்த காக்கையார்
காலில் அந்த வடையை வைத்து
கா... கா... என்று பாடினார்

தன்னைக் காக்கை வென்றதென்று
தலைகுனிந்த நரியனார்
என்ன செய்வோம் என்று வெட்கி
எடுத்தார் ஓட்டம் காட்டிலே

## பொருத்தமான எழுத்துக்களை வைத்து இடைவெளிகளை நிரப்புவோம்

1. கொ__கு
2. ஈ__க்கு
3. கப்__ல்
4. ப__டம்
5. ப__கள்
6. சூ__யன்
7. மு__ல்
8. ம__ம்
9. ம__ல்
10. வா__து

| | |
|---|---|
| ர் | ற் |
| ட் | த் |
| யி | ரி |
| ட | ய |
| ப | க் |

## ஒத்த கருத்துச் சொற்கள்

1. வீடு - இல்லம்
2. நிலா - சந்திரன்
3. மாதா - தாய்
4. பிதா - தந்தை
5. கனி - பழம்
6. சூரியன் - கதிரவன்
7. மலர் - பூ
8. சொண்டு - அலகு
9. பழம் - கனி
10. மிருகம் - விலங்கு

# மோதிரக் கையால் ஒரு குட்டு

மனித உடலின் மிக முக்கியமான அங்கமாக மதிக்கப்படுவது தலை. மனிதனை இயக்குகின்ற "பொறி"கள் பல தலையிலேயே இருக்கின்றன. கண், காது, மூக்கு, வாய், ஆகியவை தலையுடன் மிக நெருங்கி இருக்கின்றன. தலை மிகக் கவனமாகப் பாதுகாக்கப்படவேண்டிய ஓர் அங்கமாகும்.
தண்டனைகளுள் மிக இலகுவாகவும் விரைவாகவும் வழங்கக் கூடிய தண்டனை தலையிற் குட்டுதல் ஆனால் இந்தத் தண்டனையைப் பெறுவதற்கு யாருமே விரும்புவதில்லை. தரக் குறைவான , ஆபத்துக்களை விரைவில் விளைவிக்கக்கூடிய ஒரு தண்டனையாக இது கருதப்படுகின்றது. விளையாட்டிற் காகவோ வேண்டுமென்றோ யாராவது இன்னொருவருக்குக் குட்டினால் குட்டுப்பட்டவர் வலிமை குறைந்தவராக இருந்தாலும் மிகவும் ஆத்திரப்படுவார். முறைத்துப்பார்ப்பார்.
யாருமே விரும்பாத இந்தச் செயல்பற்றி எல்லோருக்கும் தெரிந்த பழமொழிதான் "குட்டுப்பட்டாலும் மோதிரக் கையால் குட்டுப்படவேண்டும்" என்பது
இந்தப் பழமொழி சம்மந்தமாகப் பலவிதமான விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன.



"குட்டுப்பட்டாலும் மோதகக் கையாற் குட்டுப்பட வேண்டும் என்பதே சரியானதெனச் சிலர் கூறுகின்றனர். மோதக கை என்பது பிள்ளையாரின் கையைக் குறிக்கும். ஆனால் சாதாரண மனிதர் எவருக்கும் பிள்ளையார் குட்டியதாகப் புராணங்கள் கூறவில்லையே ஆகவே "குட்டுப்போட்டாலும் மோதக் கையான் முன் குட்டுப்போட வேண்டும்". என்பதே சரியான வடிவம் என்பர் சிலர்.
பிள்ளையாரின் முன்னால் தம் தலையிற் குட்டித் தோப்புக் கரணம் போட்டு வணங்குவது சைவ மக்களின் வழக்கம். இதை வலியுறுத்த விரும்பினால் "மோதகக் கையாள் முக்குட்டுப் போட வேண்டும்" என்றாலே போதுமானது "குட்டுப்போட்டாலும்"என்று ஏன் ஓர் 'உம்'போட வேண்டும்?
ஆகவே "குட்டுப்பட்டாலும்"மோதிரக் கையாற் குட்டுப்பட வேண்டும்" என வழக்கிலுள்ள வடிவம் சரியானதாகவே தெரிகின்றது. "மோதிரக் கை" என்றிருப்பதன் காரணம் தான்,ஆராயப்பட வேண்டியுள்ளது.
பதவி சமூக அந்தஸ்து செல்வம் செல்வாக்கு முதலியவற்றில் உயர்ந்த நிலையில் இருக்கின்ற பிரமுகர்களையே "மோதிரக்கை" சுட்டுகிறதென்றும் எல்லா வகையிலும் தாழ்ந்த நிலையிலிருப்பவர்களிடம் குட்டுப்படுவதை விட, இத்தகைய பிரமுகர்களிடம் குட்டுப்படுவது அவ்வளவுதூரம் மதிப்புக்குறைவான செயலன்று என்றும் ஒரு வித கௌரவப் பிரச்சினையை இணைத்து ஒரு விளக்கம் கொடுக்கப்படுகின்றது.
தலையில் விழும்குட்டு, மூளையைக் கலங்கச் செய்யும் புத்தியைத் தடுமாறச் செய்யும். ஆனால் மோதிரம் அணிந்திருப்பவர்களின் குட்டு இத்தகைய பாதக விளைவுகளை ஏற்படுத்தாது. மோதிரக் கை எப்பொழுதும் மெதுவாகத்தான் குட்டும். பலமாகக் குட்டினால் மோதிரம் நெளிந்துவிடும். சில சமயம் உடைந்தும் போகலாம். இந்த விளக்கம் குட்டுபவர் ஆத்திரத்தில் தன்னை முற்றாக இழந்துவிடாமல் தன்னையும் உணர்ந்து கொண்டே மெதுவாகக் குட்டுவார் என்ற கருத்தையும் உணர்த்தி நிற்கிறது. ஆகவே உங்கள் தலையை நோக்கி நீளும் கையின் விரலில் மோதிரம் பழிச்சிட்டால் நீங்கள் பயமின்றித் தலையைக் குனிந்து கொடுக்கலாம்.

**உள்ளிருப்போர்...**



டும் என்று வாதிடுகின்றனர். உள்ளிருப்போர் வர்த்தகம் சந்தையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் பயனுள்ளதே என்று அவர்கள் கருதுகின்றனர். ஏனெனில் உள்ளிருப்பவர்கள் தமது நிறுவனத்தின் பங்குகளை பரிவர்த்தனை செய்கையில், விலை ஏற்றம் அல்லது இறக்கம் ஏற்படுமானால் அது சந்தையில் பிரதிபலிக்கத்தான் செய்யும் எனவும், அது அனைத்து முதலீட்டாளர்களுக்குமே நல்லதுதான் என்பதும் இவர்கள் கருத்து. ஏனைய சந்தைகளில், குறிப்பாக நிலம் தொடர்பான வர்த்தகங்களில் உள்ளிருப்போர் வர்த்தகம் தவறாகக் கருதப்படாதபொழுது, பங்குவிற்பனையில் மட்டும் இந்தத் தடை எதற்கு என்பது இவர்கள் வாதமாக அமைந்துள்ளது.

**முதலீட்டாளர் பாதுகாப்பு**

ஆயினும் பங்குச் சந்தையைக் கண்காணிக்கும் நிறுவனங்கள் (e Securities and Exchange Commission (USA). Securities Exchange Board of India ) முதலானவை உள்ளிருப்போர் வர்த்தகத்தை "மோசடி" என்றே கருதுகின்றன. இங்கிலாந்து, ஜப்பான் முதலிய நாடுகளிலும் உள்ளிருப்போர் வர்த்தகம் தடை செய்யப்பட்டுள்ளது. சொல்லப்போனால், 1988 ஆம் ஆண்டு ஜப்பான் நாடுதான் முதலில் உள்ளிருப்போர் வர்த்தகத்துக்கு எதிரான சட்டத்தை இயற்றியது. 1998 ஆம் ஆண்டில் 'International Organisation of Securities Commission (IOSCO)' என்ற பன்னாட்டு நிறுவனம் இயற்றிய சந்தை தொடர்பான, அடிப்படைக்கொள்கைகளில் முதலாவதாக 'முதலீட்டாளர் பாதுகாப்பு' விளங்கு கிறது. உள்ளிருப்போர் வர்த்தகம் முதலீட்டாளர்களை ஏமாற்ற வல்லதாகவும், ஒரு சாரார் மட்டும் நியாயமற்ற முறையில் பலன் பெறுவதாகவும் இருப்பதால் உள்ளிருப்போர் வர்த்தகம் தவறானது எனவும், வணிக நெறிமுறைகளுக்கு (Business Ethics) எதிரானதாகவும் கருதப்படுகிறது.


## வேலையாள்கள் தேவை

மானிப்பாயிலுள்ள அல்பா மிக்சர் கம்பனிக்கு பொதி செய்வதற்கு பெண் வேலையாள்கள் தேவை.

**வேலை நேரம் காலை 8.00 - பிற்பகல் 5.30 மணிவரை மதிய உணவு வழங்கப்படும்.**

**தொடர்பு :- 075 021 3149**

(CS 12958) (12-17)

**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**

வெற்றி வாரம்: 2983 திகதி: 17.01.2018 புதன்கிழமை இளஞ்சிவப்பு

01 09 33 42 V 46 40,894,895/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

1919 இற்கு அழைப்பதன்.

அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**அத கோடிபதி**

சீட்டிழுப்பு வாரம்: 140 இன்றைய ஜக்பொட் பரிசு

வர்ணம் : பச்சை ரூ. 57,056,410/-

சீட்டிழுப்பு திகதி: 2018.01.17

வெற்றி இலக்கங்கள்

19 23 57 59 P

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

1919 இற்கு அழைப்பதன்.

அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### இராமலிங்கம் நிர்மலன்

(கவி தொலைத்தொடர்பகம், செல்வன் வீடியோ, பூரணா மல்ரி சொப் உரிமையாளர்)



**அன்னை மடியில்**
**30.08.1949**

**ஆண்டவன் பிடியில்**
**28.01.2017**

"இராமலிங்கம் எனும் விருட்சமான பரம்பரையை இராமலிங்கம் வீதியிலே கம்பீரமாக காத்து நின்ற உத்தமரை இழந்து ஓராண்டு சென்றுவிட்டது."

**இராமலிங்கம் வீதி,**
**சாவகச்சேரி.** (IN 5544) (14.17)

தங்கள் பிரிவால் துயருற்றிருக்கும்
**இராமலிங்கம் குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### நாகமுத்து புலேந்திரன்

(முன்னாள் சாலை முகாமையாளர் இ.போ.ச. செய்தியாளர் வலம்புரி)



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், ஏழாலை மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து புலேந்திரன் (16.01.2018) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து செல்லம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகனும் பசுபதியின் (ஓய்வு பெற்ற ஆசிரியை) அன்புக்கணவரும் சுதாகினியின் (பொறியியலாளர், கனடா) அன்புத்தந்தையும் அனுஜிதனின் (கனடா) அன்புமாமனும் அமீஷ், நிதிஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான செல்வராசா, குணரத்தினம், சிவலிங்கம் (ஜேர்மனி), பஞ்சாட்சரராணி, பவளராணி ஆகியோரின் அன்புச்சகோதரரும் சிவசம்பு, கருணாநிதி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற நாகம்மா, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புமைத்துனரும் அன்பரன், பகேஸ்ரீ, தயாளன் காலஞ்சென்ற தயாபரன் மற்றும் குருபரன், வரதராசன், பத்மநிதி, சத்தியன் ஆகியோரின் சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.01.2018) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் சிவகுரு வீதி ஏழாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதடல் தகனக்கிரியைக்காக உசத்தியோடை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 12938) (14, 17)

**தகவல்: குடும்பத்தினர்.**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

### செல்லத்துரை சௌந்தரராஜன்



சங்கானையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான தற்போது இந்தியாவை வசிப்பிடமாகக் கொண்டவருமான செல்லத்துரை சௌந்தரராஜன் (சுந்தரம்), கடந்த (16.01.2018) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் புஸ்பராணி மகேந்திரராசா, இந்திராணி, செல்வராணி, ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தூத்துக்குடி மாவட்டத்தில் எதிர்வரும் (21.01.2018) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பிரதான வீதி, சங்கானை.**
**021 225 0123, 077 183 0749**

**தகவல்:**
**செ.மகேந்திரராசா**

(CS 12997/ 15/17)

## மரண அறிவித்தல்கள்

### இராசையா மகாதேவா



தாவடி தெற்கு கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா மகாதேவா 16.01.2018 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் அவரது பெறாமகனான செ.சுதனின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.


இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஆடியபாதம் வீதி,**
**கொக்குவில் மேற்கு, கொக்குவில்.** (CS 12959) (14, 17)

**தகவல்: குடும்பத்தினர்.**
**(பெறாமகன் - செ.சுதன்)**

### சீனிக்குட்டி ஜீவநாயகம்

*(முன்னாள் லங்கா சிமெந்து தொழிற்சாலை ஊழியர்)*



வசாவிளானைப் பிறப்பிடமாகவும் வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சீனிக்குட்டி ஜீவநாயகம் நேற்று (17.01.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனிக்குட்டி - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் நாகேஸ்வரிஅம்பாளின் அன்புக் கணவரும் கோமதன், கோபிகன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம், சபாநாயகம் மற்றும் இராஜேஸ்வரி, கமலேஸ்வரி, கனகநாயகம் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற சின்னராசா மற்றும் நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் நாகரத்தினாம்பாள், நவபாலன், தர்மபாலன், நாகபூசணிஅம்பாள் (இத்தாலி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வெள்ளாம்போக்கட்டி,**
**கொடிகாமம். 076 868 3361** (CS 13004/15/17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

ஓம் விராட் விஷ்வப்பிரம்மனே நமஹ

**பிறப்பு**
**22 . 08 . 1928**



**இறப்பு**
**17 . 01 . 2018**

### திருமதி யோகம்மா கார்த்திகேசு

சரவணை மேற்கு 2 ஆம் வட்டாரம் காளி கோயிலடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகம்மா கார்த்திகேசு நேற்று (17.01.2018) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CS 12990) (8, 17)

**சரவணை மேற்கு,**
**2 ஆம் வட்டாரம்,**
**காளி கோயிலடி வேலணை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 584 9548**

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஊழியர்
சிறிஸ்கந்தராஜா அவர்களின்
பாசமிகு மாமியார்
**சுப்பிரமணியம் தஞ்சம்மா**
அவர்களின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திப்பதோடு அன்னாரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களையும் தெரிவித்துக்
கொள்கின்றோம்.
ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



அதிகாரியும், சக ஊழியர்களும்
தொகைச்சாலைபெற்றோலியம்ஸ்ரோரேஜ்ரேமினல்லிமிட்ரெட், காங்கேசன்துறை.

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா சோதிலிங்கம்

(ஓய்வு நிலைப்பொறிவலர் பிறவுண் கொம்பனி)



கரம்பைக்குறிச்சி வரணியைப் பிறப்பிடமாகவும், சொண்ணவடலி கொக்குவில் மேற்கைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சோதிலிங்கம் நேற்று (17.01.2018) புதன்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையாப்பத்தர் - தங்கம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - இராசலட்சுமி தம்பதியரின் அன்புமருமகனும் சரோஜினிதேவியின் அன்புக்கணவரும் கீர்த்திசிங்கன் (இராஜேஸ்வரி மண்டபம் கோண்டாவில்), புவனதாசன் (காசாளர், Dialog யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத்தந்தையும் சாந்தினியின் (ஆசிரியை, யா /வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயம்) அன்புமாமனாரும் காலஞ் சென்றவர்களான இராசலட்சுமிஅம்மா, கந்தசாமிப்பத்தர், சந்தானலட்சுமிஅம்மா, ஆறுமுகசாமிப்பத்தர் மற்றும் நவரத்தின சாமி, மகாலிங்கம்பத்தர், முத்துலட்சுமிஅம்மா, தனலட்சுமி அம்மா ஆகியோரின் அன்புச்சகோதரரும் இராஜேஸ்வரி, யோகேஸ்வரி, லோகேஸ்வரன், விக்கினேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் கிசான், வர்ணஜா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.01.2018) வியாழக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற் றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சொர்ணவடலி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்
077 336 5151, 077 333 4859

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 12990) (8, 17)



### கதிரவேலு தங்கவேலாயுதம் (J.P)

*(ஓய்வுபெற்ற பிஸ்கால் உத்தியோகத்தர்)*

அல்வொல்லை புலோலி மத்தி பருத்தித்துறையைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு தங்க வேலாயுதம் நேற்று (17.01.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், ஜெயதேவியின் அன்புக் கணவரும், பிரதீபன், பிரஷாந்தன் (பொலிஸ் உத்தி யோகத்தர் - முல்லைத்தீவு) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகிர்தாவின் அன்புமாமனும், சோபன்யா, பாதுஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.01.2018) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுப்பர் மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்வொல்லை
புலோலி மத்தி, பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

075 556 1028


# உள்ளிருப்போர் வர்த்தகம்

## பங்கு வர்த்தக இடர் குறித்த கருத்தாடல்

உள்ளிருப்போர் வர்த்தகம் அதாவது, 'இன் சைடர் ரெடிங்' (Insider Trading) என்பது பற்றி இப்பகுதியில் நோக்கு வோம். பங்குச்சந்தைகளில் ஏற்படும் ஊச லாட்டத்திற்கும், பங்குகளின் விலை ஏறி இறங்குவதற்கும் நிறுவனங் கள் குறித்த தகவல்களும் காரணம் என்பதை நாம் அறிந்துகொண் டுள்ளோம். நல்ல விதமான தகவல் கள் விலை உயர்வுக்கும், எதிர்ம றையான தகவல்கள் விலைச்சரி வுக்கும் காரணமாகிவிடும் என்ப தையும் தெரிந்துகொண் டுள்ளோம்.

### சந்தையில் பரிவர்த்தனை குறித்த விதி

ஆனால், பிறருக்கு குறிப்பாக பொது மக்களுக்கு இந்தத்தகவல்கள் தெரி வதற்கு முன்பாக யாருக்கெல்லாம் தெரிய வாய்ப்புண்டோ அவர்கள் அந்தத் தகவல்களைப் பயன்படுத்தி சந்தையில் பரிவர்த்தனை செய்யக் கூடாது என்பது பொதுவான விதி. உதாரணமாக 'X' என ஒரு நிறுவ னம் இருப்பதாகக்கொள்வோம். அந்த நிறுவனம் 'Y' என்ற மற் றொரு நிறுவனத்துடன் ஒரு பெரிய ஒப்பந்தத்தில் ஈடுபடுகிறது எனில், அந்தச் செய்தி வெளியில் தெரிந்த உடனேயே, 'X' நிறுவனத்தின் பங் குகளின் விலை உடனேயே உய ரத்தொடங்கும்.

ஆனால், இந்த ஒப்பந்தம் வரப்போ கிறது என்பதை அதன் நிர்வாகிகள் பொதுமக்களுக்கு இச்செய்தி தெரியு முன்பே அறிந்திருப்பார்கள் அல் லவா...? இச்செய்தி வெளியில் பரம்பலடைவதற்கு முன்பே அவர் கள் குறைந்த விலையில் அப்பங்கு களை வாங்கி இலாபம் பார்ப்பது அல்லது ஒரு குறிப்பிட்ட நிறுவனம் அல்லது நபருக்கு இந்த இரகசியத் தகவலைக் கசியவிட்டு அவர்கள் இலாபம் பெற உதவுவது அல்லது பங்குச் சந்தையில் ஈடுபட்டுள்ள நிறுவனம் ஒன்று 'X' நிறுவனத்தில் உள்ள இந்தத் தகவல்களுக்கு அணுக்கமான (Persons with Potential Access) நபர்களிடம் இருந்து கையூட்டு முதலிய வற் றைக் கொடுப்பதன்மூலம் இத்த கைய அந்தரங்கமான, இரகசிய மான தகவல்களைத்திரட்டி தங்கள் ஆதாயத்துக்கு பயன்படுத்துவது என இவை அனைத்துமே உள்ளி ருப்போர் வர்த்தகம் என்றே கருதப் படுகிறது.

### உள்ளிருப்போர் வர்த்தகம் குறித்த வரையறை

உள்ளிருப்போர் வர்த்தகம், அதா வது முக்கிய அதிகாரிகள், பணியா ளர்கள், இயக்குநர்கள் மற்றும் நிர் வாகிகள் பங்குவர்த்தகம் செய்வது குறித்து சட்டங்கள் பல, பெரும்பா லான நாடுகளில் தெளிவாக வரை யறுக்கப்பட்டுள்ளன. ஒரு நிறுவ னத்தில் பணிபுரிபவர்கள் 'Employee Stock Option' மூலம் அந்த நிறுவனத்தின் பங்குகளை வாங்குவது தவறாகக் கருதப்பட மாட்டாது. ஆனால், ஒரு நிறுவனத் தின் வருடாந்த அல்லது காலாண் டுக் கணக்குகள் முடிவடைந்தபின்பு அந்தத் தகவல்கள் வெளியில் பரவு வதற்குமுன் ஒரு நிறுவனத்தில் பணிபுரிபவர்கள், குறிப்பாக அந்தத் தகவல்களைக் கையாளக்கூடிய வர்கள் அந்த நிறுவனத்தின் பங்கு களை வாங்கி விற்பது சட்டப்படி குற்றமாகக் கருதப்படுகிறது. அதே போல், அந்தத் தகவல்களைக் கையாள்பவர்கள், பிற வெளியாள் களுக்கு அந்தத் தகவல்களைக் கசிய விடுவதும் பெரிய குற்றமே ஆகும்.

### பன்னாடுகளில் பங்கு வர்த்த கம் குறித்த வரையறை

இங்கு, அமெரிக்க நாட்டின் பங்குச் சந்தை குறித்த சட்டமாகிய, 'Securities and Exchange Act of 1934 (USA) பிரிவு 16' இன் படி உள் ளிருப்போர் என வரையறுக்கப் பட்ட பணியாளர்கள், இயக்குநர்கள் மற்றும் 10 சதவீதத்துக்கு அதிகமா கப் பங்குகளை வைத்திருப்பவர் கள், அந்த நிறுவனத்தின் பங்கு களை வாங்கி ஆறு மாதத்துக்குள் விற்று விடுவார்களேயானால் அந் தப் பரிவர்த்தனையால் வரும் ஆதாயம் முழுமையையும் நிறுவ னத்துக்கு கொடுத்துவிடவேண்டு மென்று கூறப்பட்டுள்ளது. இங்கி லாந்தில், ஒரு நிறுவனத் துடன் தொடர்பு கொண்டுள்ள எவரும் அந்த நிறுவனத்தின் பங்குகளில் வர்த்தகம் செய்வது தடை செய்யப் பட்டுள்ளது. இந்தியாவின் 'Securities Exchange Board of India' நிறுவனமும் உள்ளிருப்போர் வர்த்தகத்தைத் தடுக்க பல வித வரையறைகளையும் விதிகளை யும் நிர்ணயித்துள்ளது.

### பொருளாதார நிபுணர்களின் கருத்து நிலை

ஆனால், ஹென்றி மான் (Henry Manne), மில்டன் ப்ரீட்மன் (Milton Friedman) முதலிய பல பொருளா தார நிபுணர்கள் இந்த உள்ளிருப் போர் வர்த்தகம் சட்டவிரோதமா னது என்ற நிலையை மாற்றி அதனை சட்ட பூர்வமாக்க வேண்

(23 ஆம் பக்கம் பார்க்க)

## தொடர்ச்சிகள்....

### இயற்கைத்...

ஸதில் நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்ட முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர்கள் இவ்வாறு கூறினர்.

அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித தெரிவித்ததாவது மைத்திரிபால சிறிசேன காரசாரமான உரையாற்றிவிட்டு எழுந்து சென்றார். அவர் எழுந்து சென்றது இயற்கைத் தேவையை நிறைவுசெய்வதற்காகவேயாகும். அவர் கோபித்துக்கொண்டு வெளியேறிச்செல்லவில்லை. இயற் கைத் தேவை வந்தால் யாரும் எழுந்து செல்வார்கள். அதைத்தான் அவரும் செய்தார்.

'அப்படியானால் நீங்கள் ஏன் மைத்திரியின் பின்னால் சென்றீர்கள்?' என்ற கேள்விக்கு, "எனக்கும் இயற்கைத் தேவை வந்துவிட்டது. அதனால்தான் நானும் சென்றேன் என்றார்.

கேள்வி அமைச்சரவைக் கூட்டத்தில் என்னதான் நடந் தது?

பதில் நீங்கள் எதிர்பார்க்கும் வகையில் எந்தப் பிரச்சினை யும் நடக்கவில்லை. அரச தலைவர் ஒரு சில விமர்சனங்கள் தொடர்பில் கூற்றை வெளியிட்டார். வழ மையாக யாரும் கூற்று வெளியிடுவார்கள். அதற்கு அமைச்சரவைக் கூட்டத்தில் இடமிருக்கிறது.

கேள்வி: மைத்திரி கூட்டு அரசு வேண்டுமா? வேண்டாமா என்பது குறித்து முடிவெடுக்குமாறு கூறிவிட்டு எழுந்து சென்றதாக கூறப்படுகின்றதே?

பதில்: அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. ஜே.ஆர். அரச தலைவராக இருந்த போது இலங்கை இந்திய ஒப்பந்தத் துக்கு அப்போதைய தலைமை அமைச்சரான ரணசிங்க பிரேமதாச எதிர்ப்புத் தெரிவித்தார். விருப்பமில்லாவிடின் வெளியில் செல்லுமாறு ஜே.ஆர். கூறிவிட்டார். பிரேம தாசவும் வெளியே சென்றுவிட்டார். பின்னர் அவர் அரச தலைவராகவும் வந்தார்.

கேள்வி: அமைச்சரவைக் கூட்டத்தின் இறுதியில் என்ன நடந்தது?

பதில்: ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் களை இதன் பின்னர் மைத்திரியை விமர்சிக்காதவாறு பார்த்துக்கொள்வேன் என்று ரணில் கூறினார். என்னை ரவி கருணாநாயக்கவுடன் பேசுமாறு கூறினார். சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரணிலை விமர்சிக்காதவாறு பார்த்துக்கொள்வேன் என்று மைத் திரியும் கூறினார்.

கேள்வி: கடந்த காலத்தில் மைத்திரி விமர்சனங்களை தாங்கிக் கொண்டிருந்தவர். ஐ.தே.கவின் இளம் நாடாளு மன்ற உறுப்பினர்களின் விமர்சனத்தை தாங்க முடியா மல்போய்விட்டதா?

பதில்: அவர்கள் பாவித்த சில வார்த்தைப் பிரயோகங்கள் வேதனையைத் தந்திருக்கின்றது. இங்கு பாம்பையும், கீரிப் பிள்ளையையும் போன்ற இரண்டு கட்சிகள் இணைந்து ஆட்சி அமைக்கின்றன. இங்கு பிரச்சினைகள் ஏற்படுவது சாதாரணம். எமது நாடாளுமன்ற உறுப்பினர் களுக்கு கூட்டு அரசு என்றால் என்னவென்று தெரிய வில்லை. அதனால் கடும் விமர்சனங்களை முன்வைக் கின்றனர். இதனால் சில சிக்கல்கள் அரசுக்கு ஏற்படுகின் றன. விமர்சனம் முன்வைப்பதால் கட்சிகளுக்குப் பிரச் சினை இல்லை. மாறாக அரசுக்கே பிரச்சினை ஏற்படு கின்றது.

இரண்டு தரப்பினரும் யார் யாரை ஏசிக்கொண்டாலும் அது அரசையே பாதிக்கும். மாறாக மகிந்த ராஜபக்சவால் எந்தப் பிரச்சினையும் இல்லை. முன்னைய ஆட்சியாளர் கள் செய்த கொலை, கொள்ளை தொடர்பில் யாரும் பேசுவதில்லை. மாறாக எமது உறுப்பினர்களே செய்து கொள்ளும் விமர்சனங்கள் அரசைப் பாதிக்கின்றன.

கேள்வி: நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார் பிக்பொக் கட் என்ற வார்த்தையை பிரயோகித்தமை சரியானதா?

பதில்: அது சரியில்லாத வார்த்தைப் பிரயோகம்தான். மகிந்த காலத்தில் இந்த வார்த்தையைப் பயன்படுத்தி யிருந்தால் கோத்தபாயதான் பதிலளித்திருப்பார். (ப-5,61)

### 2020 வரை...

அரசு அதன் காலம் முடியும்வரை பயணிக்கும். ஐ.தே.க. மற்றும் சுதந்திரக் கட்சி இணைந்த அரசை யாரும் உடைக்க முடியாது. இந்த அரசு தொடர்ந்து பயணிக்கும். அரச தலைவர் தேர்தல் 2019ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் அறிவிக்கப்படும். 2020ஆம் ஆண்டு ஜனவ ரியில் தேர்தல் நடக்கும். அதற்கான வேட்பாளர்கள் தொடர்பில் இப்போது பேசவேண்டிய அவசியமில்லை -என்றார்.

(ப-5,61)



## இது புதுசு

ஆண்களுக்
கான செருப்பு
வகைகள் சில சந்தைக்கு
அறிமுகமாகியுள்ளன. இவை
900 ரூபாவுக்கு விற்பனை
செய்யப்படுகின்றன.

## கொழுப்பைக் குறைக்கும் கொள்ளு வெங்காயத் தோசை



**தேவையான பொருள்கள் :**

கொள்ளு - 2 கோப்பை
அரிசி - 1/4 கோப்பை
காய்ந்த மிளகாய் - 5
உப்பு, எண்ணெய் - தேவையான அளவு
எண்ணெய் - 1 கரண்டி
சீரகம் - 1/4 கரண்டி
பெருஞ்சீரகம் - 1/4கரண்டி
கடுகு- 1/4 கரண்டி
உடைத்த உளுந்தம் பருப்பு - 1 கரண்டி
பெரிய வெங்காயம் - பாதி
இஞ்சி - சிறிய துண்டு
பெருங்காயம் - சிறிதளவு

**செய்முறை**

வெங்காயம், இஞ்சியை பொடியாக நறுக்கி கொள்ளவேண்டும். கொள்ளு, அரிசியினை சேர்த்து 4 முதல் 5 மணி நேரம் ஊற வைத்துக் கொள்ளவும்.

ஊற வைத்த பொருள்களை நன்றாக கழுவி அத்துடன் காய்ந்த மிளகாய் சேர்த்து கொர கொரப்பாக அரைத்துக் கொள்ளவும்.

பின்னர் அரைத்த மாவில் தேவையான அளவு உப்பு, வெங்காயம், தண்ணீர் சேர்த்து அடை மாவு பதத்தில் கலந்து அரை மணிநேரம் அப்படியே வைக்கவும்.

சட்டியை அடுப்பில் வைத்து எண்ணெய் ஊற்றி சூடானதும் சீரகம், பெருஞ்சீரகம், உளுந்தம் பருப்பு, இஞ்சி, பெருங்காயம் ஒன்றன் பின் ஒன்றாக சேர்த்து தாளித்து மாவில் சேர்த்து நன்றாக கலக்கவேண்டும்.

தோசைக் கல்லை அடுப்பில் வைத்து சூடானதும் மாவை ஊற்றி சுற்றி சிறிது எண்ணெய் ஊற்றி வெந்ததும் திருப்பி போட்டு வேக வைத்து எடுக்கவும்.



## உடல்வாகிற்கு ஏற்ப உடற்பயிற்சி செய்தல்

இன்று இல்லத்தரசிகள் முதல் முதியவர்கள் வரை எல்லாதரப்பினரும் ஜிம்முக்குப் படை எடுக்கிறார்கள். இப்போது ஜிம்முக்குச் செல்லும் பெரும்பாலானவர்கள் எடை குறைய வேண்டும் என்ற எண்ணத்தில்தான் செல்கிறார்கள். இலக்குகள் இல்லாமல் ஜிம்மில் நுழைந்து கண்ட கண்ட வொர்க் அவுட்ஸ் எல்லாம் செய்துகொண்டிருப்பதால் உங்களுக்கு உடல்வலிதான் பரிசாகக் கிடைக்கும்.

ஒவ்வொருவர் உடல்வாகும் ஒவ்வொரு மாதிரியானது. உங்கள் உடல்வாகின் இயல்பு எதுவெனத் தெரிந்து அதற்கு ஏற்ப திட்டமிடுங்கள். அடுத்தவரைப் பார்த்து செய்வது என்பது உடற்பயிற்சிகளைப் பொறுத்தவரை மோசமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

பொதுவாக, காலை நேரத்தில் உடற்பயிற்சி செய்வதே மிகவும் நல்லது. காற்றில் ஓசோன் அதிகமாக இருக்கும் நேரம் என்பதால் நுரையீரல் உற்சாகமாக இருக்கும். உடலும் சுறுசுறுப்பாக இருக்கும். ஜிம்மில் சிறப்பாகச் செயல்பட முடியும். காலையில் செய்ய நேரம் இல்லை என்றால் மாலையில் வொர்க் அவுட் செய்வது நல்லது. வொர்க் அவுட் செய்யும் முன் வெறும் வயிற்றில் இருப்பது நல்லது. குறைந்தபட்சம் சாப்பிட்ட ஒரு மணி நேரம் கழித்த பிறகு வொர்க் அவுட் செய்யலாம்.

ஜூஸ் போன்ற பானங்கள் பருகியிருந்தால் ஒரு அரை மணி நேரம் கழித்துச் செய்யலாம். ஹெல்த் ட்ரிங்ஸ் சாப்பிடுபவர்கள் ஜிம் ட்ரெய்னரின் பரிந்துரைப்படி செயல்படுவது நல்லது. ஜிம்முக்குச் செல்லும்போது உடலைப் பிடிக்காத தளர்வான உடைகள், ட்ராக் சூட், கேன்வாஸ் ஷூ அணிந்து செல்ல வேண்டும். அதே சமயம் ஆடைகள் மிகவும் தொளதொளவென இருக்கவும் வேண்டாம். அது மெஷினில் உடற்பயிற்சி செய்யும்போது இடையூறாக இருக்கும்

வாக்கிங் செய்யத் தொடங்கிய முதல் நாளே ஒரு மணி நேரம் நடக்க வேண்டும் என்று தடாலடியாக இறங்காதீர்கள். முதலில் கால் மணி நேரம் நடந்து பழகுங்கள். இப்படி சிறிது சிறிதாக இலக்குகளை உருவாக்கும்போது உடலும் உடற்பயிற்சிக்குத் தோதாக மாறும். சிறு சிறு இலக்குகளில் எமக்குக் கிடைக்கும் வெற்றி எம்மை உற்சாகமாகச் செயல்பட வைத்து, தொடர்ந்து ஈடுபாட்டுடன் உடற்பயிற்சியில் ஈடுபட உதவும்.



## குழந்தை நிற்கஆரம்பிக்கும் போது கவனத்தில் கொள்ளவேண்டியவை

இதுவரை தவழ்ந்து கொண்டிருந்த உங்கள் குழந்தை நாற்காலி, மேஜையை பிடித்துக் கொண்டு எழுந்து நிற்க முயல்கிறதா? அப்படியானால் நீங்கள் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டிய குறிப்புகள் இவை:

- குழந்தை அனைத்தையும் ஆராய்ந்து, புரிந்துகொள்வதற்கு முயற்சிக்கும். இதனால் சில நேரம் குழந்தைக்கோ, மற்றவர்களுக்கோ காயம் ஏற்பட வாய்ப்பு உண்டு. அதனால், எதையும் எப்படி மென்மையாகத் தொடுவது என்பதைக் குழந்தைக்குக்கற்றுக் கொடுங்கள்.
- எதை வைத்து விளையாடலாம் எனத் தானே தேர்வு செய்து, அந்தப் பொருளை எடுத்துக் குழந்தை விளையாடும் பருவம் இது.
- தன் கையிலிருக்கும் பொருள்களைத் தூக்கி போட்டு, தூர எறிந்து விளையாடுவதன் மூலம் அடுத்து என்ன நடக்கும் என்பதைக் குழந்தை யூகிக்கத் தொடங்கும். பந்து போன்ற திரும்ப வராத பொருள்களையும் தூக்கி போட்டுப் பார்க்கும்.
- நீங்கள் குழந்தையிடம் அன்பு செலுத்துவதன் மூலம், குழந்தையும் மற்றவர்களிடம் அன்பு செலுத்தக் கற்றுக்கொள்ளும்.
- இப்போது குழந்தை தானாகவே எழுந்து நின்று, நடக்க முயற்சிக்கும். ஆனால் உங்கள் கண்காணிப்பு அத்தியாவசியம். இல்லையென்றால், காயம் ஏற்பட வாய்ப்பு அதிகம்.
- குழந்தையை மற்றவர் கவனிப்பில் விட்டுவிட்டு பெற்றோர் வெளியே செல்லும்போது, ஆரம்ப நாள்களில் குழந்தை பெரிதும் ஏமாற்றம் அடையும். இந்த நிலையில் குழந்தையை ஏமாற்றிவிட்டு வெளியே செல்வதைவிட, குறிப்பிட்ட நேரத்துக்குப் பின்னர் திரும்ப வந்துவிடுவேன் என்பதை விளக்கிவிட்டுச் செல்லுங்கள். குழந்தைக்கு அது புரியாது என்று நினைக்காமல், இதைச் செய்ய வேண்டும். காலப்போக்கில் நீங்கள் திரும்பி வந்துவிடுவீர்கள் என்பதை குழந்தை நம்பத் தொடங்கும்.
- குழந்தை, உங்களை எப்போதும் கவனித்துக் கொண்டே இருக்கும். நீங்கள் செய்வதை எல்லாம் செய்து பார்க்கும். அப்படித்தான் குழந்தை அனைத்தையும் கற்றுக்கொள்ளும்.
- நீங்கள் மீண்டும் மீண்டும் உச்சரிக்கும் வார்த்தைகளின் அர்த்தங்களைக் குழந்தை தெளிவாகப் புரிந்துகொள்ளும். வார்த்தைகளைச் சொல்லிய பிறகு, அந்த வார்த்தைக்கான அர்த்தத்தைச் செய்துகாட்டி விளக்கமும் கொடுக்கலாம்


## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 900 | 1000 | 1000 |
| நண்டு | 600 | 500 | 500 | 400 |
| கணவாய் | 800 | 900 | 800 | 1000 |
| பாரை | 600 | 600 | 600 | 700 |
| சுறா | 500 | 700 | 800 | – |
| சீலா | 500 | 400 | 500 | 400 |
| விளை | 600 | 400 | 500 | 600 |
| முரல் | 400 | 350 | 400 | 400 |
| கும்பிளா | 400 | 300 | 350 | 400 |
| கிளாக்கன் | 800 | – | 400 | – |
| ஓரா | 350 | 300 | 500 | 400 |
| திரளி | 250 | 200 | 200 | 100 |
| நகரை | 250 | 200 | 300 | – |
| சூடை | 150 | 150 | 120 | 150 |
| ஒட்டி | 200 | 200 | 300 | 300 |
| திருக்கை | 350 | 200 | 400 | 400 |
| மதனம் | 200 | 250 | 300 | – |
| கொய் | 150 | 100 | 80 | 100 |
| பாலை | 200 | 200 | 400 | 400 |
| வாளை | 150 | 200 | 350 | – |

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 100 | 80 | 120 | 50 |
| கத்தரி | 120 | 150 | 100 | 100 | 120 |
| மரவள்ளி | 60 | 50 | 40 | 40 | 40 |
| பயிற்றை | 120 | 150 | 150 | 120 | 160 |
| பாகல் | 250 | 240 | 200 | 200 | 250 |
| க.கிழங்கு | 60 | 60 | 50 | 80 | 50 |
| பெ.வெங்காயம் | 140 | 140 | 140 | 160 | 140 |
| சி.வெங்காயம் | 300 | 350 | 350 | 260 | 200 |
| பூசணி | 60 | 60 | 50 | 50 | 60 |
| தக்காளி | 100 | 150 | 50 | 60 | 80 |
| வாழைக்காய் | 80 | 70 | 80 | 60 | 60 |
| கீரை | 40 | 40 | 20 | 15 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 25 | - | 30 |
| ப.மிளகாய் | 160 | 200 | 120 | 120 | 200 |
| புடோல் | 100 | 70 | 80 | - | 80 |
| கோவா | 80 | 100 | 80 | 60 | 80 |
| வெண்டி | 120 | 100 | 100 | 100 | 100 |
| போஞ்சி | 200 | 180 | 180 | 180 | 180 |
| லீக்ஸ் | 200 | 200 | 200 | 180 | 200 |
| தேங்காய் | 85 | 80 | 100 | 100 | 70 |
| உ.கிழங்கு | 60 | 60 | 70 | 60 | 70 |
| தேசிக்காய் | 60 | 40 | 70 | 30 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 20 | 20 |
| கறிமிளகாய் | 270 | 250 | 200 | 180 | 280 |
| கரட் | 180 | 150 | 100 | 100 | 160 |
| முருங்கைக்காய் | - | - | - | - | - |



## தமிழில் உரையாடிய முரளி விஜய், ராகுல்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாவது இன்னிங்ஸில் முரளி விஜய் மற்றும் ராகுல் இருவரும் ஆடுகளத்தில் தமிழில் உரையாடிய காணொலி தற்போது வைரலாகி வருகிறது.

முரளி விஜய் தமிழர். ராகுலும் கர்நாடகத்தைச் சேர்ந்தவர். அவரும் தமிழில் நன்கு பரீட்சயமானவர். ராகுல் துடுப்பெடுத்தாடிக்கொண்டிருக்கும் போது முரளி விஜய் அவரை நோக்கி, 'மச்சான், இந்த ஓவர் எல்லாப் பந்தயும் உள்ளதான் போடுறாங்கள். மெல்ல...' என்று தெரிவிக்கிறார். இந்திய ஊடகங்கள் இந்தக் காணொலியை வெளிப்படுத்தியதை அடுத்து சமூக வலைத்தளங்க்ளில் இந்தக் காணொலி தற்போது மிகவும் ட்ரெண்ட். (ம)



## ஜோகோவிக் அபாரம்

ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில், ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றார் ஜோகோவிக்.

சேர்பிய வீர்ரான ஜோகோவிக்கை எதிர்த்து அமெரிக்க வீரர் டொனால்ட் மோதினார். ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் மூன்று செற்களையும் முறையே 6:1, 6:2, 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றார் ஜோகோவிக். (ம)

## ஒலிம்பிக் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜன. 18
நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்குட்ட விளை யாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் ஒலிம்பிக் அணி கிண்ணம் வென்றது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம் பெற்ற இந்த இறுதியாட்டத்தில் ஒலிம்பிக் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதியது. 3:0 என்ற கோல் கணக்கில் ஒலிம்பிக் அணி வெற்றிபெற்றது. (ம-23)

# சிம்பாப்வேயிடம் இலங்கை சரண்




முத்தரப்புத் தொடரில் நேற்று நடைபெற்ற சிம்பாப்வேக்கு எதிரான ஆட்டத்தில் இலங்கை அணி போராடித் தோல்வியடைந்தது. சிம்பாப்வேக்கு எதிரான தொடரை கடந்த வருடம் இழந்ததன் பின்னர் பதவியில் இருந்து விலகியிருந்தார் மத்தியூஸ். அவர் தலைமைத்துவத்தை மீண்டும் பெற்றுக்கொண்டதன் பின்னர் நேற்றைய ஆட்டத்திலேயே அணித் தலைவராகக் களமிறங்கியிருந்தார். இந்த ஆட்டத்தில் இலங்கை அணி தோல்வியடைந்தமை மத்தியூஸுக்குப் பெரும் ஏமாற்றமே.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத் தாடிய சிம்பாப்வே அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 290 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக ரசா 81 ஓட்டங்களையும், மசகட்சா 73 ஓட்டங்களையும், ரெய்லர் 38 ஓட்டங்களையும் குவித்தனர்.

பந்துவீச்சில் குணரத்ன 3 இலக்குகளையும், திசர பெரேரா 2 இலக்குகளையும், லக்மல் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணி 48.1 பந்துப்பரிமாற்றங்களில் 278 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்து 12 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. குசல் பெரேரா 80 ஓட்டங்களையும், திசர பெரேரா 64 ஓட்டங்களையும், மத்தியூஸ் 42 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சட்டர 4 இலக்குகளையும், யாவிஸ், கிரீமர் இரு வரும் தலா 2 இலக்குகளையும், ரசா, முசர்பானி இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றியிருந்தனர். (ம)



## றோயர் பெடரர் அபார வெற்றி

ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில், இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றார் சுவிற்சர்லாந்து வீரர் றோயர் பெடரர்.

நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் நடப்புச் சம்பியனும், பன்னாட்டுத் தரப்படுத்தலில் இரண்டாவது இடத்தில் உள்ளவருமான பெடரரை எதிர்த்து சுலோவேனிய வீரர் அல்ஜாஸ் மோதினார். 6:3, 6:3, 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதல் மூன்று செற்களையும் கைப்பற்றி நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றார் பெடரர். (ம)

## 3 ஆண்டுகளின் பின்னர் தொடரை இழந்தது இந்தியா

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான இரண்டாவது ஆட்டத்தில் தோல்வியடைந்ததன் மூலம் இந்திய அணி சுமார் மூன்று ஆண்டுகளின் பின்னர் டெஸ்ட் தொடரை இழந்துள்ளது.



இந்திய அணி கடந்த 2014 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரைப் பறிகொடுத்தது. அதன் பின்னர் இந்திய அணி 10 தொடர்களில் விளையாடி விட்டது. அவற்றில் 9 தொடர்களைக் கைப்பற்றியது. ஒரு தொடர் சமநிலையில் முடிவடைந்தது. தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரை இழந்ததன் மூலம் சுமார் 3 வருடங்களின் பின்னர் அந்த அணி டெஸ்ட் தொடர் ஒன்றைப் பறிகொடுத்துள்ளது. (ம)


# தொடரைப் பறிகொடுத்தது இந்திய அணி

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் படுதோல்வியடைந்து தொடரைப் பறிகொடுத்தது இந்திய அணி.

கடந்த 13ஆம் திகதி இந்த ஆட்டம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து சகல இலக்கு களையும் இழந்து 335 ஓட்டங்களைச் சேர்த்தது. அதிகபட்சமாக மக்ரம் 94 ஓட்டங்களையும், அம்லா 82 ஓட்டங்களையும், பிளாசிஸ் 63 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அஸ்வின் 4 இலக்குகளையும், இசாந் சர்மா 3 இலக்கு களையும் சமி ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி சகல இலக்குகளையும் இழந்து 307 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக கோக்லி 153 ஓட்டங்களையும், அஸ்வின் 38 ஓட்டங்களையும், பார்திவ் பட்டேல் 19 ஓட்டங்களையும் சேர்த்தனர்.



பந்துவீச்சில் மோர்கல் 4 இலக்குகளையும், மகாராஜ், பிளண்டர், ரபாடா, நெக்டி நால்வரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

28 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி, 258 ஓட்டங்களில் கட்டுப்படுத்தப்பட்டது.

பந்துவீச்சில் சமி 4 இலக்குகளையும், பும்ரா 3 இலக்குகளையும், இசாந் சர்மா 2 இலக்குகளையும், அஸ்வின் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

287 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய இந்திய அணி நேற்றுமுன்தின நான்காம்நாள் முடிவில் 3 இலக்குகளை இழந்து 35 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. புஜாரா 11 ஓட்டங்களுடனும், பார்திவ் பட்டேல் 5 ஓட்டங்களுடனும் இறுதி நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். 19 ஓட்டங்களுடன் ரண்அவுட் செய்யப்பட்டார் புஜாரா. பட்டேலும் 19 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். ரோகித் சர்மா 47 ஓட்டங்களைச் சேர்த்தாலும் மறுமுனையில் இலக்குகள் சரிய 151 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்து 135 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது இந்திய அணி. (ம)

# யங்ஹென்றிஸ், இளைஞர் கிண்ணத்தை கைப்பற்றின

யாழ்ப்பாணம், ஜன. 18

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில், பெண்கள் பிரிவில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியும், ஆண்கள் பிரிவில் சண்டிலிப்பாய் இந்து இளைஞர் அணியும் கிண்ணம் வென்றன.

சண்டிலிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இந்த இறுதியாட்டங்கள் இடம்பெற்றன.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் யங்ஹென்றிஸ் அணி வெற்றிபெற்றது.

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் நியூஸ்ரார் அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்துஇளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் இந்து இளைஞர் அணி வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. (ம-23)



சென். ஜோன்ஸ் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட கூடைப் பந்தாட்டத்திடல் திறப்பு விழா, சென்.ஜோன்ஸ் கல்லூரி அதிபர் என்.ஜே.ஞானப்பொன்ராஜா தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெற்றது. இதில் முதன்மை விருந்தினராக வட மாகாணத்தின் முன்னாள் கல்வி அமைச்சர் குருகுலராஜா கலந்து கொண்டார். (ம-23)

# ஸ்ரோக்ஸ் மீது வழக்குப் பதிவு

இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரர் பென் ஸ்ரோக்ஸ் மீது, பொலிஸாரால் உத்தியோகபூர்வமாகக் குற்றச்சாட்டுப் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பொது அமைதியைக் குலைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர் என, ஸ்ரோக்ஸ் மீதும் மேலும் இருவர் மீதும், இவ்வாறு குற்றச்சாட்டுப் பதியப்பட்டுள்ளது. கடந்தாண்டு செப்டெம்பர் 25ஆம் திகதி, பிறிஸ்டல் நகரில் இரவுக் களியாட்ட விடுதிக்கு வெளியே இடம்பெற்ற மோதல்



தொடர்பாகவே, ஸ்ரோக்ஸ் மீது குற்றச்சாட்டுப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் ஸ்ரோக்க்கு 3 ஆண்டுகள் சிறைத்தண்டனை அல்லது பெரும்தொகை தண்டம் விதிக்கப்படும்.

இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் ஸ்ரோக்ஸ் மீது விசாரணை நடைபெற்று வந்ததால் முடிவடைந்த ஆஷஸ் தொடருக்கான இங்கிலாந்து அணியில் ஸ்ரோக்ஸ் சேர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# பிளாசிஸ் 3,000

பன்னாட்டு டெஸ்ட் அரங்கில் 3 ஆயிரம் ஓட்டங்கள் என்ற அடைவை நிறைவுசெய்தார் தென்னாபிரிக்க அணியின் தலைவர் பிளாசிஸ்.

நேற்று முடிவுக்கு வந்த இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாவது இன்னிங்ஸில் பிளாசிஸ் 48 ஓட்டங்களைச் சேர்த்தார். அவர் 36 ஓட்டங்களை எடுத்திருந்தபோது பன்னாட்டு டெஸ்ட் அரங்கில் 3 ஆயிரம் ஓட்டங்கள் என்ற அடைவைஎட்டினார். 47ஆவது டெஸ்ட் ஆட்டத்தில் பிளாசிஸ் இந்த அடைவை எட்டினார். இவற்றில் 7 சதங்களும் 16 அரைச்சதங்களும் அடங்குகின்றன. (ம)





## வேலையாள் தேவை

யாழ் நகரில் C1 தரத்திலான நிறுவனத்தில் shuttering வேலைக்கு ஒப்பந்தம் / சம்பள அடிப்படையில் வேலையாள் தேவை.

தொடர்பு :- 076 8272 552
076 8231 440

## SPOKEN ENGLISH
### WITH DIPLOMA CERTIFICATE

O/L எழுதிய மாணவர்கள்,பல்கலைக்கழக நுழைவு மாணவர்கள்,தொழில்புரிவோர்
வெளிநாடு செல்வோர், இல்லத்தரசிகள், பட்டதாரிகள்
விற்பனை மற்றும் வியாபார பிரதிநிதிகள் இணையமுடியும்

பாடப்புத்தகங்கள், DVDகள் மற்றும் சான்றிதழ் இலவசம்

சனி,ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் – 20.01.2018
1. காலை 08–10 3.மதியம் 01–03
2. காலை 10–12 4.மாலை 03–05

வாரநாள் பிரிவுகள் (திங்கள்,புதன்) ஆரம்பம் – 22.01.2018
1. காலை 08–10 2. காலை 10–12

ஆங்கிலம் கதைக்க மற்றும் பரீட்சைகளில் தேர்ச்சிபெற விரும்பும் ஒவ்வொருவரும் கற்க வேண்டிய பயிற்சிநெறி

SAAMSON
403, மணிக்கூட்டு வீதி, பெருமாள் கோயிலடி, யாழ்நகர்,
021 320 3313 077 1570 486

## மகா சிவராத்திரியை யொட்டிய தென்இந்திய யாத்திரை

ஆரம்பம்: 10.02.2018 நாள்கள் : 6

**தரிசிக்கும் இடங்கள்:**

திருப்பதி. அலமேலு மங்கா. கானகஸ்திரி. திருத்தணி. திருவெண்ணாமலை. பொற்கோவில். வடபழனி. கபாலீஸ்வரர். ஆறு படை முருகன் (ஒரே இடத்தில்) அன்னலெட்சுமி. மேல் மருவத்தூர். காஞ்சிக்காமாட்சி. ஏகாம்பரேஸ்வரர். வரதராஜப்பெருமாள் உட்பட பல்வேறு ஆலயங்களையும் தரிசிக்கலாம். சென்னையில் ஒரு நாள் சொப்பிங் விவரங்களை கேட்டறிந்து பதிவு செய்க. (சிவராத்திரி விரதம் திருவெண்ணாமலையில் ஏற்பாடு செய்யப்படும்)

**பெற்றுக் கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை:**

இருவழி விமானரிக்கட். AC வாகனவசதி. மூன்றுவேளை சுத்தமான சைவ உணவு. குடிநீர். 2பேருக்கு கட்டில் மெத்தை. வெஸ்ரன் கொமட். குளியலறை இணைந்த அறைகள். காப்பி. ரீ மேலும் யாழ்.கொழும்பு யாழ் வாகன வசதி ஒழுங்கு செய்து தரப்படும். விருப்பமுடையவர்கள் மேலும் விவரங்களை கேட்டறிந்து பதிவு செய்யவும்.

யாழ். கொழும்பு வரவும் போகவும் இலவசமான வாகன ஒழுங்கு செய்து தரப்படும்.

கலாநிதி.T.ஸ்ரீரெங்கநாதன் மகன் - ராஜன்
59, 3/6 செட்டியார் தெரு, கொழும்பு - 11
077 768 0102/ 077 736 2154

## SHAMROCK

ஈச்சமோட்டை
A/L 2020
கணக்கீடு - S. தவா
B.st - S.சிவராஜா
பொருளியல் - பிரதாப்

சிறந்த பெறுபேறுகளுக்கு குறைந்த கட்டணத்தில் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 021 493 1111




# வடகொரியாவில் இருந்து ஒலிம்பிக்கிற்கு 550 வீரர்கள்

தென்கொரியாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள குளிர்கால ஒலிம்பிக் தொடரில் தனது நாட்டின் சார்பாகப் பங்கேற்க 550 வீரர்களை அனுப்பியது வடகொரியா.

தென்கொரியா நாட்டின் பியங்சாங் நகரில் அடுத்த மாதம் 9ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை குளிர்கால ஒலிம்பிக் தொடர் நடைபெறவுள்ளது. தென்கொரியாவின் தீவிர பகை நாடான வடகொரியா இந்த ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்குமா? என்ற எதிர்பார்ப்பு மேலோங்கிய நிலையில் புத்தாண்டு அன்று தொலைக்காட்சியில் உரையாற்றிய வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன், தென்கொரியாவில் நடைபெறும் குளிர்கால ஒலிம்பிக் தொடருக்கு வடகொரியா தனது அணியை அனுப்பும் எனத் தெரிவித்திருந்தார்.

இதற்கு தென்கொரியாவும் விரும்பம் தெரிவித்ததை அடுத்து இருதரப்புப் பேச்சுக்களும் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. பேச்சு வெற்றியளித்ததை அடுத்து சுமார் 550 வீரர்களை தென்கொரியாவுக்கு அனுப்பவுள்ளதாக வடகொரியா நேற்று அறிவித்தது.

(ம)


## மரண அறிவித்தல்

### திருமதி கனகம்மா கோபாலபிள்ளை



வேலணை கிழக்கு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், நாரந்தனையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா கோபாலபிள்ளை (17.01.2018) புதன்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் தங்கமுத்து தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான பசுபதிப்பிள்ளை பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கோபாலபிள்ளையின் அன்புமனைவியும் ஜெயகுமார் (World Vision, கொழும்பு), ஜெயந்தி (தபாலதிபர், கொட்டாஞ்சேனை), ஜெகதீஸ்குமார் ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், காமாட்சி, ஆறுமுகம் மற்றும் செல்லமுத்து, செல்லம்மா, சிவமணி (கிளி), திருக்கேசுவரி ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான பசுபதிப்பிள்ளை, வேலாயுதபிள்ளை, சுப்பையா அரூபவதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற ஞானசூரியர் மற்றும் பவுளின் ஆகியோரின் சம்மந்தியும் நிஷாந்தினி, மணிவண்ணன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆரணி, மிதுலா, மிதுசன், மணிமாறன், வைஷ்ணவி, ஜோஸ் ஆகியோரின் அன்புப்பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.01.2018) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 2.30 மணியளவில் நாரந்தனை இந்து பொது மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாரந்தனை வடக்கு,
ஊர்காவற்றுறை.

தகவல்:
குடும்பத்தினர்.
077 839 3883(மகன்)
077 106 3728(மகள்)

(CS 13003) (8, 17)

## 9வது யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
## Jaffna International Trade Fair

வடக்கிற்கான உங்களது நுழைவாயில்

JITF 2018
9TH JAFFNA INTERNATIONAL TRADE FAIR

26 27 28
ஜனவரி / January
10.00 am - 8.00 pm
யாழ்ப்பாணம் மாநகரசபை மைதானத்தில்
Municipal Ground

+94 71 7488107



MAIN SPONSOR S-lon
OFFICIAL PARTNERS
MOBILE TELECOMMUNICATION ROOFING FOOD PRINT MEDIA CONTRACTION SOLUTION PROVIDER ELECTRONIC MEDIA LUBRICANT LIFESTYLE
ANTON INSEE Mobil
www.jitf.lk
jitf.lk
ORGANIZED BY IN ASSOCIATION WITH SUPPORTED BY ENDORSED BY PARTNER COUNTRY


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.01.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.